GOKULAM ஆகஸ்ட் '93 ரூ. 3.00

கோகுலம்



AHEAD OF ACTION




Action has always been part of my success.
Through all the excitement, through all the glory and acti
action® always keeps me ahead.



opener SKIPPER

SHOES FOR THE NEW GENERATION.

action®
SHOES



கோகுலம்

1993
ஆகஸ்ட் மாத இதழ்
மலர் : 11 இதழ் : 7



அருமைச் சிறுவர் சிறுமியரே,

எல்லோருக்கும் அன்பு வணக்கம்.

ஆகஸ்ட் மாதம் நமது நாட்டின் 46-வது சுதந்திரத் திருநாள். அன்னியர் ஆதிக்கத்தில் இருந்து நமது இந்தியத் திருநாடு இந்த நல்ல நாளில்தான் சுதந்திரம் பெற்றது. இது ஏதோ ஓரிரு நாட்களில் முயன்று பெற்றது அல்ல. நமது தலைவர்கள் குடும்பத்தையும், சுக வாழ்வையும் துச்சமாக மதித்து, தியாகம் செய்யப் பெற்றதாகும். இதற்குக் கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு கால வரலாறு உண்டு. இந்த வரலாற்றை நீங்கள் அறிந்து வைத்து, அந்த வீரத் தியாகிகளுக்கு அஞ்சலி செய்வது அவசியம். அவர்களெல்லாம் அரும்பாடுபட்டு வாங்கித் தந்த சுதந்திரத்தைக் காக்க எதையும் தியாகம் செய்வோம் என்ற எண்ணத்தை மனத்தில் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

கடந்த இரு மாதங்களாக உங்களிடமிருந்து ஆயிரக் கணக்கில் கடிதங்கள் வந்துள்ளன. விடுமுறையில் நீங்கள் கோகுலத்தை மறக்கவில்லை என்பது புரிகிறது. இவற்றில் பல கடிதங்கள் கோகுலத்திற்கு எழுதுவதைப் பற்றி. ''கதை, கட்டுரை, துணுக்குகள், நகைச்சுவை எழுதி அனுப்பும் போது படமும் போட்டு அனுப்ப வேண்டுமா?'' என்று பலர் கேட்கிறார்கள். படங்களை நீங்கள் போட்டு அனுப்ப வேண்டாம். நாங்களே போட்டுக் கொள்வோம். இன்னும் சிலர் தொடர்கதை எழுதியனுப்பலாமா என்று கேட்டிருக்கிறார்கள். முதலில் சிறுகதைகள் எழுதி வெளியாகி அனுபவம் பெற்ற பிறகு தொடர்கதை எழுத முயலுங்கள். சில ஆசிரியர்கள், ''பாட்டில் பாரதி'' ''பாட்டில் கம்பன்'' என்று பெரிய பெரிய கவிதைப் படைப்புகளை அனுப்பியிருக்கிறார்கள். கோகுலம் ஒரு மாதப் பத்திரிகை. இதில் இப்படிப்பட்ட நீண்ட கவிதைப் படைப்புகளை வெளியிட இயலாது. கல்லூரிப் பேராசிரியர்கள் சிலர் அறிவியல் பகுதி என்ற தலைப்பில் நிறைய எழுதியனுப்பியிருக்கிறார்கள். இவர்களுக்கு எல்லாம் ஒன்று கூற விரும்புகிறேன். கோகுலம், சிறுவர் விரும்பிப் படிக்கும் இதழ். பள்ளிப் பாட வகுப்புக்கும் கோகுலத்திற்கும் வித்தியாசம் இருக்க வேண்டும். அறிவியல் தேவை. அதற்காக கோகுலத்தையே இன்னொரு அறிவியல் பாட வகுப்பாக மாற்றி விடலாமா? கோகுலத்தை உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தி, காசு கொடுத்து வாங்கிப் படிக்க வையுங்கள்.

அன்புடன்,

(கௌரவ ஆசிரியர்)



உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.

கோகுலம்

ஆகஸ்ட்'93

இந்த இதழில்...










★ மந்திரத் தீப்பெட்டி
- பக்கம் 40



★ முதலில் தொட்டது
- பக்கம் 51

இடுப்பில் கச்சை அணிந்த கராத்தே சிறுவரின் 'ஹ....ஹூ' சப்தம்... 'தா.....தை' பரதம் கற்போரின் ஜதி.... மிருதங்கம், வீணை, கிடார்... இவ்வளவும் நம்மை ஓர் வித்தியாசமான உலகத்திற்கு அழைத்துப் போகின்றன.....



● ''நல்லா பாருங்க! நாங்களே செஞ்ச வீடு! பூந்தொட்டி!''

விரல்கள் அசைய மலர்கள் சிரிக்கும்!

செலவு இல்லாமல் எந்த ஓர் கலையையும் கற்க முடியாது. கருவிகள் இல்லாது இசை கற்பதானால் கூட மாதம் முப்பது ரூபாய் கட்டணம் இல்லாது வாய்ப்பாட்டைக் கற்க இயலாது. பரதம், ஓவியம், இசைக் கருவிகள், கராத்தே, கைவேலைக் கலைகள் என்றால் இன்னும் அதிகமாகும். ஓரளவாவது வசதி உள்ளவர்களால் மட்டுமே இது முடியும். குறைந்த மாத வருவாய் உள்ள ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் இவற்றை எண்ணி ஏக்கப் பெருமூச்சு விடுவதுடன் சரி.

இத்தகைய ஆர்வம் மிக்க ஏழைக் குழந்தைகளின் கனவை நனவாக்க சென்னையில் ஓர் அமைப்பு பாடுபட்டு வெற்றி கண்டு வருகிறது என்ற செய்தி பலருக்கும் தெரியாது. அந்த அமைப்புதான் ''ஜவஹர் சிறுவர் இல்லம்.''

நெரிசல் மிகுந்த அண்ணா சாலையின் ஆரம்பத்தில், இராஜாஜி மண்டபத்திற்குச் செல்லும் மிகப் பெரிய இரும்பு கேட்டைக் கடந்தால் இராஜாஜி மண்டபத்திற்கு முன்னாலேயே இந்த இல்லத்தைக் காணலாம்.

மைதானத்தில் இடுப்பில் கச்சை

அணிந்த கராத்தே கற்கும் சிறுவர் சிறுமியரின் 'ஹ...ஹூ' சப்தம். 'தா...தை' என்று பரதம் கற்கும் 'ஜதி' சப்தம். மிருதங்கம், வீணை, கிடார் கருவிகளைக் கற்பவர்கள் எழுப்பும் ஓசை - இவ்வளவும் சேர்ந்து நம்மை வித்தியாசமான ஓர் உலகத்திற்கு அழைத்துக் கொண்டு போகின்றன. தாழ்வாரத்தைக் கடந்து உள்ளே போகிறோம். கூடத்தின் இரு பக்கமும் சிறுவர் சிறுமியர்கள் அமைதியாக அமர்ந்து ஓவியம் தீட்டிக் கொண்டிருந்தார்கள். அதற்கு அடுத்த கூடத்தில் விதவிதமான கைவினைப் பொருள்களைக் குழந்தைகள் செய்து கொண்டிருந்தார்கள்.

ஒரு சிறுவன் வீட்டைப் பாதி முடித்திருந்தான். கையில் எடுத்துப் பார்த்தோம். வீடு, கிணறு, அவுட் ஹவுஸ், காம்பவுண்ட் என்று கச்சிதமாக இருந்தது வீடு.


"இது முழுக்க முழுக்க ஐஸ்கிரீம் குச்சியால் செய்யப் பட்டது" என்று நம்மை அயர வைக்கிறார் பயிற்சியாளர் குப்புராஜ்.

"இந்த வீடு மட்டும் அல்ல, இங்கு குழந்தைகள் செய்யும் எல்லாக் கைவினைப் பொருள்களுமே waste materials எனப்படும் கழிக்கப்பட்ட பொருள்களால் செய்யப்படுபவையே. இதோ இந்த சுவர் அலங்காரத் தட்டு, பழைய குக்கர் கேஸ்கட், தீக்குச்சி, ஐஸ்கிரீம் குச்சி, பிளாஸ்டிக் ஒயர்களால் செய்யப்பட்டது. இந்த ஒட்டகச் சிவிங்கி, தேர் படங்கள், சீவி எறியப்பட்ட வாழைப் பட்டையைக் காயவைத்து ஒட்டி வண்ணம் கொடுக்கப்பட்டவை. இந்தப் பிள்ளையார் படம், மரத்தின் படம், நாய்க்குட்டி எல்லாம் தீக்குச்சிகளைப் பொடித் துண்டங்களாக வெட்டி ஒட்டி வண்ணமிடப் பட்டவை. இந்தச் சுவரை அலங்கரிக்கும் தேர் இழுக்கும் காட்சி, வீணாகும் மரத் துண்டுகள், வளைத் துண்டுகள், ஆகியவைகளைக் கொண்டு கூட்டு முயற்சியாகக் குழந்தைகளால் செய்யப் பட்ட 'பஜிக்' ஆர்ட் வகைப் படைப்பு. இந்தக் கண்கவர் படகு கூட ஐஸ்கிரீம் குச்சிகளால் ஆனதுதான்" என்றார் குப்பு ராஜ்.

அடுத்த அறையில் வண்ண பிளாஸ்டிக் ஒயர்களால் கண்கவர் மலர்கள், மேஜை மேல் வைக்கும் பூச் சாடிகள், மேஜை விரிப்புகள், வண்ண ஃபோம் ஷீட்டால் ஆன பொம்மைகள், தபால் பெட்டிகள், தபால்களை வைக்கும் தொங்கு பைகள் என்று கணக்கில்லாத கைவினைப் பொருள்களைக் குழந்தைகள் செய்து கொண்டிருந்தார்கள்.



● "பக்கத்துல இருக்காரே, இவர்தான் கத்துக் குடுத்தார்!"



● குழந்தைக் கவிஞர் பரிசு வழங்குகிறார். (படம் : நன்றி : ஜவஹர் இல்லம்)

''கலை ஆர்வமுடைய குழந்தைகளுக்கு உண்மையாகவே இது ஒரு சொர்க்கம்தான். ஏட்டுக் கல்வியின் சுமையால் அவர்களது கலை ஆர்வம் நசுக்கப்படும் போது, குழந்தைகளின் கலை ஆர்வத்தை வளர்க்கவென்றே இப்படி ஓர் அமைப்பை நடத்தி வருவது பெரிய இமாலயச் சாதனைதான்'' என்று ஜவஹர் இல்லத்தின் கண்காணிப்பாளர் தங்க நாயகத்தைப் பாராட்டினோம்.

''இதற்கெல்லாம் பயிற்சிக் கட்டணம் எப்படி?''

''நாங்கள் குழந்தைகளை இரண்டு பிரிவாகப் பிரித்திருக்கிறோம். முதல் பிரிவில் ஐந்து முதல் பத்து வயதிற்குட்பட்டவர்கள். இவர்களுக்கு ஆண்டுக் கட்டணம் பதினைந்து ரூபாய்தான். இரண்டாவது பிரிவு பதினொன்று முதல் பதினாறு வயதிற்குட்பட்டவர்களுக்கானது. இவர்களுக்கு ஆண்டுப் பயிற்சிக் கட்டணம் முப்பது ரூபாய்தான்.''

''உண்மையாகவே ஏழைக் குழந்தைகள் எண்ணிக் கூடப் பார்க்க முடியாத பரதம், வீணை, கிடார், கராத்தே பயிற்சிகளைக் கூட இவ்வளவு குறைந்த பயிற்சிக் கட்டணத்தில் அளித்து வருவது அதிசயமாகத்தான் இருக்கிறது!''

''குறைந்த பயிற்சிக் கட்டணம் என்றதும் குறைவாக எண்ணி விடாதீர்கள். இங்குள்ள ஆசிரியர்கள் திறமை மிக்கவர்கள். இதை ஒரு தொண்டாகக் கருதி மாணவர்களுக்குக் கற்றுத் தருகிறார்கள். அதோடு ஏதோ வசதி இல்லாத குடும்பத்துக் குழந்தைங்கதான் இங்கே வராங்கன்னு நினைக்காதீங்க. ஐ.ஏ.எஸ். அதிகாரிங்க, அரசாங்க அதிகாரிங்க வீட்டுக் குழந்தைகளும் இங்கே வர்றாங்க. காரணம், இங்கே பயிற்சி அளிக்கும் ஆசிரியர்களின் திறமை. அதோட பள்ளி நேரத்திற்கு இடைஞ்சலா இல்லாத எங்கள் பயிற்சி நேரம். தினமும் மாலை மூன்று மணியிலிருந்து ஆறு மணி வரை. அதோட சனி, ஞாயிறு களில் காலை, மாலை என்று அவர்களுக்கு வசதியான நேரத்தில் பயிற்சி தர்றோம்.''

''எங்கள் ஜவஹர் இல்லத்தில் பயிற்சி பெற்ற பலர் இன்று பெரிய நிலையில் இருக்கிறார்கள். திரைப்பட நடிகர் பாண்டியராஜன் எங்கள் நிலைய மாணவராக இருந்தவர். இங்கு, ஓவியப் பிரிவில் பயிற்சி அளிக்கும் பேராசிரியர் அருளரசன் அவர்கள், இங்கு ஓவியப் பயிற்சி பெற்றவரே. இன்று அவர் ஓவியக் கல்லூரியில் பேராசிரியராக இருக்கிறார். தன் திறமைக்கு ஊக்கமளித்த இடம் என்ற உணர்வோடு, இங்குள்ள குழந்தைகளுக்கு ஓவியப் பயிற்சி தருகிறார்.''

தங்கநாயகம் மிகவும் பெருமைப்பட்டுக் கொண்டார். நியாயமான பெருமைதானே?

''இன்று கைவினைப் பயிற்சி (crafts) அளிக்கும் நானே கூட இந்த இல்லத்தின் பழைய மாணவன்தான்'' என்று அடக்கமாகக் கூறிக் கொண்டார் குப்புராஜ்.

ஆண்டுதோறும் குடியரசு தினத்தன்று நடைபெறும் அணிவகுப்பில் இந்த நிலையத்தைச் சேர்ந்த பரதம், இசை, நாட்டுப்புறக் கலைகள் பயிலும் குழந்தைகள் கலந்து கொண்டு பல

ஆண்டுகளாகத் தொடர்ந்து பரிசு பெற்று வருகிறார்கள். அகில இந்திய அளவில் நடைபெறும் கலை பண்பாட்டு நிகழ்ச்சிகளில் இவர்களுக்குக் கட்டாயம் இடம் உண்டு. பல பரிசுகளைப் பெற்றிருக்கிறார்கள். இந்த நிலையத்தின் குழந்தைகள் வரைந்த பல ஓவியங்கள், உலகம் முழுவதும் உள்ள பல பிரபல மானவர்களின் இல்லங்களை இன்னமும் அழகு செய்து வருகின்றன. காலத்தின் அவசியத்தை உணர்ந்து கம்ப்யூட்டர் பயிற்சியும் தருகிறார்கள். விடுமுறையின் போது மூன்று மாதங்களுக்குத் தீவிர முழு நேரப் பயிற்சி வகுப்புகளை நடத்துகிறார்கள். இந்த வகுப்புகளில் சேரவென்றே வெளியூரில் இருந்து தங்கள் உறவினர் வீடுகளுக்குக் குழந்தைகள் வருகிறார்களாம்!

ஜவஹர் இல்லத்தின் ஆண்டு விழாவின் போது கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியர் அமரர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் தலைமை வகித்து, ஓவியப் போட்டியில் பரிசு பெற்ற குழந்தைகளுக்குப் பரிசு வழங்கிப் பாராட்டியிருக்கிறார் என்றால் வேறு என்ன பெருமை வேண்டும்?

சிறுவர்க்கான இதே போன்ற கலைப் பயிற்சி இல்லங்கள் வெளியூர்களிலும் இரண்டொரு இடங்களில் நடந்து வருகின்றன. இதை ஒரு தொண்டாக நடத்தி வரும் தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறையை எத்தனை பாராட்டினாலும் தகும்.

– ரே

அட்டை வண்ணப்படம், உட்பக்கப் படங்கள் : கோபிநாத்

அட்டையில் எஸ். ஆனந்த் கணேஷ், ஆர். ஹரிணி.

கோடை விடுமுறைப் போட்டி - 2 - முடிவு

அப்பாடி! ஒரு வழியாகக் கலந்து கொண்ட 2748 பேர் அனுப்பிய விடையைச் சரிபார்த்து முடிப்பதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது. இத்தனை பேர் கலந்து கொண்டும் ஒருவர் கூட சரியான விடையை அனுப்பவில்லை என்பது முக்கியமான விஷயம். எல்லோருமே கரிகாலன், தனுஷ்கோடி, இராமலிங்கம், வைர மணி, பாண்டி முத்துவில் தடுக்கி விழுந்து விட்டார்கள். எனவே ஒரு தவறு செய்தவர்களில் குலுக்கிப் போட்டு மூன்று பேரைத் தேர்ந்தெடுத்தோம். இரண்டு தவறு செய்தவர்களில் குலுக்கிப் போட்டு ஐந்து பேரைத் தேர்ந்தெடுத்தோம்.

ஒரு தவறு செய்து ரூபாய் பதினைந்து பரிசு பெறுவோர் :

1. கே. கௌரி சங்கர், புதுடில்லி - 18, 2. சஃபி சலீம், சென்னை - 14, 3. த. இளங்கோவன், பழவேற்காடு அஞ்சல்.

இரு தவறு செய்து ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1.ஏ. ஹரிணி, தஞ்சை - 6, 2. ரா. பார்த்திபன், தருமபுரி, 3. ஏ. பார்த்தசாரதி, சோளிங்கர்,. 4. எஸ். உமா தேவி, நாட்டரசன் கோட்டை, 5. ஆர். மனோகரன், பட்டுக்கோட்டை - 2.

போட்டியில் கலந்து கொண்டு சிறப்பித்துள்ள ஆயிரக்கணக்கான வாசகர்களுக்கு நன்றி. பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு.

சரியான விடை : 18,1 - தனுஷ்கோடி, 12,2 - காலக்கண்ணன், 3,7 - கார்மேகம், 14,4 - ஏழுமலை, 15,5 - ராமலிங்கம், 22,8 - ராமச்சந்திரன், 9,6 - நாகராஜன், 10,19 - பாண்டிமுத்து, 13,11 - கரிகாலன், 16,20 - இருதயராஜ், 17,24 - வைரமணி, 23,21 - வேணுகோபால்.

பிருந்தாவனக் கவியரங்கம்

எங்கள் தோட்டப் பூக்கள்

சின்னச் சின்ன பூக்கள்
சிங்காரப் பூக்கள்
வண்ண வண்ணப் பூக்கள்
வாவென் றழைக்கும் பூக்கள்




எங்கள் தோட்டப் பூக்கள்
எழில் மிகுந்த பூக்கள்
தங்க அழகிப் பூக்கள்
தனித்த பெருமைப் பூக்கள்

- பா. சாந்தி.

ஒருமைப்பாடு

தேசம் வளர்ப்போம் வாருங்கள்
சிந்தை இணைந்தே சேருங்கள்
நேசம் கொழிக்கும் வழியெல்லாம்
தேசம் செழிக்கும் வழியாகும்!

பிறந்த நாட்டின் பெருமையினைப்
பேசிப் பேசிக் கழிக்காமல்
சிறந்த பணிகள் செய்திடுவோம்
செயலில் வெற்றி எய்திடுவோம்!



ஒருமைப் பாட்டால் நாட்டுநலம்
உயர்ந்து வளரும் நாள்தோறும்
ஒருமைப்பாடே நல்ல வழி
ஒருமைப் பாடே வெல்லும் வழி!

- ஆர். சத்தியகுமார்.

மீன் குட்டி!

சின்னச் சின்ன மீன்குட்டி
சிந்தை கவரும் மீன் குட்டி
வண்ண வண்ணத் தொட்டியிலே
வளைந்து ஓடும் மீன்குட்டி!



பொட்டுக்கடலை, அப்பளத்தை
பிட்டுப் பிட்டுப் போட்டிடுவேன்.
எட்டிப் பிடித்துத் தின்றிடுமாம்
எங்கள் வீட்டு மீன்குட்டி.

தங்க வண்ண மேனியும்
தகதகக்கும் கண்களும்
இங்கும் அங்கும் வெட்டியே
இடைவிடாத ஓட்டமும்

எங்கள் வீட்டு மீனைப் போல்
எந்த வீட்டில் இருக்குது?
தின்னமாட்டேன் நான் அதை!
தினமும் கண்டு மகிழுவேன்!

- ஸ்ரீநிவாஸ பிரபு



சர்க்கஸ்

நகரின் நடுவே கூடாரம் - அதில்
நடக்குது சர்க்கஸ் நாம் மகிழ
சக்கரம் உருட்டுது யானைக்குட்டி - புது
சைக்கிள் ஓட்டுது குரங்குக்குட்டி
கிளிகள் குதித்து ஆடிடவே - அழகுக்
கூண்டுடன் உருட்டுது நாய்க்குட்டி.
கழியில் நடக்குது மலைக்கரடி - நன்கு
கால்களை உயர்த்துது குதிரைக்குட்டி
குதிரையில் ஏறுவார் கோமாளி - உடன்
கூடவே தாவுவார் குரங்கண்ணன்
புதுமை காட்டும் நாயார்தான் - அவர்
புதிராய் ஏனோ வரவில்லை!

- நா. கோபால்.

பிருந்தாவனக் கவியரங்கம்



குருவே எனக்கு....

குருவே எனக்கு உயிராவார்
கும்பிடும் தெய்வம் அவராவார்
அறிவை வளர்க்கச் செய்திடுவார்
ஆற்றல் பெருக வைத்திடுவார்!

வாழும் வழிமுறை காட்டிடுவார்
வறுமை ஓட வழி செய்வார்.
வீழும் போது உயர்த்திடுவார்
வித்தகனாக்கி மகிழ்ந்திடுவார்!

ஒழுக்கம் கற்றுத் தந்திடுவார்
உயரும் வழிகள் சொல்லிடுவார்!
பிழைக்கும் பாதை காட்டிடுவார்!
பெருமை சிறக்க வாழவைப்பார்!

- க. ஜெயகாந்தம்.

கோபுரம்

கண்ணைக் கவரும் கோபுரம்
கோயில் முன்னே கோபுரம்
விண்ணை அளக்கும் கோபுரம்
வியக்க வைக்கும் கோபுரம்

பிருந்தாவனக் கவியரங்கம்



மேலே ஏறிப் போகவே
மெத்தைப் படிகள் உள்ளதாம்
கால் வலிக்க ஏறினால்
கோவில் அழகைக் காணலாம்.

அடுக்கி வைத்த வரிசையாய்
அழகு மிக்க வீடுகள்
இடை இடையே வீதிகள்
இன்ப மளிக்கும் காட்சிகள்.

ஊருக்கு ஓர் கோபுரம்
உயர்ந்த அழகு கோபுரம்
ஊரின் நடுவே அமைந்ததால்
உனக்கும் எனக்கும் மகிழ்ச்சியே!

- எம். ஹரிகிருஷ்ணா.

உழைப்பால் உயர்வோம்.

உயர்ந்த மலைபோல் நாமும்
உழைப்பால் உயர்ந்திட வேணும்!
அயர்ந்த மக்களை நாமும்
அன்பாய் எழுப்பிட வேணும்!

நற்குணம் கொண்டோரை நாமும்
நண்பராய் ஏற்றிட வேணும்!
கற்குணம் கொண்டோரை நாமும்
கனிவால் மாற்றிட வேணும்!



நாட்டை குலைக்கும் சக்திகளை
நன்கு அழித்திட வேணும்!
காட்டை அழிக்கும் கயவர்களை
கருத்தாய்த் திருத்திட வேணும்!

- வே. பூங்குன்றன்.

பலூன்!

வண்ண வண்ண பலூன்
வளைந்த உருண்டை பலூன்
கண்ணைக் கவரும் பலூன்
காற் றடைத்த பலூன்!




சிறுவர் வாங்கும் பலூன்
சிந்தை கவரும் பலூன்
சிரித்து ஆடப் பலூன்
சேர்ந்து கூடப் பலூன்

ஊத உப்பின பலூன்
உடைந்து போச்சு பலூன்
புதுமை உடையாப் பலூன்
பாலர் விரும்பும் பலூன்!

- வடகரைச் செல்வன்.

ரயில் வண்டி

கூப் கூப் ரயில் வண்டி
கூவிச் செல்லும் ரயில் வண்டி
குப்பன் அரசன் கவர்னரையும்
சுமந்து செல்லும் ரயில் வண்டி.



உணவுப் பொருள்கள் துணிமணிகள்
உயிரைக் காக்கும் மருந்துகளை
கணக்கம் இன்றி, விலங்குகளை
சுமந்து செல்லும் ரயில் வண்டி.

பிருந்தாவனக் கவியரங்கம்

மதத்தால் இனத்தால் மொழிகளினால்
மனிதர் காட்டும் பேதமில்லை
இதனைப் போல நண்பர்கள்
இருப்பார் உண்டோ சொல்லிடுவாய்!

- எஸ். ஜெகந்நாதன்.

காளை

காளை நல்ல காளை
காண அழகுக் காளை
துள்ளி ஓடும் காளை
சல்லிக் கட்டு காளை



ஏரை உழுதிடும் காளை
ஏற்றம் இறைக்கும் காளை
பாரம் இழுக்கும் காளை
பலமாய் உழைக்கும் காளை

உழவுச் செல்வம் காளை
உழைக்கும் நல்ல காளை
வாழ்வில் உயரக் காளை
வழியைக் காட்டும் காளை!

- எம். சேக் உசேன்.



★ குதிரை : நின்றபடி தூக்கம்

கேளுங்கள் சொல்லப்படும்



★ மீன் தின்காத கொக்கு இருக்கிறதா? - எஸ். குரு மூர்த்தி, அரசிலைப்பட்டி.

இருக்கிறது என்கிறார்கள் பறவை இயல் வல்லுநர்கள். ரஷ்யாவின் சைபீரியாவில், ஒரு கொக்கு இனம் இருக்கிறது. இதன் பெயரே சைபீரியன் கிரேன். (Grus Leucogeranus) இதன் முக்கிய உணவு தாவரப் பொருள்கள் தானாம்! நம்ப முடியவில்லை. ஆனாலும் உண்மை! இன்னும் ஆராய்ச்சி செய்கிறார்கள்!

★ இந்தியாவில் அதிக தொலைவு வலசை போகும் பறவை எது? - அ. பர்வானா, நாசரத்பேட்டை.

இமயமலைப் பகுதியில் Wood Cock என்று ஒரு பறவை இருக்கிறது. இது முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்க ஆண்டு தோறும் சுமார் 2400 கி.மீ. தொலைவுக்கு வலசை போகிறது. இது வலசை போகும் இடம் எது தெரியுமா? நம்ம நீலகிரி மலைக்குத்தான்!

★ ஹீலியம் வாயு (Helium) சூரியனில் இருக்கிறது என்பதை முதலில் கண்டு பிடித்தது யார்? - தெ. நாக மணி, விருதுநகர்.



★ கிங் :
இடைவிடாத முயற்சி

சூரியனில் ஹீலியம் வாயுவும் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன என்பதை முதலில் கூறிய பெருமைக்கு உரியவர் நார்மன் லாக்கியர் (Norman Lockyer) என்ற விஞ்ஞானி. உண்மையில் ஹீலியத்தை பூமியில் கண்டுபிடிப்பதற்கு முன்னாலேயே இவர் இதைக் கூறிவிட்டார்.

★ நகைச்சுவை நடிகர்களான லாரல் - ஹார்டியின் உண்மைப் பெயர் என்ன? - எம். குணசீலன், பட்டுக்கோட்டை.

உலகப் புகழ் பெற்ற நகைச்சுவை நடிகர்களான லாரல் - ஹார்டியின் முழுப் பெயர் Stan Laurel and Oliver Hardey.

★ அமெரிக்காவின் நான்சி ரீகனும், ரொனால்டு ரீகனும் ஒரு சினிமாவில் நடித்திருக்கிறார்களாமே! அது என்ன படம்? - வே. பூரணி, வே. அகிலா, புதுக்கோட்டை.

'Hell Cats of the Navy' என்ற பிரசாரப் படம். கடற்கரைப் பாதுகாப்பு, சுற்றுச் சூழல் பற்றியது. இதில் இவர்கள் கௌரவ நடிகர்கள். அவ்வளவுதான்!

★ இந்தியாவில் நெருப்புக் கோழி இனம் இருக்கிறதா? - வெ. பாஸ்கர் சந்திரா, திண்டுக்கல்.

இப்பொழுது இல்லை. ஆனால் நெருப்புக்கோழி இந்தியாவில் இருந்

சேரநம்பி

திருக்கிறது என்பதற்கு ஆதாரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் கிடைத்துள்ள புதைபடிவங்களில் Ostrich என்ற நெருப்புக் கோழியின் உருவம் இருப்பதை Lydekker என்ற அறிவியல் அறிஞர் கண்டு பிடித்துக் காட்டியுள்ளார்.



★ படம் : இங்கேதான்!

★ அஸ்ட்ரநாமிகல் யூனிட் (Astronomical Unit) என்பது என்ன? – கு. துகாராம், தஞ்சை – 2.

சூரியனுக்கும், செவ்வாய் (Mars) க்கும் இடையே உள்ள தொலைவைக் குறிப்பதுதான் இது. இது சுமார் 150 மில்லியன் கி.மீ. ஆகும்.

★ சென்னை கிண்டியில் உள்ள கிங் இன்ஸ்டிட்யூட்டை யார் ஆரம்பித்தார்கள்? இதன் பணி என்ன? – க. சுக்கூர், ராணிப்பேட்டை.



பிரிக்கப்படாத சென்னை மாநிலத்தில், சுகாதாரத் துறையில் அம்மை குத்தும் பிரிவுக்குத் தலைவராக இருந்த லெப்டினெண்ட் கர்னல் W.G. கிங் என்பவரே இந்த நிலையம் அமையக் காரணமாக இருந்தவர். அணு உயிர் ஆராய்ச்சிப் பணிகளுக்காகவும், அம்மை, காலரா, பிளேக் முதலிய நோய்களுக்காகவும் எதிர்ப்பு மருந்துகளை உற்பத்தி செய்யவும் சென்னை நகருக்கு அருகே இப்படி ஒரு ஆராய்ச்சி நிலையத்தை அமைப்பது அவசியம் என்பதை அவர் நீண்டகாலமாக அரசாங்கத்திற்கு வற்புறுத்தி வந்தார். அவரது கோரிக்கைக்கு அரசு செவி சாய்க்கவில்லை. இவரும் விடவில்லை. இந்த நிலையில், சென்னை கவர்னராக வந்த லார்டு ஆம்தில் (Lord Ampthill) இவரது கோரிக்கையில் இருந்த நியாயத்தையும் அவசியத்தையும் உணர்ந்து, இந்த நிலையத்தை அமைக்கப் பரிந்துரை செய்தார். அரசின் அனுமதி கிடைத்தது. கவர்னரின் பெயரை வைக்க எல்லோரும் விரும்பினர். ஆனால் கவர்னர், இந்த முயற்சிக்கு விடாது பாடுபட்ட W.G. கிங்கின் பெயரையே வைத்து இந்த நிலையத்தை 1904 ஆம் ஆண்டு திறந்து வைத்தார். இன்று இது மிகப் பெரிய தொற்று நோய்த் தடுப்பு மருந்து தயாரிப்பு நிலையமாகவும், பல்வேறு மருத்துவ ஆராய்ச்சிப் பணிக்கான பரிசோதனைக்

★ நீங்கள் : சினிமாவில்....

கூடமாகவும் வளர்ந்து அரும்பணி யாற்றி வருகிறது.

★ **குதிரை படுத்துக் கொண்டு தூங் குமா, நின்று கொண்டு தூங்குமா? - து. பவானி, நாமக்கல்.**

ஆரோக்கியமான குதிரை நின்றபடி தான் தூங்கும். அதுதான் அதற்கு வசதி யானது. தரையில் உடலைச் சாய்த்து விட்டால் குதிரைக்கு மூச்சுத் திணறும். திண்டாடும். தரையில் படுத்தபடி எந்தக் குதிரையாவது தூங்கினால், அது நோய் வாய்ப்பட்ட குதிரை என்று முடிவு செய்து கொள்ளலாம்.

★ **டைகரான் (Tigeron) என்பது என்ன விலங்கு? இது எந்த நாட்டில் இருக்கிறது? - எம். சன்மார்க்க மேரி, சிக்கல்.**

குதிரைக்கும் கழுதைக்கும் பிறக்கும் கலப்பினப் பிராணியைக் கோவேறு கழுதை என்று அழைக்கிறோம் அல் லவா? இதே போன்ற கலப்பின விலங்கு தான் டைகரான். இதன் அம்மா சிங்க இனம். அப்பா புலி இனம். இது ஆராய்ச் சிப் பணிகளுக்காக உருவாக்கப்படு கிறதே தவிர, இதனால் வேறு பயன் இருப்பதாக இதுவரை தெரியவில்லை.

★ **தர்பூசணிப் பழம் மட்டும் சிவப் பாக இருக்க என்ன காரணம்? - வெள்ளை. சிவசங்கரன், கருமாத்தூர்.**

லைக்கோ பீன் என்று ஒரு வேதிப் பொருள். இது தர்பூசணியில் நிறைய இருக்கிறது. இதுவே தர்பூசணிக்கு சிவப்பு வண்ணத்தைத் தருகிறது.

★ **பன்றி மட்டும் சாக்கடையிலும் சகதியிலும் புரண்டு தவிக்கிறதே! இது ஏன்? - எம். பொன்னம்மாள், கல்லுப் பட்டி.**

காரணம் இருக்கிறது. பன்றியின் உடலில் நமக்கு இருப்பதுபோல் வியர் வைச் சுரப்பிகள் இல்லை. இதனால், உடல் வெப்பத்தை வெளியிட முடியாது தவிக்கும் இது, சாக்கடைச் சகதியிலும், சேற்றிலும் விழுந்து புரண்டு அதை உடலில் அப்பிக் கொள்கிறது. இது உடல் வெப்பத்தைத் தணிப்பதோடு, பூச்சிகளின் தாக்குதலில் இருந்தும் உடலைக் காப்பாற்றுகிறது.

★ **இங்கிலாந்தின் தேசிய கீதம் எது? இதை எழுதியவர் யார்? - ஜி. பெர் வாண்டோ, குடியாத்தம்.**

"God Save the King/Queen" என்ற பாடலே இங்கிலாந்தின் தேசிய கீதம். இதைப் பாடியவர் (எழுதியவர்) தாமஸ் ஆர்னே (Thomas Arne). இது முதன் முத லாக 1745 ஆம் ஆண்டில் இவராலேயே பாடி இசைக்கப்பட்டது. ஆனால், 1822ல் தான் இது சட்டபூர்வமாக தேசிய கீதம் என்ற அங்கீகாரத்தைப் பெற்றது.


★ **ஜவ்வரிசி எந்தச் செடியில் இருந்து பயிர் செய்யப்படுகிறது? - வ. சபாபதி, காட்டுமன்னார் கோவில்.**

ஜவ்வரிசி ஒரு பயிரே அல்ல. மர வள்ளிக் கிழங்கு என்ற ஒரு வகைக் கிழங் கின் மாவில் இருந்து இது தயாரிக்கப் படுகிறது. சேலம் மாவட்டத்தில் இது ஒரு முக்கிய குடிசைத் தொழில்.

★ **எந்த விளையாட்டை எடுத்தாலும் வெளிநாட்டில் தோன்றியது என்கிறார் களே! நமது நாட்டில் ஒரு விளையாட் டுக் கூடவா தோன்றவில்லை? - கு. சாமு வேல் ராஜா, கோடைரோடு.**

கோ கோ என்ற ஆட்டமும், கபடி ஆட்டமும் நமது இந்தியாவில் தோன்றி யவைதானே? இது மறந்து போச்சா? இவைகளுக்கு இன்னும் சர்வதேச அங்கி காரம் கிடைக்க வில்லை. அவ்வளவு ஏன், 'செஸ்' தோன்றக் காரணமாக இருந்த சதுரங்கம் நமது நாட்டு விளை யாட்டு தானே?

கேள்வி கேட்போர் ஒரு கடிதத்தில் ஒரு கேள்வியை மட்டுமே கேட்கலாம். ஏராளமான கேள்விகள் கேட்கப்படு வதால், பயன்தரும் கேள்விகளுக்கு மட் டுமே விடை தரப்படுகிறது. கேள்வி களை அனுப்ப வேண்டிய முகவரி : ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



வழி நடத்து!


எத்தனை தலைவரின் சிறைவாசம்
எத்தனை தொண்டரின் உயிர்த்தியாகம்
எத்தனை தடியடி, உயிர்ச்சேதம்
எத்தனை ரணகளம், அலங்கோலம்!

எத்தனை கால்நடை யாத்திரைகள்
எத்தனை நோன்புகள் ஊர்வலங்கள்
எத்தனை பட்டினி உயிர்க்கதறல்
எத்தனை இழப்புகள் அழுகுரல்கள்!

எத்தனை செக்குகள் இழுபட்டன
எத்தனை சாட்டைகள் சுழன்றிட்டன
எத்தனை பூட்சுகள் மிதித்திட்டன
எத்தனை லத்திகள் சதைபிய்த்தன!

எத்தனை பாடுகள் விடுதலைக்கு
எத்தனை சாவுகள் ஒரு கொடிக்கு
இதனைநீ கவனமாய் மனம்நிறுத்து
இந்திய நாட்டினை வழிநடத்து!

- மகுடேசுவரன்.





> ''சார்! உங்க குழந்தையா, அனு? ரொம்ப புத்திசாலி!''

பைனாகுலர்தான் வேணும்!

ஆக்ரோம் தீர அனுவின் முதுகில் இரண்டு சாத்து சாத்தினார் அவளுடைய அப்பா.

''எனக்கு பைனாகுலர்தான் வேணும். வேற எதுவும் வேண்டாம்'' - அடியையும் வாங்கிக் கொண்டு அனு அழுதாள்.

''அவள் கேட்பதைத்தான் வாங்கிக் கொடுங்களேன்'' என்று அனுவுக்குப் பரிந்து கொண்டு வந்தாள் அம்மா.

''எக்கேடோ கெட்டுப் போங்கள்'' என்று வெறுத்துக் கொண்ட அப்பா, அனு பிடிவாதமாகக் கேட்ட அந்த விலையிக்க பைனாகுலரை வாங்கிக் கொடுத்தார்.

அடுத்த நாள் காலையில் எழுந்த போது அனுவைக் காணோம்! பதறிக் கொண்டு அம்மாவும் அப்பாவும் அக்கம் பக்கத்தில் தேடினார்கள்.

''என்ன சார், சாமி தரிசனத்திற்கு வந்த புது இடத்தில், குழந்தையைக் கவனமாகப் பார்த்துக்க வேண்டாமா?'' என்று கேட்டனர் அருகில் உள்ள காட்டேஜ்களில் இருந்தவர்கள்.

இருவரும் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தனர் புகார் கொடுக்க. அங்கே இன்ஸ்பெக்டருக்கு முன்னால் சாக்லேட் சாப்பிட்டுக் கொண்டு கையில் பைனாகுலருடன் அனு!

''சார் உங்க குழந்தையா சார் அனு? ரொம்ப புத்திசாலி! ஒரு பக்காத் திருடனையும், அவன் திருடிய நகைகளையும் புடிக்கக் கொடுத்திருக்கா'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''ஆமாம்பா. காலையில் சீக்கிரம் எழுந்தேனா? நீங்க ரெண்டு பேரும் தூங்கிக்கிட்டு இருந்தீங்க. நான் உங்களை எழுப்பாம, ஜன்னல் வழியா பைனாகுலரை வைச்சுப் பார்த்தேன். அப்ப தூரத்தில் மலைச்சரிவில், ஒரு திருடன் மரத்துக்குக் கீழே குழி தோண்டி என்னமோ புதைக்கறதைப் பார்த்தேன். உடனே கதவைத் திறந்துக்கிட்டு, போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து சொன்னேன். வழிகாட்டினேன். புடிச்சுட்டாங்க. அவன் புதைச்சது திருட்டு நகைகளாம்'' என்றாள் மழலை மாறாத குரலில் அனு.

மாலைப் பத்திரிகையில் அப்பா அம்மாவுடன் அனுவின் புகைப்படம் செய்தியோடு வெளியாயிற்று. கோவிலில் சிறப்பான தரிசனம் கிடைத்தது. திருடு போனவை சாமியின் நகைகளாச்சே?

- சிற்பி சோமு

முத்துவுக்கு ஆபத்து!

அ. சுப்பையயன்

ஓவியப் பயிற்சிப் பள்ளியில் படிக்கும் முத்துவை உங்களுக்குத் தெரியுமா? அந்தப் பள்ளிக்கே, முத்து ஒரு சொத்து! அத்தனை திறமை அவனிடம்! ரொம்ப அழகாகப் படம் போடுவான். ரொம்ப வேகமாகவும் போடுவான். மற்ற மாணவர் களிடமிருந்து அவனுடைய படங்கள் பெரிதும் வித்தியாச மாகவே தெரியும். அதனால் ஆசிரியர்களுக்குக் கூட அவன் மீது ஒரு தனிப்பட்ட அன்பு!

ஆனால் ஒரு விஷயம். முத்து ரொம்பக் குறும்புக்காரன்! குறும்பு என்றால் - பக்கத்துப் பையனைக் கிள்ளி விடுவதோ, நோட்டுக்கை ஒளித்து வைப்பதோ அல்ல. குறும்பில் கூடப் புத்திசாலித்தனம் தெரியுபடி இருக்கும். எல்லாம் ஓவியக் குறும்பு!

முத்துவின் கிராமத்திலிருந்து அவனது பள்ளி கொஞ்சதூரம் தள்ளியிருந்தது. எனவே தினமும் வீட்டிலிருந்து பள்ளிக்குப் போய் வருவது கடினம் என்பதால், முத்து, பள்ளி ஹாஸ்டலிலேயே தங்கிப் படித்து வந்தான்.

அதனால் வாரம் ஒருமுறை வீட்டுக்குக் கடிதம் போடுவான். கடிதம் என்றால், எல்லாரையும் போல, 'அன்புள்ள அம்மாவுக்கு, நலம்....' என்றெல்லாம் எழுதமாட்டான். கடிதத்தைக் கூடப் படமாகவே வரைந்து அனுப்புவான்! அத்தனை குறும்பு!

அப்படித்தான் போனமாதம் அவனுக்கு, உடனடியாக சில நோட்டுப் புத்தகங்கள் வாங்க வேண்டியிருந்தது. காசு கேட்டு, வீட்டுக்குக் கடிதம் போட்டான். எப்படித் தெரியுமா?

சில நோட்டுப் புத்தகங்களைக் கடைக்காரரிடமிருந்து அவன் வாங்குவது போலவும், அதற்கு அப்பா பணத்தை மணி ஆர்டர் பண்ணுவது போலவும் படம் வரைந்து அனுப்பி விட்டான்!

அதைப் புரிந்து கொண்டு, பணத்தை அனுப்புவதற்குள் முத்துவின் அப்பா, அம்மாவுக்கப் போதும் போதும் என்றாகி விட்டது!

இன்னொரு சமயம் பள்ளியில் சுற்றுலா போவதற்கு ஏற்பாடு செய்திருந்தனர். அந்த தினத்தில் இவன் வீட்டுக்கு வருவதாகச் சொல்லியிருந்தான்! இப்போது சுற்றுலா வந்து விட்டது. வீட்டுக்கு வரமுடியாது என்று செய்தி அனுப்பவேண்டும்.

முத்து என்ன செய்தான் தெரியுமா? ஒரு தாளை எடுத்தான். கடகடவென்று ஒரு படம் வரைந்தான். ஒரு பஸ். அதில் 'சுற்றுலா' என்று எழுதி, இவன் அதில் ஏறி 'டாட்டா' காட்டுவது போல வரைந்து அனுப்பி விட்டான்! பாவம் அப்பா! அதைப் புரிந்து கொள்வதற்குள் அவர் பட்டபாடு இருக்கிறதே....!

இதையெல்லாம் கூட 'சாதா குறும்பு' என்று பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் நேற்று நடந்த சம்பவம்....

காலையில் முத்துவின் அப்பா வழக்கம்போல் வேலைக்குப் புறப்பட்டார். வழியில் தபால்காரர் அவரை



நிறுத்தி ஒருகடிதத்தைக் கொடுத்தார். அது.... முத்துவிடமிருந்துதான்!

அப்பா கடிதத்தை வாங்கிப் பிரித்துப் பார்த்ததும் அதிர்ந்து போய் விட்டார்!

வழக்கம் போல் 'படக் குறும்பு' தான். ஆனால் பயங்கரப் படம்!

ஒரு மண்டை ஓடு! இரண்டு எலும்புத் துண்டுகள்! கீழே 'அபாயம்' என்று எழுதியிருந்தது!

முத்துவுக்கு ஆபத்து!



அடுத்த கணமே அப்பா, தன் ஆபீஸுக்கு 'லீவ்' சொல்லி விட்டு பஸ் ஏறி விட்டார்! அவர் மனமெல்லாம் 'திக், திக்!

''என்ன ஆயிற்றோ முத்துவுக்கு? விரிவாக எழுதக் கூடாதா? இதைக் கூட இப்படியா செய்வது! கடவுளே! என் பிள்ளையைக் காப்பாற்று!'' என்றெல்லாம் மனம் பதைத்தபடி அவர் முத்துவின் பள்ளிக்கு விரைந்தார்!



பள்ளியில்....

''முத்து இன்று வகுப்புக்கு வரவில்லையே!''

அப்பா நிஜமாகவே பயந்து போனார்! வேகவேகமாக அவன் தங்கியிருக்கும் ஹாஸ்டலுக்கு ஓடினார்!

அங்கே -

முத்து, சாவகாசமாக, தன் அறையில் உட்கார்ந்து படம் போட்டுக் கொண்டிருந்தான்!

''முத்து....''

அப்பாவைப் பார்த்ததும் முத்து வியப்புடன் ''என்னப்பா திடீரென்று வந்திருக்கிறீர்கள்?''

''முத்து, உனக்கு ஒன்றும் ஆகவில்லையே!'' என்று கேட்டார்.

''எனக்கென்ன அப்பா! நன்றாகத் தானே இருக்கிறேன்!''

''அப்போ அந்த.. அந்த மண்டையோடு போட்ட கடிதம்...!''

''எந்தக் கடிதம்?''

அப்பா, அதை எடுத்துக் காண்பித்தார். மண்டை ஓடும், இரண்டு எலும்புத் துண்டுகளும், 'அபாயம்' என்ற எழுத்துக்களும்!

''ஓ... இதுவா! என்னை மன்னித்து விடுங்கள் அப்பா! ஓய்வு நேரத்தில் பணம் சம்பாதிக்கலாமே என்ற எண்ணத்தில் மின்சார வாரிய அலுவலர் ஒருவர் மூலம் இந்த வேலையை ஒப்புக் கொண்டேன். மின் கம்பங்களில் 'அபாயம்' என்று எழுதியிருப்பார்கள் அல்லவா? அந்தப் படத்தைத் தயாரிக்கும் பணியை தற்சமயம் நான்தான் செய்து வருகிறேன். நேற்று உங்களுக்கு சாதாரணமாக ஒரு கடிதம் எழுதியிருந்தேன். ஆனால் 'கவருக்குள்' அதைப் போடுவதற்கு பதில், தவறுதலாக இந்தப் படத்தைப் போட்டு விட்டேன் போலிருக்கிறது. எல்லாம் அதனால் வந்த குழப்பம்!'' என்றான் முத்து.

அப்பாவுக்கு நிம்மதி!

''முத்து... இனிமேல்.....''

''கண்டிப்பாக இனி ஓவியக் குறும்பு செய்யவே மாட்டேன்'' என்றான் முத்து!

என்னடா கதை விடறே?

மணிக்குப் பயமாக இருந்தது. பெரிய கட்டடங்கள், விளையாட்டு மைதானம், நிறைய மாணவர்கள், மிடுக்காக உடையணிந்து செல்லும் ஆசிரியர்கள், எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்து மிரண்டான்.


அவன் இதுவரை கிராமத்தில் சின்னப் பள்ளிக்கூடத்தில் படித்தான். அங்கு பயம் எதுவும் இல்லை. சொந்த வீட்டில் யாராவது பயப்படுவார்களா? எல்லா வகுப்புகளுக்கும் ஒரே ஆசிரியர். அப்பா மாதிரி அன்பாக அவர்கள் கஷ்டத்தைத் தெரிந்தவராக இருந்தார்.

மணி படிப்பில் கெட்டிக்காரன். அப் பாவை வற்புறுத்தி அவனை மேல் நிலைப் பள்ளியில் சேர்க்க ஆசிரியர் தான் காரணம். டவுனில் ஆறாம் வகுப்பில் அவனுக்கு எளிதாக இடம் கிடைத் தது.

மணியின் ஊரைச் சேர்ந்த மாண வர்கள் சிலரும் டவுனில் அந்த மேல் நிலைப் பள்ளியில் படித்தார்கள். அவர் கள் மணிக்கு டவுன் பெரிய பள்ளிக் கூடத்தைப் பற்றிக் கதை கதையாகச் சொன்னார்கள். அப்போதே மணியின் மனதில் பயம் தோன்றி விட்டது.

'தினமும் கண்டிப்பாகச் சீருடை அணிய வேண்டும். ஒருநாள் போட வில்லையென்றால் கூடத் தண்டனை யாக வெளியில் நிறுத்தி விடுவார்கள்' என்றான் ஒருவன்.

மணிக்கு 'திக்'கென்று இருந்தது. சின்னப் பள்ளிக்கூடத்துக்கு சில நாள் துண்டு உடுத்திக் கொண்டு கூட அவன் போயிருக்கிறான். ஆசிரியர் தண்டித்த தில்லை.



நல்லவேளை, அவனிடம் காக்கி கால் சட்டை, வெள்ளைச் சட்டை இருந் தது. அதுவும் கூட இலவச சீருடையாகக் கிடைத்ததுதான். அதே சீருடைதான் மேல்நிலைப் பள்ளியிலும் என்று அப்பா சொன்னதும் பழைய உடை களை வைத்துச் சமாளித்துக் கொள்ள லாம் என்று நினைத்தான். சீருடை பிரச்னை தீர்ந்தது.

மணியின் புதிய கவலை புத்தகங்கள் பற்றித்தான். புதிய புத்தகங்கள் வாங்கித் தர அப்பா சம்மதித்தார். கொஞ்சம் பணத்துடன் மணியும் அப்பாவும் கிளம் பினார்கள். அந்த நேரம் பார்த்து அம்மா அரிசி இல்லை என்றாள். அப்பா, பணத்தை அம்மாவிடம் கொடுத்து விட் டார்.

மணி அழுதான். ''புத்தகம் வாங்க வச்சிருக்கிற பணத்தைக் கொடுக்கா தீங்க'' என்று கத்தினான்.

''பாப்பா பசியில இருக்கு, கம்மா இருடா'' என்றாள் அம்மா.

"வயிறு முக்கியமா? படிப்பு முக்கியமா?" என்றான் மணி. அவன் அழுகை நீடித்தது. குதிகுதியென்று குதித்தான்.

அப்போது உறவினர் ஒருவர் வந்தார். தன் மகனின் பழைய ஆறாவது பாடப் புத்தகங்களை அவனுக்குத் தருவதாகக் கூறினார். அடுத்த நாள் அம்மா சந்தைக்கு போய்த் திரும்பும் போது அவைகளை வாங்கிக் கொண்டு வந்தாள்.

மணி ஆசையுடன் அந்தப் புத்தகங்களைப் பார்த்தான். சமூக அறிவியல் ஒன்றுதான் நன்றாக இருந்தது. கணக்கில் மேலட்டை மட்டும் இல்லை. தமிழில் முதல் செய்யுள் பாடமே இல்லை!

அம்மா கெஞ்சினாள். "அப்பா கஷ்டம் தெரிந்த பிள்ளையாக இருடா. இதையே வைத்துப் படி ராசா"

"ஒரு பாடமே இல்லையேம்மா? எப்படிப் படிக்க?" என்று முதலில் மணியின் மனம் முரண்டு பிடித்தது. பிறகு மனம் தெளிந்து "சரியம்மா" என்றான்.


"புத்தகங்கள் கிழியாமல் இருக்கணும். பழுப்பு அட்டை போட்டு ஒழுங்காக வைத்திருக்கணும். இல்லையென்றால் தண்டனை உண்டு பெரியபள்ளியில்..." என்று மற்ற மாணவர்கள் கூறியதைக் கேட்டு மணியின் மனம் மறுபடி நடுங்கியது.

தமிழ்ப் புத்தகத்தை மட்டும் சீராக்க முடியவில்லை. ஓர மடிப்புகளை நீவி வைத்தான்.

நண்பன் ஒருவனின் புதிய புத்தகத்தைப் பார்த்துக் கிழிந்து போயிருந்த செய்யுளை ஒரு தாளில் எழுதி வைத்துக் கொண்டான். ஒரே நாளில் அதை மனப்பாடமும் செய்து விட்டான்.

அன்று முதல் நாள். முதல் வகுப்பு தமிழ். ஆசிரியர் செய்யுள் நடத்த ஆரம்பித்தார். தான் வாசிக்கும் போது மாணவர்கள் வரியின் கீழ், விரல்களை வைத்துக் கொண்டு கவனிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

எல்லா மாணவர்களும் அவ்வாறே செய்தார்கள். மணி மட்டும் செய்யுள் தாளைத் தேடிக் கொண்டிருந்தான். காலையிலேயே அது தங்கையின் கையில் கசங்கி விட்ட உண்மை அவனுக்குத் தெரியாது!



ஆசிரியர் மணியைக் கவனித்து விட்டார். "எழுந்து நில். கிராமத்துப் பிள்ளையா? எத்தனை சொன்னாலும் புரியாதே?" என்றார்.

எல்லோரும் சிரித்தனர்.

மணிக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. "ஏன் பாடத்தை கவனிக்கவில்லை?" என்று பிரம்பை எடுத்தார் ஆசிரியர்.

"தமிழ்ப் புத்தகத்தில் செய்யுள் பகுதி கிழிந்து விட்டது ஐயா. இது பழைய புத்தகம். புதுப் புத்தகம் வாங்க

சுகுமாரன்



அண்டப் புளுகனும் ஆகாசப் புளுகனும்

அபிஷேகபுரம் என்ற ஊரில் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் பெயர் அண்டப் புளுகன். அவன் வாயைத் திறந்தால் போதும், அவ்வளவும் புளுகுதான். கண்ணை மூடிக் கொண்டு கவலைப்படாமல் பொய் சொல்லுவான். அவன் அளக்கும் கதைகளைக் கேட்டு ஊர் மக்கள் அனைவரும் அலறியடித்துக் கொண்டு ஓடுவார்கள்.

ஒரு சமயம் அண்டப்புளுகன் பக்கத்து ஊருக்குச் சென்றிருந்தான். அங்கே ஆகாசப் புளுகன் என்பவரின் புளுகைப் பற்றியே எல்லா இடங்களிலும் பேச்சாக இருந்தது. அந்த ஆகாசப்புளுகன் ஒரு தையல்காரன். எல்லோரும் வியப்புடன் அவனைப் பற்றியே பேசியதால் அவனைப் பார்க்க அண்டப் புளுகன் ஆசைப்பட்டான். ஆகாசப்புளுக னின் வீட்டிற்குச் சென்றான். எப்படியும் அவனைத் தன் புளுகினால் வென்று தன் பெயரை அந்த ஊரில் நிலைநாட்ட வேண்டும் என எண்ணினான். ஆகாசப்புளுகனின் வீட்டு முன்னால் ஒரு சிறுவன் நின்று கொண்டிருந் தான். அவனிடம், ''ஆகாசப்புளுகன் இருக் கிறானா?'' எனக் கேட்டான் அண்டப்புளு கன்.

அதற்கு அச் சிறுவன், ''என் அப்பா, வானம் கிழிஞ்சிருக்கு, அதைத் தைக்கப் போயிருக்கிறார்'' என்றான். ''ஏ! அப்பா, மகனே இப்படிப் புளுகி னான் என்றால் இவங்க அப்பன் எப்படிப் புளுகு வான்!'' எனக் கலங்கிய அண்டப்புளுகன், தான் யார் என்பதைத் தெரிவித்துக் கொள்ளாது தன் ஊருக்கு நடையைக் கட்டினான்!

– பாளை. பசும்பொன்,
திருநெல்வேலி - 11.

எங்க அப்பாவிடம் வசதி இல்லே'' என்று பதில் கூறினான் மணி.

வகுப்பு மாணவர்கள் பரிதாபத்துடன் மணியையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

''முதல் நாளே ஒரு ஒழுங்கீனம், வா இங்கே'' என்று ஆசிரியர் பிரம்பை ஓங்கினார்.

மணி தைரியத்துடன் கூறினான், ''ஐயா, அந்தச் செய்யுள் எனக்கு மனப்பாடமாகத் தெரியும்.''

''என்னடா கதை விடறே? எங்கே சொல், பார்க்கலாம்?'' என்று ஆசிரியர் அவநம்பிக்கையோடு கேட்டார்.

'எத்துணையும் பேதமுறாது, எவ்வுயிரும் தம்முயிர் போல்...' என்று தொடங்கி மூச்சு வாங்காமல் கூறி முடித்தான் மணி. ஆசிரியர் அசந்து போனார். மற்ற மாணவர்களும் கூட.

''கிராமத்துப் புள்ளைங்க கஷ்டம் தெரிஞ்ச பொறுப்புள்ள புள்ளைங்க ஐயா'' என்று சமயம் பார்த்துத் தன் ஆதங்கத்தைக் கொட்டினான் மணி.

''உண்மைதான் மணி'' என்ற அவனைப் பாராட்டி அமர வைத்தார் ஆசிரியர்.

மணிக்கு இப்போது பெரிய பள்ளிக் கூடம் பயமாக இல்லை.



STRIBUTORS: Madras: • Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimbatore). **derabad:** • Shailendra Agencies, Bashir Bagh • Neel Kamal Book Distributors, Sultan Bazar.. **Bangalore:** • Sapna Book Stall, Gandhi Nagar K. Agencies, Rajaji Nagar • The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road.



குடையை மட்டும்...

சின்னமலை பெரிய திருடன். பொல்லாதவன். பல இடங்களில் திருடிப் புதைத்து வைத்திருந்தான். அவனைப் பிடிப்பதற்கு எத்தனையோ முயற்சிகள் நடந்தன. எதுவும் வெற்றி பெறவில்லை.

அரசாங்கத்தில் காவல் துறையினர் சின்னமலை மீது கண் வைத்திருந்தனர். இருப்பினும் எந்த வலையிலும் சின்ன மலை அவர்களிடம் சிக்காமல் தப்பித்து வந்தான்.



அவன் ஒரு பெரிய திட்டம் வைத் திருந்தான். பல இடங்களில் திருடிப் பெருஞ்செல்வம் சேர்க்க வேண்டும். சேர்த்த செல்வத்தை எடுத்துக் கொண்டு வெளிநாட்டுக்கு ஓடிப் போய் விட வேண்டும். அங்கே வசதியோடு நிம்மதி யாக வாழ வேண்டும். எல்லோர் கண் ணிலும் மண்ணைத் தூவ வேண்டும். இதுவே அவன் திட்டம்.

கடைசியாக சின்னமலை யானைப் பட்டி பிள்ளையார் கோவிலில் திருடி னான். பிள்ளையாருக்கு அழகுமிக்க வெள்ளிக் கவசமும், வெள்ளிக் குடை யும் இருந்தன. இரண்டுமே வேலைப் பாடு மிக்கவை; விலை உயர்ந்தவை.

சின்னமலை திட்டம் போட்டு பிள் ளையாரின் வெள்ளிக் குடையைத் திருடித் தனது திருட்டுப் புதையலோடு சேர்த்துக் கொண்டான். காவல்துறை இதைத் தங்களுக்கு விடப்பட்ட ஒரு சவாலாக எண்ணி, சின்னமலையைப் பிடிக்கத் தனி காவல் படை அமைத்து தீவிரமாகச் செயல்பட்டது.

சின்னமலை சிக்கிக் கொண்டு விடு வான் போல் இருந்தது. இது சின்ன மலைக்கும் தெரிந்து விட்டது. அவன் மூளை வேகமாக வேலை செய்தது.

அந்தப் பகுதியில் சித்தமலை சாமி யார் மடம் என்று ஓர் மடம் இருந்தது. அதில் வயதான சாமியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு நான்கு சீடர்கள் இருந்தனர். சாமியாருக்கும் சரி, சீடர் களுக்கும் சரி மக்களிடையே நல்ல செல்வாக்கு இருந்தது. அவர்கள்

ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

ஐவரும் மிகவும் நல்லவர்கள் என்று பெரிதும் புகழப்பட்டனர்.

இவை எல்லாம் சின்னமலையின் நினைவுக்கு வந்தது. தானும் அந்த மடத்தில் சென்று சேர்ந்து விட்டால் தனக்குப் பாதுகாப்பு என்று அவன் நினைத்தான். தண்ணீரில் பால் கலந்தால் தெரிந்து விடும் பாலோடு தண்ணீர் கலந்தால் அவ்வளவாகத் தெரியாது. என்று சிந்தித்தான் சின்னமலை.

மடத்துச் சாமியாரிடம் போய்ச் சேர்ந்து விடுவோம். அதன் பிறகு யாராலும் நம்மைச் சந்தேகப்பட முடியாது என்று முடிவு செய்தான். தன்னுடைய உருவத்தை மாற்றிக் கொள்ள முயன்றான்.

மொட்டை அடித்து நிறைய மணி மாலைகளை வாங்கிக் கழுத்தில் அணிந்து உடம்பு முழுதும் திருநீறு பூசிக் கொண்டு தன்னை முற்றிலும் ஒரு சாமியார் போல மாற்றிக் கொண்டான். ஒரு நாள் இரவு மடத்துக்குச் சென்று, சாமியாரைச் சந்தித்து, ''சுவாமி! என்னை உங்கள் சீடனாக ஏற்றுக் கொள்ளுங்கள்! போதும். உங்களுக்கு வேண்டிய பணிகளை எல்லாம் நானே செய்வேன்!'' என்று சொன்னான் சின்னமலை.

சின்னமலையை நன்கு உற்றுப் பார்த்தார் சாமியார். அவருக்கு எல்லாம் விளங்கி விட்டது. சிறிது நேரம் பேசாமல் அமைதியாக இருந்தார். பிறகு ''சின்னமலை, நீ மக்கள் சொத்தைக் கொள்ளையடித்ததோடு, சாமி சொத்தையும் திருடியிருக்கிறாய். இப்பொழுது கூட நீ நல்லவனாக மாற எண்ணவில்லை. உன் எண்ணமெல்லாம் போலீசில் இருந்து தப்பி, திருட்டுச் சொத்தை எடுத்துக் கொண்டு வெளிநாட்டுக்கு ஓடுவதிலேயே உள்ளது'' என்றார்.

''என்னவானாலும் நீங்கதான் என்னைக் காப்பாற்ற வேண்டும். மறுத்தால் உங்களை இந்த மடத்தோடு தீக்கிரையாக்கி விடுவேன்'' என்று மிரட்டினான் சின்னமலை.

சாமியார் சிரித்தார். ''சின்னமலை, தப்புச் செய்தவன் சாமியாரானாலும்



கூட தரும தேவதை சும்மா விட மாட்டாள். செய்த தவறுக்கு தண்டனை கிடைத்தே தீரும். போகட்டும், உன் விருப்பப்படியே இங்கே இருக்கலாம். என்னால் உனக்குத் தீங்கு ஏற்படாது. ஆனால், தரும தேவதையை யாரும் ஏமாற்ற முடியாது. நீயே உனக் குத் தீங்கைத் தேடிக் கொண்டால் நான் ஒன்றும் செய்ய இயலாது! நான் சொல்வது உனக்குச் சம்ம தம்தானா?'' என்று கேட்டார் சாமியார்.

சம்மதம் என்று தலையை ஆட்டி னான் சின்னமலை.

சின்னமலை சாமியாரின் சீடர்களுள் ஒருவனாக ஏற்றுக் கொள்ளப்பட்டான். சாமியாருக்கு வேண்டிய பணிவிடைகளை எல்லாம் தானே ஓடி ஓடிச் செய்து வந்தான்.

இன்று சாமியாருக்கு உணவு சமைப்பது யார் என்று மற்ற சீடர்கள் கேட்கும் போது ''நானே'' என்று எழுந்து நிற்பான் சின்னமலை.

இன்று சாமியாருக்கு ஆடை துவைப்பது யார் என்று கேட்டால் அதற்கும் ''நானே'' என்பான்.

ஆனால் சின்னமலை மடத்தை விட்டு வெளியே போவதில்லை. போனால் என்ன ஆகும் என்பது அவனுக்கே தெரியும். அதனால் வெளியே போக வேண்டிய நிலை ஏற்படும் போது தந்திரமாகத் தப்பித்துக் கொள்வான். அந்த மாதிரிச் சமயங்களில் திறமையாக மற்ற சீடர்களை வெளியே அனுப்பி காரியங்களைக் கவனிக்க வைப்பான்.

ஒருமுறை ஊரில் பஞ்சாயத்துக் கூட்டம் நடந்தது. முக்கியமான கூட்டம். கூட்டத்தில் விவாதிக்க இருந்த விஷயம் பிள்ளையார் கோவிலில் நடக்க இருந்த திருவிழாவைப் பற்றி. கோவில் பற்றிய கூட்டம் என்பதால், மக்களால் மதித்து வணங்கப்படும் சாமி யாரோ, இல்லை அவரது சார்பில் ஒரு வரோ கலந்து கொள்ள வேண்டும் என்று பஞ்சாயத்துத் தலைவர் அழைப்பு அனுப்பியிருந்தார். சாமியாரை அனுப்ப சின்னமலை பயந்தான். எனவே தானே போக முடிவு செய்தான்.

''சாமியார் உண்ணாவிரதம்'' என்று ஒரு வார்த்தை மட்டும் சொல்லி மௌனமாக இருந்துவிட்டுத் திரும்பி விடலாம் என்று போனான் சின்னமலை.

பஞ்சாயத்து நடந்து கொண்டிருந்தது. ஊர்ப் பெரியவர்கள் உட்கார்ந்து விவாதித்துக் கொண்டிருந்தனர். சின்னமலையின் போதாத காலம், கூட்டம் பிள்ளையார் கோவிலில் நடந்த திருட்டு பற்றி திரும்பியது! காவல் துறை அதிகாரிகளும் அங்கே இருந்தனர். சின்னமலையைப் பார்த்ததும் அவர்களுக்கு சந்தேகம் எழுந்தது

''பிள்ளையாரின் குடையையும், கவசத்தையும் யாரோ திருடிக் கொண்டு போய் விட்டார்கள்'' என்றார் ஊர்த் தலைவர்.


சின்னமலை தன்னை மறந்தான். ''குடையை மட்டும்தானே நான் திருடினேன்! கவசத்தைத் திருடவில்லையே!'' என்று வியப்போடு கேட்டான்.

விழிப்புடன் இருந்த காவல் அதிகாரிகள் மின்னலாகப் பாய்ந்து சின்னமலையைப் பிடித்து விட்டனர். பிறகு என்ன தரும அடிதான்! தரும தேவதை சிரித்தாள்!

"உனக்கு ஸ்கூல், வீடு ரெண்டிலேயும் பிடிச்சது எதுடா?''

"காப்பி!''

- கே. சோமசேகர்.





''திருச்சிக்கு 'த்ரு' பஸ் வருமா?''

''இங்கெல்லாம் பெயிண்ட் அடிச்ச பஸ்தான் வரும்!''

- ஏ. ஹரிகிருஷ்ணன்.



திமிங்கலத்தின் வயிற்றில் மூன்று நாட்கள் ஒருவர் இருந்திருக்கிறார் என்பது நம்பமுடியாத ஒரு செய்தியாக இருக்கிறது அல்லவா? ஆனால் உண்மையாகவே இப்படி ஒரு மனிதர் இருந்திருக்கிறார்! அதோடு, திமிங்கலத்தின் வயிற்றில் இருந்து மீண்ட இவர் வெளியில் வந்து உயிரோடும் பலகாலம் வாழ்ந்திருக்கிறார்!


பைபிளில் திமிங்கலத்தின் வயிற்றில் இருந்து மீண்ட இப்படிப்பட்ட ஒரு மனிதரைப் பற்றிக் குறிப்புக் காணப்படுகிறது. யோனா என்று ஒருவன். இவன் ஆண்டவனின் கட்டளைப்படி நடப்பதில்லை. இவனை ஒரு திமிங்கலம் விழுங்கிவிடுகிறது. மூன்று நாட்கள் திமிங்கலத்தின் வயிற்றில் இருக்கும் யோனா, சுகமாக நான்காவது நாள் வெளியில் வருகிறான். இந்த நிகழ்ச்சியை பைபிள் கூறுகிறது. எனவே திமிங்கலத்தின் வயிற்றில் இருந்து தப்புவது என்பது புதிய காரியம் அல்ல.

திமிங்கலத்தின் வயிற்றில் சாதாரண மனிதர்களும் கூட நாட்கணக்கில் இருந்திருக்கிறார்கள் என்பதை வரலாறு கூறுகிறது. 1871 - ஆம் ஆண்டில் திமிங்கல வேட்டைக்குச் சென்றார் ஜெங்கின்ஸ் என்ற அமெரிக்கர். அவருடைய வேட்டைப் படகை திமிங்கலம் ஒன்று தாக்கியது.

நொறுங்கிய படகுத் துண்டுகளுடன் ஜெங்கின்ஸும் திமிங்கலத்தின் வாய்க்குள் போனார்.

திமிங்கலத்தின் வாய்க்குள் சென்ற ஜெங்கின்ஸின் மேல், திமிங்கிலத்திற்கு என்ன பரிதாப உணர்வு ஏற்பட்டதோ தெரியவில்லை, சற்று நேரத்திலேயே அவரை வெளியே துப்பியது! ஜெங்கின்ஸ் எவ்வித காயங்களும் இன்றித் தப்பித்தார்!

இங்கிலாந்துக் காரரான 'ஜேம்ஸ் பார்ப்டிவியின்' கதை இதைவிட அதிசய மானது. 1891 - ஆம் ஆண்டில்



பார்ப்டிவியின் படகு கடலில் ஒரு திமிங்கிலத்தால் தாக்கப்பட்டது. நன்றாக நொறுங்கியது. உயிர் பிழைக்கக் கடலில் குதித்தார் பார்ப்டிவி. நீண்ட போராட் டத்திற்குப் பின் திமிங்கலம் படகின் உடைந்த பாகங்களுடன் பார்ப்டிவியைத் தன் பற்கள் படாமல் முழுசாக விழுங்கியது!

படகுத் துண்டுகளில் இருந்த பெரிய பெரிய ஆணிகள் திமிங்கலத்தின் குடலின் பல பாகங்களைக் குத்தி வலியுண்டாக்கியது! வலி தாங்காது திமிங்கலம் இறந்து மிதந்தது! திமிங் கலத்தின் உடல் கடலில் மிதப்பதைக் கண்டான் ஒரு வேட்டைக்காரன். அதன் கொழுப்பு விலை மிக்கது என்பதால் அதை எடுப்பதற்காக செத்த திமிங் கலத்தை ஒரு கப்பலில் கட்டி இழுத்துக் கொண்டு கரைக்கு வந்தான் அவன்.

கொழுப்பை எடுக்க வயிற்றைக் கிழித்த போதுதான் அதன் வயிற்றில் திமிங்கலம் விழுங்கியிருந்த பார்ட்டி வியைக் கண்டனர். அவர் இறக்க வில்லை. ஆனால் நினைவிழந்து கிடந் தார். மூன்று நாட்கள் திமிங்கலத்தின் வயிற்றுக்குள் இருந்ததால் அவருடைய உடல் பனிக்கட்டி போல் வெளுத்துப் போய் இருந்தது. அவரை வெளியே எடுத்துச் சிகிச்சை அளித்தனர். பல நாட் கள் அவரைக் காய்ச்சல் வாட்டியது. பிறகு அவர் மெதுவாகப் பிழைத்துக் கொண்டார்.

பல காலம் உயிருடன் இருந்தார். 'திமிங்கலம் விழுங்கிய பலரை உடலுக்குடன் வெளியே எடுத்துக் காப் பாற்றிய செய்திகள் பல உள்ளன. ஆனால் மூன்று நாட்கள் வரை இருந்த ஒருவர் வெளியே எடுக்கப்பட்டு காப் பற்றப்பட்ட நிகழ்ச்சி இதுவே!

- வே. பிரபா

மனிதரில் மாணிக்கம்

அந்தத் தெருவில் சிறுவர்கள் உற் சாகமாகப் பந்து விளையாடிக் கொண் டிருந்தார்கள். நல்ல போக்குவரத்து மிகுந்த தெரு அது. திடீரென்று அந்தப் பக்கம் ஒரு லாரி வந்தது. சிறுவர்கள் கலைந்து ஓடினர். ஆனாலும் ஒரு சிறு வனின் காலில் சக்கரம் உராய்ந்து அடி பட்டு விட்டது. சிறுவன் கீழே விழுந்து விட்டான்.



இச் சமயத்தில் அந்தப் பக்கமாக நேருஜி தன் காரில் வர நேர்ந்தது. அவரைக் கண்டதும் எல்லோரும் 'நேரு வுக்கு ஜே!' என்று பெருங்குரல் எழுப் பினர்.


காரை விட்டிறங்கிய நேருஜி, நேராக காயப்பட்டுக் கிடந்த சிறுவனை நோக்கி ஓடினார். ''ஒரு சிறுவன் காயப் பட்டுக் கிடக்கிறான்! அவனை கவனி யாமல் எனக்கு ஜே போடுகிறீர் களே...?'' என்று கூச்சல் போட்டார்.

அந்தச் சிறுவனைத் தன் காரில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்.

ஒரு நாட்டின் பிரதமராக இருந்த போதும் மனிதாபிமானம் நிறைந்த மனி தராக நடந்து கொண்ட நேருஜி, உண்மை யிலேயே வித்தியாசமான அரசியல் தலைவர்தான்!

- ஏ. ஹரிகிருஷ்ணன்.

- 'நேருஜி - சில நினைவுகள்' நூலிலிருந்து.



நான் எடுக்கலை!

ஜெயஸ்ரீ ராஜகுமார்..

தலைமையாசிரியரின் முன் நின்ற கிருபாகரனுக்கு அழுகை, அழுகையாக வந்தது.... அவமானத்தால் முகம் சிவந்து, குறுகிப் போனான்.

''சொல்லுப்பா கிருபா, இந்தப் பணம் நூறு ரூபாய் எப்படி உன் புத்தகப் பையில் வந்தது...?''

தலைமையாசிரியரின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது, தலைகுனிந் தான். ''கோபமாய் யாரும் எதுவும் கேட்டால் மௌனமாயிரு.... உண் மையே வெல்லும்'' என்ற அம்மாவின் வார்த்தைகளை நினைத்துக் கொண் டான்....

நடந்தது இதுதான். கிருபாகரன்தான் வகுப்பில் முதல் மாணவன். நல்ல குணமுடையவன். அனைவரிடமும் அன்பாயிருப்பான். மிக ஒழுக்க குண முடையவன். இதனாலேயே அவன் தான் வகுப்பு லீடர்.

சம்பத், கிருபாவுடன் படிப்பவன். முரடன். கிருபா வகுப்பு லீடர் என்பதில் சம்பத்துக்கு அதிக பொறாமை.

கிருபாவுக்குப் பதில், தான் வகுப்பு லீடரானால் நன்றாக இருக்குமே என நினைத்தான் சம்பத். ஆனால் கிருபா லீடராக இருக்கும் போது எப்படி தான் லீடராவது...?

குறுக்கு வழியில் திட்டம் தீட்டி னான்... ஒருநாள் திட்டமிட்டபடியே - தன் பணம் நூறு ரூபாயை கிருபாவின் புத்தகப் பையினுள் யாருக்கும் தெரி யாது வைத்து விட்டான்.

பிறகு ஒன்றுமே தெரியாதவன் போல, ''சார்... என் பணம் நூறு ரூபாயைக் காணோமே...! ஐயோ... நான் என்ன செய்வேன்? என் அம்மா வுக்கு மருந்து வாங்க வைத்திருந்த பணமாயிற்றே?'' என்று மிக இயல் பாக, அழுது அனைவருமே நம்பும்படி நடித்தான், சம்பத்.

வகுப்பு ஆசிரியர் விசாரித்தார்.. பிறகு அனைத்து மாணவர்களையும் சோதனையிட ஆரம்பித்தார்...

கடைசியில் அந்தப் புதிய நூறு ரூபாய் நோட்டு - கிருபாவின் பையில் இருந் தது.

ஆசிரியரால் நம்பவே முடிய வில்லை! கிருபா நல்ல பையனா யிற்றே? அவனா இப்படி?

''சார்... இதுதான் என் பணம். கிருபா திருடன் சார்! திருடன் இனி நம்ப கிளாஸ் லீடராக இருக்கக் கூடாது....'' என ஓலமிட்டான் சம்பத்.

கிருபாவுக்கு, மெல்ல மெல்ல எல்லாம் புரிந்தது.... இது சம்பத்தின் வேலைதான்! ஆனால், என்ன செய்ய? இனி நான் என்ன சொன்னாலுமே யாருமே நம்ப மாட்டார்களே! என்ன செய்யலாம்...?

நான் திருடவில்லை... இது தனக் கும் ஆண்டவருக்கும் மட்டுமே தெரி யும்...!

''ஆண்டவா... இந்த பழியிலிருந்து என்னைக் காப்பாற்று!''

-மனதிற்குள்ளே பிரார்த்தனை செய்தான் கிருபா.

தலைமை ஆசிரியர் கனகராஜ் மிகவும் கண்டிப்பானவர்.

பொறுமையாக விசாரித்தார். பிறகு மெல்லிய குரலில், ஆனால் கண்டிப்போடு சொல்ல ஆரம்பித்தார்.

''கிருபா... உன்னை நல்ல பையனென்று நினைத்திருந்தேனே! ஏன் இப்படி செய்தாய்? சே! எனக்கு வெட்கமாயுள்ளது! உனக்கு அபராதம் நூறு ரூபாய்; நாளை காலை வரும்போது கொண்டு வா....!'' என்றார். கிருபா தலையசைத்தான்... சம்பத்திற்கு மனதிற்குள்ளே சந்தோஷம்...

மெதுவாக வகுப்புக்கு வந்து தன் பையை எடுத்துக் கொண்டு, வீடு போக ஆயத்தமானான் கிருபா...

அந்த நேரம் ராமசாமி வந்தார். அவர் பள்ளியில் பியூனாகப் பணியாற்றுபவர். கிருபாவின் மேல் அதிக பாசமுடையவர்.

கிருபாவின் தோளைத் தட்டி, ''தம்பி, கவலைப்படாதே... உன்னைப் பற்றி எனக்குத் தெரியும். எல்லாம் நன்மையாகவே முடியும். மனம் தளராதே...!'' என்று சொல்லிவிட்டு, ''தயவு செய்து போகும் வழியில் இந்தப் பையை என் வீட்டில் கொடுத்து விடு.....'' என்றார்.



We are proud to present you the Dynam® LOW COST MICROSCOPE

With all the features of the more sophisticated types.

NATIONAL AWARD WINNER





The wonders of nature invisible to the naked eye, like the tiny cells of the leaf, cross-sectional details of the various stems, intricate parts of tiny insects, Micro-Organisms in a stagnant water-all these now become a reality with the Dynam Microscope.

Available at all leading Toy, Departmental Stores and scientific equipment dealers or direct from us.

DYNAM ENGINEERING CORPORATION
138, Gangadhara Chetty Road
BANGALORE-560 042. India.

BUY THIS LITTLE **MICROSCOPE** & BUY YOURSELF AN **EDUCATION!**





MAGNIFIES 60 TIMES WITH ADAPTOR 100 TIMES

I am interested in buying a Microscope at Rs. 75/- + 25/- towards taxes, Packing & Forwarding. Please send me .... kit/kits. I am enclosing a crossed D. D./Money Order (@ Rs. 25/- per kit.) as advance and promise to pay the balance when I receive the V. P. P.

NAME:..

ADDRESS:..

.... PIN ....

Climb Ads/DE/01-91.

கிருபா வாங்கிக் கொண்டு மெது வாய் நடந்தான்....

தனக்கு ஏன் இந்த நிலைமை...? நல்லவனாய் இருந்ததற்கு தெய்வம் தந்த பரிசா இது?

''என்ன கிருபா... கிளாஸ் லீடர் பதவி போச்சா? இனி நான்தான் லீடர்!''- என்ற குரல் கேட்டுத் திரும்பினான் குள்ளநரி சிரிப்புடன் சம்பத்.

''ஏன் சம்பத் இப்படிச் செய்தாய்? லீடர் பதவி வேண்டுமென்று என்னிடம் சொல்லி இருந்தால் நானே விலகி யிருப்பேனே! இப்பொழுது எனக்கு 'திருடன்' என்ற அவச் சொல் கிடைத்து விட்டதே!'' - என்று தழுதழுத்த குரலில் கிருபா கேட்டான்.

''அடப் போடா! நீ விட்டுக் கொடுத்தா... நம்ப சார் சம்மதிப் பாரா...? ஒரே கல்லில் இரண்டு மாங் காய். உனக்கு லீடர் பதவியும் போச்சு... நல்ல பெயரும் போச்சு... என் மூளையே மூளை! இல்லியா கிருபா? வரட்டா? அழாதே! நூறு ரூபாய் அபராதத்தை ரெடி பண்ணி நாளை கொண்டு வா! என்ன?''

கிண்டல் பண்ணியவாறே சைக்கி ளில் விரைந்து போய் விட் டான்.

அடுத்த நாள் பள்ளி அசெம்பளி கூடி யது. அனைத்து மாணவர்களும் காலைப் பிரார்த்தனைக்காக மைதானத்தில் கூடி னர்.

தலைமையாசிரியர் - அன்றைய அறி வுரையைச் சொல்ல மைக் முன் வந்தார்.

''மாணவர்களே... நேற்று நம் கிருபா, சம்பத்தின் பணத்தைத் திரு டியதாக நடந்த நிகழ்ச்சியை அறிந் திருப்பீர்கள். ஆனால் திருடன் கிருபா இல்லை. கிருபா உண்மையானவன்.

வாத்தியார் : தலைக்கு மேல் வேலை இருக்கு என்று லீவு கேட்கிறாயே, அப் படி என்னடா வேலை?

மாணவன் : முடி வெட்டிக்கற வேலைதான் சார்!

- ஜே. குத்தூஸ், ஆவூர்.



நேர்மையானவன். சம்பத்தின் சூழ்ச்சி தான் இதற்குக் காரணம். சம்பத் கெட்ட எண்ணத்தினால் கிருபாவின் மேல் வீண்பழி சுமத்தி விட்டான்'' என் றார்....

''இல்லையில்லை. கிருபாதான் திருடினான்.'' என்று சத்தமிட்டான் சம்பத்.

''அப்படியா தம்பி?! ராமசாமி, அதைக் கொண்டு வா! உண்மை எல் லோருக்கும் தெரியட்டும்...'' என்றார் தலைமையாசிரியர்.

இராமசாமி ஒரு பையைக் கொண்டு வந்து தலைமையாசிரியரிடம் தந்தார்.

''இது.. இது... நேற்று ராமசாமி என்னிடம் கொடுத்த பையாயிற்றே...! இதில் என்ன இருக்கப் போகிறது...?''

-கிருபாவுக்கு எல்லாமே வியப்பாக இருந்தது.

தலைமையாசிரியர் அதைப் பிரித்து ஒரு சிறிய டேப் ரிக்கார்டரை எடுத்து மைக்கின் முன் வைத்து, இயக்கினார்.

அதில், முந்தின தினம் கிருபாவிடம் சம்பத் பேசியது அப்படியே பதிவாகி இருந்தது... கேட்க, கேட்க கிருபா பிர காசமானான். சம்பத்தின் முகம் கறுத் தது.


தலைமையாசிரியர் பேசினார்.

''... கிருபாவை எனக்குத் தெரியும். இதை அவன் செய்திருக்க மாட்டான் என்று மனதிற்குப் பட்டது... ஆனால் கிருபா திருடனல்ல என்பதற்கு சாட்சி வேண்டாமா?

அதனாலேயே டேப் ரிகார்டரை 'ஆன்' செய்து ராமசாமியிடம் கொடுத்து, கிருபாவிடம் தரச் சொன் னேன்.

வழியில் சம்பத் இதுபற்றிப் பேசு வான் என நினைத்தேன்... என் நம் பிக்கை வீணாகவில்லை... கிருபா உண்மையுள்ளவன் என இந்த சம்பவம் மூலம் இன்னும் உறுதிப்பட்டுள்ளது...'' என்று சொல்லி முடித்தார்! மாணவர் களின் கரகோஷம் அடங்க வெகுநேரமா னது....

கடைசியில் உண்மையே வென்றது. கிருபாவை அவமானப்படுத்த நினைத்த சம்பத் கடைசியில் தானே அவமானப் பட்டு தண்டனையடைந்தான்.



Karishma/SW/6/2416 TM A

அபிராமியின் அட்டிகை



2. சுற்றுலா

சக்கரவர்த்தி கவலையாக இருந்தாலும், குழந்தைகள் மதியம் பாயசத்தோடு ஏற்பாடு செய்த சாப்பாட்டை ஒரு பிடி பிடித்தார்கள். அதில் அவர்களுக்குத் தான் எத்தனை மகிழ்ச்சி!

''என்னிக்குமில்லாமே இன்னிக்கு, நம்ம விடுதிச்சாப்பாடு ஜோருன்னா ஜோரு.''

''சாம்பாரிலே பாத்தி கட்டி, ஒரு வெட்டு வெட்டும் போதே நினைச்சேன்.''

''நானாவது சாம்பாரை சாதத்திலே, ஊத்திக்கிட்டு உருட்டி, உருட்டி உள்ளே தள்ளினேன். நீயோ சாம்பாரை பாயசம் மாதிரி கையிலே வாங்கி உறிஞ்சிக் குடிச்சியே!''

''நான் காரணமாத்தான் அப்படிச் செய்தேன்.''

''என்ன காரணம் தெரிஞ்சுக்கலாமா?''

''முதல்லே வெறும் சாதமா உருட்டி, உருட்டி வயத்து உள்ளே தள்ளிக்கிட்டேன். அதுக்கு மேலத்தான் சாம்பாரைக் குடிச்சேன். உள்ளே போயி அதுவாவே கலந்துக்கும். இது ஒரு புது டெக்னிக்கு!''

''எப்படியோ எதையும் வீணடிக்காமே சாப்பிட்டாச்சு.''

''சாப்பிடப் போட்ட இலையைக் கூடவா?''

''அட ஒரு பேச்சுக்கு சொன்னா'' - என்று கணபதியும், ராஜாவும் பேச்சை முடிக்க, இந்த சமயத்தில் அபிராமி, தனக்கென்று கொடுத்த பாயசத்தை ஒரு டம்ளரில் கொண்டு வந்தாள். இதைப் பார்த்த குயில், ''என்ன! இன்னும் பாயசத்தைக் குடிக்கலியா? அப்படியே வெச்சுக்கிட்டு இருக்கே?'' என்றாள்.

> **இது வரை.....**
>
> அன்பு இல்லத்திற்கு அபிராமி, புதிதாக வந்து சேருகிறாள்! அவள் வருகையை ஒட்டி விடுதிச் சிறுவர்களுக்குப் பாயசம் கிடைக்கிறது.

''அதில்லை. எல்லோருக்கும் பாயசம் கிடைச்சுதான்னு தெரிஞ்சுக்கிட்டு அப்புறம் குடிக்கலாம்னு இருக்கேன்.''

''உனக்குன்னு கொடுத்ததை உடனேயே குடிக்க வேண்டியது தானே?''

''எங்களுக்குன்னு எது கொடுத்தாலும் 'டபக்'குன்னு சாப்பிட்டு விடுவோம்.''

''சாப்பிடாமே யாராவது அப்புறம் சாப்பிடலாம்னு யோசனை செய்துகிட்டு இருந்தா... போச்சு! அதையும் தட்டிப் பறித்துத் தின்பான்...''

''தீராத விளையாட்டுப் பிள்ளை என்ற பாடலுக்கு அபிநயம் பிடிக்கிற மாதிரி செய்திடுவோம்'' என்றார்கள் கௌரியும் குயிலும்.

அப்போது, விவேகானந்தன் வேகமாக ஓடி வந்து... ''குயிலு! நம்ம ராமுவுக்கு பாயசமே கிடைக்கலியாம். பாவம்!'' என்றான்.

''ராமுவா? யாரு ராமு?'' - அபிராமி கேட்டாள்.

''நம்ம விடுதியிலேயே இருக்கிற ஓர் ஊனமுற்ற மாணவன்!''

''நம்ம சக்கரவர்த்தி ஐயா கூட அதை நினைச்சுத்தான் வருத்தமாயிருக்காரு!''

''அப்படியா! கவலையை விடுங்க. எனக்குன்னு கொடுத்த பாயசம் இருக்கு. அதைக் கொடுப்போம். வாங்க,'' என்று ராமுவைப் பார்க்க எல்லோருடனும் புறப்பட்டாள் அபிராமி.

ராமு மிகவும் அடக்கமானவன். நன்கு படிக்கக் கூடியவன். போலியோ மருந்து சரியான தவணைகளில் கொடுக்காததால் பாதிக்கப்பட்டவன். எல்லோரும் அவனைச் சுற்றி நிற்கவே, ''என்ன விஷயம்?'' என்றான் ராமு.

''உனக்குப் பாயசம் கிடைக்கலியா?''

''அதனால் என்ன? எல்லாரும் சாப்பிட்டா நானும் சாப்பிட்ட மாதிரின்னு நினைச்சுப்பேன்.''

''இந்தா, இந்தப் பாயசத்தைக் குடி!'' அபிராமி தன்னிடம் இருந்த டம்ளரை அவன் முன் நீட்டினாள்.

''ஏது இந்தப் பாயசம்?''

''அபிராமிக்குக் கொடுத்தது. அதைக் குடிக்காம இன்னும் அப்படியே வெச்சுக்கிட்டு இருக்கா.''

''எனக்காகத்தானே இன்னிக்கு விடுதியிலே பாயசம் பண்ணியிருக் காங்க? அப்படியிருக்கும் போது எல்லாருக்கும் கிடைக்கதான்னு தெரிஞ்சுக்கிட்டு சாப்பிடணும்னு தோணிச்சு. அதான் காத்துக்கிட்டு இருந்தேன்.''

''உனக்கு நல்ல மனசு'' என்று அபிராமியைப் பார்த்து ராமு சொன்னான்.

''நம்ம எல்லாருக்குமே நல்ல மனசு தான்'' முதல்ல பாயசத்தைக் குடி என்று ராமுவிடம் சொன்னாள் அபிராமி.

''உன் வருகையை முன்னிட்டுப் பண்ணினது. நீ குடிக்கலேன்னா அது நியாயமே இல்லே. எனக்கு வேண்டாம்.''

''சரி, 'நீ பாதி, நான் பாதியாக் குடிக்கலாமா?' என்று கேட்டு, ராமுவை முதலில் பாதிப் பாயசத்தைக் குடிக்கச்



செய்தாள். அபிராமி மீதி பாயசத்தைக் குடித்தாள். இதைக் கவனித்த சக்கர வர்த்தி கவலை நீங்கியவராக ஓர் அமைதிப் பெருமூச்சு விட்டார்.

அபிராமியின் இந்தச் செயல் மற்ற குழந்தைகளுக்கு மகிழ்ச்சியாகவும், ஏன் ஒரு வழிகாட்டலாகவும் அமைந்தது.

இரவு சாப்பாட்டுக்குப் பிறகு, எல்லோரும் விடுதியில், படுக்கையைத் தட்டிப் போட்டுக் கொண்டு படுத்தார்கள். அபிராமியும் படுத்து உறங்கத் தான் முயற்சி செய்தாள். புது இடம். எளிதில் தூக்கம் வரவில்லை. இரு முறை எழுந்து அங்கேயும், இங்கேயுமாக நடந்தாள். மீண்டும் தன் படுக்கையில் வந்து அமர்ந் தாள். விடுதியின் உள்ளே எரிந்து கொண்டிருக் கும் மின் விளக்கையும், அது காற்றில் லேசாக ஆடுவதையும் வெகு நேரம் பார்த்துக் கொண்டே இருந் தாள். பக்கத்தில் படுத்துக் கொண்டிருந்த கௌரி, ஏதோ சொப்பனம் கண்டு புரண்டு படுத்தாள், தூக்கம் கலையப் பெற்றவளாக, ''என்ன அபிராமி, தூக்கம் வரல்லியா?'' என்று கேட்டாள்.

''இல்லை.''


''ஏன் என்னவோ போல இருக்கே?'' என்ற கௌரி, குயிலியையும் எழுப்பி விட்டாள்.

''வீட்டு நினைப்பா?''

''அப்பா, அம்மா நினைப்பா?''

அவர்கள் இருவரும் அம்மா அப்பாவைப் பற்றிக் கேள்வி எழுப்பவும் அபிராமி அமைதி இழந்தாள். தன் கைகளால் கண்களைப் பொத்திக் கொண்டு, தன்னையும் அறியாமல் 'ஓ'வென்று வாய்விட்டு ''அம்மா! அப்பா!'' என்று பலமுறை அழைத்துக் கதறத் தொடங்கினாள். விடுதியில் எல்லாக் குழந்தைகளும் தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு எழுந்து விட்டார்கள். எல்லா விளக்குகளையும் 'பட்' 'பட்' என்று போட்டார்கள். 'ஜான்சி' மாணவியர் விடுதியில் விளக்குகள் எரிவதைக் கண்ட வீர வாஞ்சி விடுதி மாணவர்கள், ''என்ன! என்ன?'' என்று கேட்டுக் கொண்டு ஓடி வந்தார்கள்.

சக்கரவர்த்தியும் பதறி ஓடி வந்து 'ஏன்? என்ன நடந்தது? ஏன் கத் தினே?' என்று விசாரித்தார். அபிராமி யைச் சுற்றி மற்ற குழந்தைகள் கூட்ட மாக அமர்ந் திருந்தார்கள். சக் கரவர்த்தி அபிராமியைப் பார்த்து ''என்ன? ஏம்மா? ஏன் என்னவோ போல இருக்கே?'' என்றார்.



''ஒண்ணுமில்லேங்க ஐயா.''

'''அம்மா, அப்பா'ன்னு அபிராமி கதறிப் புலம்பிட்டா ஐயா'' என்றாள் கௌரி.

''ஏம்மா? ஏன் அப்படிக் கத்தினே? என்னாச்சு?''

''ஐயா! அது வந்து... நான்... இனிமே அப்படிக் கத்த மாட்டேன்.''

இத்தனை பேரையும் காபராபடுத்தி விட்டோமே என்ற குற்ற உணர்வு அவள் பேச்சில் தெரிந்தது.

''கவலைப் படாம தூங்கும்மா... இங்கே உனக்கு எந்தக் குறையும் இல்லாம நாங்க பார்த்துப்போம்'' என்றார் சக்கரவர்த்தி.

''அந்த நம்பிக்கையிலேதான் இங்கே வந்திருக்கேன். எனக்கு இந்த உலகத்திலே சொந்தம்னு சொல்லிக்க யாருமே இல்லை.''

''எங்களை உன் கூடப் பிறந்தவங்களா நினைச்சுக்க.''

''கவலைப் படாமயிரு.''

''சரி! எல்லாரும் விளக்கை அணைச் சுட்டுப் போய்ப்படுங்க'' என்றார் சக்கர வர்த்தி.

குழந்தைகள் அவரவர் இடத்திற்குச் சென்று படுத்தார்கள். அபிராமியும் படுத்தாள். அவளையும் அறியாமல் தூங்கினாள். பொழுது விடிந்தது. பள்ளிக்கூடமும், விடுதியும் சுறுசுறுப்பாகச் செயல்படத் தொடங்கின.

ராஜாவும் கணபதியும் விவேகானந்தனும் மற்ற பிள்ளைகளும், 'ஜான்சி' விடுதிக்கு வந்து குயிலை அழைத்தார் கள்.

''என்ன கணபதி? என்ன விஷயம்? என்ன! எல்லாரும் கூட்டமா வந்திருக்கீங்க?''

''ஒரு முக்கியமான விஷயமாத் தான்.''

''நம்ம பள்ளிக்கும், விடுதிகளுக்கும் நாளைக்கு மாணவர் தலைவர் தேர்வு நடக்கணுமே?''



"சுற்றுலாவா? மாட்டேன்! மாட்டேன்! போங்க, எல்லாரும் போங்க!"

"ஆமாம்!"

"ஐயாவிடம் சொல்ல வேண்டாமா?"

"ஆமாம், அதுக்கு முன்னாலே எனக்கு ஒரு யோசனை" என்று இழுத்தாள் கௌரி.

"ஏகமனதா தேர்வே இல்லாம இந்த வருஷம் மாணவத் தலைவரைத் தேர்ந்தெடுக்கணும். அதுக்கு என்ன வழி?"

"வழி இருக்கு. நம்ம விடுதிக்குப் புதுசா வந்திருக்கிற அபிராமியையே தேர்ந்தெடுத்துட்டா என்ன?"

"சரியான முடிவு. அருமையான யோசனை. அப்போ உடனே போயி சக்கரவர்த்தி ஐயாகிட்டே சொல்லுவோம்."

அறை வாசலில் கூட்டமாகக் குழந்தைகள் நிற்பதை ஜன்னல் வழியாகப் பார்த்து விட்டு உடனே வெளியே வந்த சக்கரவர்த்தி, "கூட்டமா வந்திருக்கிறதைப் பார்த்தா முக்கியமான விஷயமா தோணுதே?" என்று கேட்டார்.

"ஆமாம் ஐயா! நம்ம பள்ளி, விடுதி இரண்டுக்கும் மாணவத் தலைவர் தேர்தல் நடத்தணும்."

"தாராளமா நடத்துங்க."

"தேர்தலே இல்லாமே, ஏகமனதா இந்த வருடம் நாங்க தலைவரைத் தேர்ந்தெடுத்தாச்சு!"

"ரொம்ப சந்தோஷம். யார் உங்களாலே நேசிக்கப் பட்டு, ஏகமனதா தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்?"

குழந்தைகள் அனைவரும் ஒரே குரலில் 'அபிராமி', 'அபிராமி', என்றனர்.

"மிக்க மகிழ்ச்சி" என்றார் சக்கரவர்த்தி.

"இந்த விஷயம் அபிராமிக்குத் தெரியுமா?" என்று மிகவும் நிதானமாகக் கேட்டார் சக்கரவர்த்தி.

காரணம் அந்தக் கூட்டத்தில் அபிராமி இல்லை என்பதை அவர் கவனித்து விட்டார்.

"இனிமேதான் தெரிவிக்கணும்."

"அதை முதல்லே செய்யுங்க. போங்க" என்று குழந்தைகளை உற்சாகத்துடன் அனுப்பி வைத்தார் சக்கரவர்த்தி.

'அபிராமி! அபிராமி', 'அபிராமி', என்று அழைத்துக் கொண்டே சகமாணவ மாணவியர் வருவதைக் கண்ட அபிராமிக்கு ஒரு கணம் தூக்கி வாரிப் போட்டது.

"என்ன? என்ன ஆச்சு?"

குழந்தைகள் ஒருத்தர் மாற்றி ஒருத்தராக அபிராமியின் கைகளைப் பிடித்துக் குலுக்கி 'வாழ்த்துக்கள்', 'வாழ்த்துக்கள்' என்றார்கள்.

"என்ன விஷயம்?"

"இனிமே நீதான், இந்தாண்டுக்கு பள்ளிக் கூடத்துக்கும் விடுதிக்கும் மாணவத் தலைவி."

"நானா! எதுக்கு இதெல்லாம்?"

"அது அப்படித்தான். நாங்க எல்லாரும் ஒன்னா, முடிவு செய்தாச்சு. சக்கரவர்த்தி ஐயாவும் சரின்னு சொல்லிட்டாரு."

"எனக்கு என்னவோ இது சரின்னு படல்லே. என்னை விட சீனியர்கள் எத்தனையோ பேரு இருக்காங்களே?

அவங்களை எல்லாம் விட்டுட்டு, என்னைப் போயி எதுக்குத் தலைவியாத் தேர்ந்தெடுத்தீங்க? நான் புதுசா வந்தவள். இன்னும் ஒரு வாரம் கூட ஆகலே. அடுத்த ஆண்டு பார்க்கலாம். இந்த ஆண்டு விட்டுடுங்க. எனக்கு நம்ம விடுதி பத்தி எதுவுமே தெரியாது.''

''ஒரு பானை சோத்துக்கு ஒரு சோறு பதம்பாங்க.''

''விடுதியிலே இருக்கிற எல்லாருக்கும் பாயசம் கிடைச்சுதான்னு தெரிஞ்சுக்கிட்ட பிறகுதான் உனக்குக் கொடுத்த பாயசத்தைக் குடிக்கணும்னு காத்துக்கிட்டு இருந்தியே. அது ஒண்ணே போதும். எங்க நலன்லே உனக்கு எவ்வளவு அக்கறையும், பரிவும் இருக்குன்னு உணர முடிஞ்சது. சரின்னு சொல்லு, அபிராமி!''

''இது எங்க சந்தோஷத்தை அதிகப்படுத்தும்'' என்று கௌரியும், குயிலும் அபிராமியிடம் கேட்டுக் கொண்டார்கள்.

அபிராமி சிறிது நேரம் மௌனமாக இருந்து, பிறகு எல்லோரையும் பார்த்து லேசாகத் தலையசைத்து 'சரி' என்று சொல்லி தன் பக்கத்திலிருந்த கௌரியையும், குயிலையும் அணைத்துக் கொண்டாள்.

''நன்றி, இப்போ நான் முதல்லே என்ன செய்யணும்?'' என்று கேட்டாள் அபிராமி.

''தலைவர் தேர்தல் முடிஞ்சவுடனே எல்லாருமா சந்தோஷமா சுற்றுலா போறது வழக்கம். அதைத்தான் நீ இப்போ ஏற்பாடு செய்யணும்.''

அபிராமி இதைக் கேட்டதும் திகைத்தாள்! விழித்தாள் மிரண்டு போனாள். வெறி பிடித்தது போல, ''சுற்றுலாவா! சுற்றுலாவா? மாட்டேன்! மாட்டேன்! நான் வரவேமாட்டேன். சுற்றுலாவும் வேண்டாம், ஒண்ணும் வேண்டாம்! போங்க. எல்லாரும் போங்க!'' - என்று விடுதிக் கட்டடமே நடுங்கும்படி கத்தினாள். பிறகு விம்மி விம்மி அழத் தொடங்கினாள்!

எல்லோரும் மிரண்டு போய் நின்றனர்.

(தொடரும்)



ஐஸ் வண்டி போகுது!

அம்மா நம்ம தெருவிலே
ஐசு வண்டி போகுது!
அழைத்துக் கொண்டு வரட்டுமா
ஐசு வாங்கித் தாரியா?

குச்சி ஐசு, குல்பி ஐசு,
கப்பு ஐசு இருக்குதாம்!
எந்த ஐசை எனக்கு அம்மா
இப்போ வாங்கித் தருகிறே!


ஐசு தினம் தின்றாலே
ஆகாதாமே உடம்புக்கு?
சைன்ஸ் டீச்சர் சொன்னாங்க
சாயங்கால வகுப்பிலே.


அம்மா கடைக்கு அழைத்துப்போய்
ஐசு ஒண்ணு வாங்கித்தா!
சும்மா நிறைய கேட்கலை,
சுவைக்க ஒண்ணு போதுமே!


- குழ. கதிரேசன்.

மந்திரத் தீப்பெட்டி


கதை: ஆனந்தி   படம்: கரோ






வீரப்பா! மூன்று அறைகளிலும் மூன்று நாய்கள் உள்ளன. ஜாக்கிரதை! இந்த மந்திரப் பையை நாய் முகத்தில் போட்டு விடு!
சரி!
பாட்டி கயிற்றைத் தளர்த்த...
கீழே கீழே போய்க்கிட்டே இருக்கே... ஒரே இருட்டு வேறே...
அட, விளக்கொளி... கால் தரை தட்டாது....
ம்... முதல் அறைக்குள்ளே நுழையறேன்... மந்திரப் பை தயார்!
ஒரு பெரிய நாய் உறும...
அர்ர்... அர்ர்...
குரைக்காத நாய். கவ்வினால் கோர யமலோகம்தான். பையை வீசுகிறேன்!...




நாய் மயங்கிச் சரிந்தது...
அட! குப்பல் குப்ப-லாச் செப்புக் காசு! முண்டாசுத் துணியில் மூட்டை கட்டிக்கறேன்...
நாய் முகத்திலிருந்து பையையும் எடுத்துக் கொண்டு வேகமாக வெளி-யேறி...
கதவைச் சாத்திடலாம். நாய் மயக்கம் தெளிஞ்சதும் வெளியே வர முடி-யாது...
அடுத்த அறையில்—
அடேயப்பா! இது அதைவிடப் பயங்கரமா இருக்கே!
உர்ர்... உர்ர்ர்...
நாய் தலையில் பையைக் கவிழ்த்ததும்...
ஆ! வெள்ளிக் காசு! செப்புக் காசுகள் இனி எதுக்கு?
செப்புக் காசுகளுக்குப் பதில் வெள்ளிக் காசுகளையும் மந்திரப் பையையும் எடுத்துக் கொண்டு வெளியேறி...
இரண்டாவது நாயிடமும் தப்பியாச்சு. மூணாவது அறையில் என்ன இருக்கோ, பார்த்திட-லாம்...



மூன்றாவது அறையைத் திறக்கவும்...
ஐயோ!
எப்படியோ சமாளித்து மந்திரப்பையைத் தலையில் கவிழ்க்க...
தப்பிச்சேன்!... அதோ கிழவி குறிப்பிட்ட தீப்பெட்டி!
அட, தங்கக் காசுகள்! வெள்ளியைக் கொட்டிட்டு தங்கமா அள்ளிக்கிறேன்...
வெளியே வந்து கதவைத் தாழிட்டதும்...
மந்திரப்பை, தீப்பெட்டி, தங்கக் காசு மூட்டை... ஹூம், கோணி கொண்டு வராமல் போனேனே...
வீரப்பன் கயிறைக் கட்டிக் கொண்டு ஆட்டி அசைக்க...
சரி... சரி... மேலே வரணுமா? இரு, இரு... இழுக்கிறேன், கயிறை!



பொந்துக்கு மேலாக வீரப்பன் தலை தெரிந்ததும்...
தீப்பெட்டி கிடைச்சுதா?
உம்...
அதை முதல்ல என் கிட்ட வீசு...
கொடுக்காட்டா...
கயிற்றை விட்டுடுவேன்... தடால்னு பாதாளத்துல விழுவே. சாக வேண்டியதுதான்...
வீரப்பன் யோசித்தான். பிறகு...
பாட்டி, எனக்குத் தெரியும் உனக்கு தீப்பெட்டி தேவை. முதல்ல என்னை மேலே ஏற்றி விடு, தரேன். இல்லாட்டி கிடையாது...
நீ கெட்டிக்-காரன்!
வேறு வழி இன்றி பாட்டி வீரப்பன் மேலே ஏறி வர உதவினாள்...
இந்தா, பாதி தங்கக் காசு உனக்கு...
ஹூம், யாருக்கு வேணும்? தீப்பெட்டியைத் தா...
வீரப்பனுக்குச் சந்தேகம் உறுதிப் பட்டது...
தங்கக் காசை விட தீப்பெட்டி உனக்கு முக்கியமா? அப்ப, இதுல ஏதோ விஷயம் இருக்கு...


பாட்டி கோபத்துடன் வீரப்பன் மீது பாய்ந்தாள்...
டேய், ஏமாத்தவா பார்க்கிறே!...
வீரப்பன் மந்திரப் பையை வீச...
ஐயோ, வேண்டாம், போடாதே...
கிழவி தலையில் பை கவிழ, மயங்கி விழுந்தாள்...
கிழவி பொல்லாதவ ஆனாலும் பாதித் தங்கக் காசு வைக்கிறேன். மயக்கம் தெளிந்ததும் எடுத்துக்கட்டும்...
மந்திரப் பையை உருவிக் கொண்டு கிளம்பிச் சென்றான் வீரப்பன்...
இனி குபேர வாழ்க்கை தான்!...
வீரப்பன் ஆடம்பரமாக வாழ்ந்தான்... ஊதாரி நண்பர்கள்...
ஏதுடா இவ்வளவு பணம்?
அதெல்லாம் கேட்காதீங்க. சந்தோஷமா அனுபவிங்க...


வெகு சீக்கிரம் பணம் கரைந்து விட...
ஹூம்! இப்ப ஒரு நண்பனும் எட்டிப் பார்க்கலையே?...
வீரப்பனுக்கு தீப்பெட்டி ஞாபகம் வந்தது...
ஒரு தீக்குச்சி கிழிச்சுப் பார்க்கிறேன்...
வீரப்பன் திருக்கிட்டான்...
எஜமானே, என்ன வேணும்?
பணம்!
மூன்று நாய்களும் மூன்று பண முடிப்புகளைத் தர...
ஆகா! தீப்பெட்டி மந்திர சக்தி வாய்ந்தது! அதான் கிழவி இதை அடைய அவ்வளவு ஆர்வமாய் இருந்தாளா!
மறுபடி சுகமான வாழ்க்கை...
நம்ம நாட்டு ராஜகுமாரியை கோட்டைக் காவலில் வைச்சிருக்கார் அரசர், தெரியுமா?
ஏன் அப்படி?


ராஜகுமாரி ஒரு சாதா போர் வீரனைத்தான் மணப்பான் என்று ஜோஸியர் சொன்னாராம் அதைத் தவிர்க்கத்தான்...
தனித்திருக்கும் போது வீரப்பன் தீக்குச்சி கிழிக்க...
இளவரசியைப் பார்க்கணும், கோட்டைக்கு அழைச்சிட்டுப் போங்க...
அடுத்த கணம், வீரப்பன் ராஜகுமாரி எதிரில் நிற்க, நாய்கள் மறைந்தன...
இளவரசி, உங்களைப் பார்க்கும் ஆசையால் உயிருக்குத் துணிந்து வந்தேன்...
உடனே போயிடுங்க, காவலர் பார்த்தால் உங்கள் உயிருக்கே ஆபத்து!...
என்னை யாரும் எதுவும் செய்து விட முடியாது!...
அதே சமயம் வீரப்பனைக் காவலர்கள் சூழ...
அடடா! தீப்பெட்டியை வீட்டிலேயே வைச்சிட்டு வந்துட்டேனே!...
என்ன உளறல்... நட, சிறைச் சாலைக்கு...


சிறைக்கு இளவரசியின் தோழி வந்து சந்தித்தாள்...
இளவரசி ரொம்ப வருத்தப்படுகிறார்கள்! உங்களுக்கு மரண தண்டனை கூட கிடைக்கலாம்!...
ஒரு உதவி செய்... என் வீட்டில் தரையில் கிடக்கும் தீப்பெட்டியையும், ஒரு பையையும் கொண்டு வந்து கொடு... ம்! சீக்கிரம்...
மறுநாள் வீரப்பன் ராஜ சபைக்கு அழைத்துப் போகப்பட்டான்...
அடேய்! என்ன தைரியம் உனக்கு, கோட்டைக்குள் நுழைய!... உனக்கு மரண தண்டனை!
அரசே! தண்டனை நிறைவேற்றுமுன், விளக்கு ஏற்றி என் இஷ்ட தெய்வத்தை மானசீகமாகத் தொழ அனுமதியுங்கள்...
சரி!
வீரப்பன் தீக்குச்சியைக் கிழிக்க...
இவர்கள் மீது பாய்ந்து குதறுங்கள்...


பயங்கர நாய்கள் சீறிப்பாய...
ஐயோ, வெறி நாய்கள்...
தப்பி ஓடுங்க...
ஓடுங்க...
அங்குமிங்கும் ஓடிய அரசர், கடைசியில் வீரப்பனிடமே திரும்பி வந்து...
என்னைக் காப்பாத்து. நீ என்ன சொன்னாலும் செய்யறேன்...
வீரப்பன் மந்திரப் பையை வீச, நாய்கள் அடங்கி, ஒன்றன் பின் ஒன்றாய் மறைந்தன...
பாதாள அறைகளுக்குப் போங்க, வேணும் போது மறுபடி கூப்பிடறேன்!
வீரப்பன் இளவரசியை மணந்து கொண்டான்...
தீப்பெட்டி பத்திரமா இருக்கா? மறந்துட்டா ஆபத்து!...
நீதான் கிடைச்சுட்டியே, இனி அது எதுக்கு?
வீரப்பன் மரப் பொந்துக்குச் சென்று...
ஏன் தீப்பெட்டியைப் பாதாளத்துல போட்டுட்டீங்க?...
மந்திரத்தை நம்பியே வாழ்ந்திட்டிருக்க முடியாது. சொந்தக் காலில நிக்கணும்!
—முற்றும்.

HOW ARE WEDDINGS CONDUCTED ALL OVER THE WORLD?



Find out in the August '93 issue

GOKULAM

The monthly magazine for children

*** OFF TO THE WEDDING!**

– an exciting game on the centre-spread!

BUY YOURSELF A COPY TODAY!

96 PAGES FOR
JUST Rs. 3/-

GOKULAM, EKKADUTHANGAL,
MADRAS - 600 097



முதலில் தொட்டது!

ருஷ்ய நாட்டு நாடோடிக் கதை

மலை அடிவாரம் ஒன்றின் கீழ் அமைந்த ஒரு கிராமத்தில் கந்தன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு வள்ளி என்ற இளம் மனைவி இருந்தாள். வள்ளி மிகவும் அழகானவள். அவர்கள் பரம ஏழைகள். தினமும் கூலி வேலை செய்து பிழைத்து வந்தனர். எனினும் அவர்கள் பெற்ற கூலி அவர்களுடைய உணவுக்கே போதும் போதாததுமாக இருந்தது. இத் தனை வறுமையிலும் அவர்கள் ஒரு வரையொருவர் மிகவும் நேசித்தனர். அவர்கள் வறுமையிலும் ஒற்றுமையுடன் சந்தோஷமாக, நாணயமாக வாழ்க்கை நடத்தி வருவதைக் கிராம மக்கள் மகிழ்ந்தனர்.

அவர்கள் பொருளளவில் ஏழைகளே தவிர அன்பு செலுத்துவதில் அல்ல என்று மக்கள் அவர்களைப் போற்றிப் புகழ்ந்தனர். ஆனால் அந்த கிராமத்தில் இருந்த ராமு என்ற பணக்காரனுக்கு மட்டும் அவர்கள் ஒற்றுமையாய் வாழ்வதைக் கண்டு பொறாமை ஏழையான கந்தனுக்கு இவ்வளவு அழகான, அன்பான மனைவியா என்று பணக்காரனுக்கு மனப்புகைச்சல். எப்படியாவது கந்தனிடமிருந்து வள்ளியைப் பிரித்துத் தன் மனைவியாக்கிக் கொள்ள சமயம் பார்த்திருந்தான்.

கந்தன் ஒரு நாள் காட்டிற்கு விறகு வெட்டி வரச் சென்றான். செல்லும் வழியில் இரண்டு பெரிய தர்ப்பூசணிகளைக் கண்டான். இதுவரை அவன் அது போன்ற பெரிய தர்ப்பூசணிகளைக் கண்டதேயில்லை. கந்தன் மிகவும் மகிழ்ச்சியுடன் அவற்றில் ஒன்றைப் பறித்துக் கொண்டு வீட்டிற்கு வந்து தன் மனைவியிடம் காண்பித்தான்.


பின்னர் கந்தன் கத்தியால் அந்த தர்ப்பூசணியை வெட்டச் சென்றான். ஆனால் வள்ளி அவனைத் தடுத்து ''தர்ப்பூசணிகள் நம் பகுதியில் அதிகம் விளைவதில்லை. எனவே இதை விற்றால், நமக்குக் கிடைக்கும் பணத்தில் உணவு சமைக்க அரிசி வாங்கலாம்'' என்று கூறினாள். கந்தனும் மனைவி கூறிய படியே தர்ப்பூசணியை விற்க அந்த ஊரில் உள்ள பணக்காரரான ராமுவிடம் கொண்டு சென்றான்.

தர்ப்பூசணியைக் கண்டு ராமு மிகவும் மகிழ்ந்து கந்தனுக்கு நிறையப் பணம்தந்தான். மேலும் ''இது போன்ற பெரிய தர்ப்பூசணி இன்னொன்று இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?'' என்றான்.

கந்தன், 'தான் அந்த தர்ப்பூசணியைப் பறித்த நிலத்தில், இன்னொரு பெரிய பழம் இருந்ததைக் கண்டேன்' என்று கூறினான்.

ராமு, ''உடனே அந்த இடத்திற்குச் சென்று அந்த மற்றொரு தர்ப்பூசணியையும் கொண்டு வா. நீ அதைப் பறித்துக்

அ. திருமுருகன்



கொண்டு வந்தால், நீ என் வீட்டில் முதலில் எதைத் தொடுகிறாயோ, அதை உனக்குத் தந்து விடுகிறேன்; ஆனால், நீ அதைக் கொண்டு வராவிட்டால், நான் உன் வீட்டில் எதை முதலில் தொடுகின்றேனோ, அதை எனக்குத் தந்து விட வேண்டும். என்ன, சம்மதமா?'' என்று வஞ்சனையாகக் கேட்டான்.

கந்தனும் சம்மதித்தான். அவனிடம் விடை பெற்றுக் கொண்டு வீடு திரும்பினான்.

கந்தன் மனைவியிடம் சென்று நடந்ததைக் கூறினான். 'நான் மட்டும் அந்த இன்னொரு பழத்தைக் கொண்டு வந்து ராமுவிடம் கொடுத்து விட்டால், நமக்கு வறுமையில்லை' என்றான்.

வள்ளியும் மகிழ்ந்து, ''நீங்கள் அந்த தர்ப்பூசணியைப் பறித்து வந்த இடத்தை மறந்து விடவில்லையே?'' என்று கேட்டாள்.

''நான் ஏன் மறந்து விடப் போகிறேன்? அந்த நிலம் நமது கிராமத்தின் எல்லையின் முடிவில் உள்ள காட்டின் இடது பக்கத்தில் அல்லவா? இருக்கிறது?'' என்றான்.

''உடனே சென்று அதைக் கொண்டு வாருங்கள்'' என்றாள் வள்ளி.

''நீ ஏன் இவ்வளவு அவசரப்படுகிறாய். அதைப் பிறகு கொண்டு வந்தால் போகிறது'' என்றான் கந்தன்.

''காலந்தாழ்த்திச் செல்வதால் வரும் ஆபத்தை நீங்கள் ஏன் உணரவில்லை?'' அந்தப் பணக்காரன் ராமு, அந்த இன்னொரு பழத்தைப் பறித்துக் கொண்டு சென்றுவிட்டால், நீங்கள் தோற்றுப் போவீர்கள். உடனே அவன் நம் வீட்டிற்கு வந்து என்னைத் தொட்டு, என்னைக் கொண்டு சென்றுவிடுவான்'' என்று எச்சரித்தாள் புத்திசாலி வள்ளி.

இவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்ததை பணக்காரனின் வேலையாட்கள் இருவர் ஒளிந்து கேட்டுக் கொண்டிருந்தனர். தர்ப்பூசணி இருக்கும் இடத்தை அறிந்து கொண்ட அவர்கள், விரைந்து சென்று அதைப் பறித்துக் கொண்டு, ராமுவிடம் சென்று கொடுத்துவிட்டனர்.

வள்ளியின் எச்சரிக்கையில் உண்மை இருப்பதை உணர்ந்த கந்தன், உடனே அந்த இடத்திற்கு விரைந்தான். அங்கு தர்ப்பூசணி இல்லாதிருப்பதைக் கண்டு திடுக்கிட்டான். தான் அங்கு வருவதற்கு சற்று முன்புதான், அதை யாரோ பறித்துச் சென்றிருக்கக் கூடும் என்று எண்ணினான்.

மிகவும் மனம் உடைந்த கந்தன் கால் போன போக்கில் தான் எங்கு செல்கிறோம் என்பதை அறியாமல் நடந்து கொண்டே போனான்.

நீண்ட நேரத்திற்குப் பின்பே, தான் எங்கு செல்கிறோம் என்பதனை உணர்ந்தான். தான் ஒரு ஓடைக்கருகில் இருப்பதை உணர்ந்து, வருத்தத்துடன் அங்கிருந்த பாறை ஒன்றின் மீது அமர்ந்தான்.


அப்பொழுது ஒரு ஈனக் குரல் உதவி கேட்டுக் கூக்குரலிட்டது. கந்தன் குரல் வந்த திசையை நோக்கினான். ஒரு கிழவர் சுழலில் சிக்கிக் கொண்டு உயிருக்காகப் போராடுவதைப் பார்த்தான். பாய்ந்து சென்று அந்தப் பெரியவரை கரைக்கு இழுத்து வந்தான்.

ஆபத்திலிருந்து மீண்ட அந்தப் பெரியவர் கந்தனுக்கு நன்றி கூறினார். ''இந்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேனோ!'' என்றார். ''உனக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால் தயங்காமல் என்னிடம் கேள். நான் என்னால் இயன்ற உதவியை உனக்குச் செய்கிறேன்'' என்று கூறினார்.

ஆனால் கந்தனோ, ''நான் இருக்கும் நிலையில் எனக்கு யாராலும் உதவ இயலாது'' என்று கூறி மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தான்.

''உன்னுடைய துன்பத்திற்கு என்ன காரணமாக இருந்தாலும் கூறு, நான் உனக்கு என்னால் இயன்ற அறிவுரையைக் கூறுவேன்'' என்று வற்புறுத்தினார் அந்தப் பெரியவர்.

கந்தன், நடந்த அனைத்தையும் அவரிடம் கூறினான். அவன் கூறியதனைத்தையும், கேட்ட பெரியவர் நீண்ட சிந்தனைக்குப் பிறகு, ''சரி, நான் சொல்வதைப் போல் செய். நேரே உன் வீட்டிற்குப் போ. உன் மனைவியை பரண் மேல் ஒளிந்து கொள்ளச் சொல்லி விட்டு, உன் வீட்டிற்கு அருகாமையில் உள்ள சிலரை சாட்சிக்கு அழைத்துக் கொள். பிறகு பணக்காரன் ராமுவிற்கு ஆள் அனுப்பி தகவலைச் சொல். பிறகு உடையும் நிலையில் உள்ள ஓர் ஏணியைப் பரணுக்





குக் கீழே சாய்த்து வைத்து விடு. ராமு உன் வீட்டிற்கு வந்ததும், உன் மனைவியைத் தேடிவிட்டு, ஏணிமேல் ஏறும் போது, அவன் அதன் மேல் கையை வைப்பான். உடனே நீ, ஒப்பந் தப்படி முதலில் என் வீட்டில் தொட்ட பொருள் இந்த ஏணியே' என்று கூறி அவனிடம் ஏணியைக் கொடுத்து விடு'' என்று யோசனை கூறி வெற்றிக்கு வாழ்த்துக் கூறி விடைபெற்றார்.

மனதில் பாரம் குறைந்தவனாக கந்தன் வீடு நோக்கி விரைந்து சென்றான்.

வீட்டிற்குச் சென்றவுடன், பெரியவர் கூறியது போல் முதலில் மனைவியைப் பரண் மேல் ஒளிந்து கொள்ளச் செய்தான். உடைந்த நிலையில் உள்ள ஓர் ஏணியை அதனருகில் சாய்த்து வைத்து விட்டு, அக்கம் பக்கத்தில் உள்ள வர்களை சாட்சிக்கு அழைத்தான். பிறகு ஓர் ஆள் மூலம் ராமுவை வர வழைத் தான். அங்கு வந்து சேர்ந்த ராமு வீடு முழுவதும் வள்ளியைத் தேடினான். அவள் பரண் மேல் இருப்பதைக் கண்டு, கீழே வரும்படி அழைத்தான்.

வள்ளியோ, ''எனக்கு இங்கே வேலை இருக்கிறது. என்னால் இப் பொழுது கீழே வர இயலாது'' என்றாள்.

உடனே ராமு ஜாக்கிரதையாக அங்கிருந்த ஏணியின் மீது, கையைக் கட்டிக் கொண்டு அதைத் தொடாமல் ஏறத் தொடங்கினான்.


முதல் இரண்டு படிகளைக் கடந்து மூன்றாவது படி மீது ராமு கால் வைத்த போது, உடையும் நிலையில் உள்ள ஏணி முறிந்து கீழே தரையில் விழுந்தான். விழுந்த அதிர்ச்சியில் ஒப்பந்தத்தை மறந்து, தன் மேல் விழச் சாய்ந்த ஏணியை இரு கைகளாலும் தடுத்து நிறுத்தினான்.

உடனே கந்தன் மகிழ்ச்சியுடன், ''ராமு, உன்னுடைய முறையை நீ பயன்படுத்திக் கொண்டாய். எனவே நம் ஒப்பந்தப்படி இந்த ஏணியை நீ கொண்டு செல்லலாம்'' என்று கூறினான்.

சாட்சியாளர்கள் முன் இனி எந்தத் தந்திரமும் பலிக்காது என்று நினைத்த ராமு, தோல்வியை ஒப்புக் கொண்டு, ஏணியைச் சுமந்து கொண்டு வீடு நோக்கி நடந்தான்.

தெருவில் இருந்த மக்கள் உடைந்த ஏணியைக் கொண்டு செல்லும் ராமுவைக் கண்டு கிண்டல் செய்தனர். தன்னுடைய தீய எண்ணத்திற்கு இதுவே சரியான பாடம் என்பதை ராமு உணர்ந்து, தன்னை மாற்றிக் கொண்டான்.

அந்த இரண்டும் எவை?



இங்குள்ள 12 கட்டங்களில் இரண்டு மட்டும் ஒரே மாதிரித் தோற்றம் கொண்டவை. அவற்றைக் கண்டு பிடியுங்கள்.

விடை 5, 10

கருத்து : M.A. செல்வகுமார்



பிருந்தாவனக் கதையரங்கம்

பணம் எங்கே?

மாலன், வேலன் இருவரும் வியாபாரிகள். வேலனுக்குக் கை நீளம். ஒரு முறை மாலனும் வேலனும் எல்லையூர் என்ற ஊருக்குப் பக வாங்கச் சென்றார்கள். மாலனிடம் ஆயிரம் ரூபாய் இருந்தது. ஆனால், வேலனிடம் ஐநூறு ரூபாய்தான் இருந்தது. இரவு வந்தது. அவர்கள் ஓர் சத்திரத்தில் தங்கினர்.



வேலன் சிறிது நேரத்திற்குப் பின் நீர் குடிக்கச் சென்றான். அப்போது மாலன் தன் பணத்தை வேலன் திருடி விடுவானோ எனப் பயந்து அதை வேலனின் தலையணையின் அடியில் ஒளித்து வைத்து விட்டு நிம்மதியாக உறங்கினான்.

நடு இரவில் வேலன் மாலனின் பணத்தைத் திருடப் பார்த்தான். ஆனால், வேலனுக்குப் பணம் கிடைக்க வில்லை. எப்படிக் கிடைக்கும்? அதைத் தான் மாலன் வேலனின் தலையணைக் குக் கீழேயே ஒளித்து வைத்திருந்தானே?

ஏமாற்றத்துடன் வேலன் உறங்கினான். காலை ஆனவுடன் வேலன் மாலனிடம், ''உன் பணத்தை எங்கே வைத்தாய்?'' எனக் கேட்டான்.

அதற்கு மாலன், ''நீ திருடுவாய் எனத் தெரிந்து அதை உன் தலையணைக்கு அடியிலேயே ஒளித்து வைத்து விட்டேன்,'' என்றான்.

வேலன் வெட்கத்தால் தலைகுனிந்தான்.

- ச. பிரசன்னா வெங்கடேஷ்.

நீதான் தீர்க்கணும்



முத்து ஊறுகாய்ப் பைத்தியம். அவனுக்காகவே அம்மா விதம் விதமாய் ஊறுகாய் போடுவாள். அன்று அம்மா புதிதாக மாங்காய் ஊறுகாய் போட்டிருப்பதாகக் கூறியதும், முத்துவால் பொறுக்க முடியவில்லை.

"அக்கா, எனக்குப் பசிக்கிறது. சாப்பிடலாம் வா" என்று ராதுவை அழைத்தான்.

"இந்தக் கணக்கைப் போட்டு முடிச்சிட்டு வரேன். இருடா" என்று ராது கூறியதை, அவசரக் குடுக்கை முத்துவால் கேட்க முடியவில்லை. தானே உள்ளே போனான். ரசஞ் சாதத்தை அவசரம் அவசரமாகச் சாப்பிட்டு முடித்து, மோருக்கு சாதம் போட்டுக் கொண்டான். மோரை ஊற்றிக் கொண்டான்.

"டேய் முத்து, கொஞ்சம் இருடா. ஊறுகாயை நான் வந்து போடறேன். ஜாடி நிறைய இருக்கு" என்று ராது கூறிக் கொண்டிருக்கும்போதே 'தடால்' என்று ஏதோ சப்தம் கேட்டது.

ராது பதறிக் கொண்டு உள்ளே ஓடிப் பார்த்தாள்.

முத்துவின் தட்டில் ஒரு ஜாடி ஊறுகாயும் கவிழ்ந்திருந்தது! நல்ல காலம் ஜாடி உடையவில்லை.

"அந்த ஊறுகாயை அப்படியே ஜாடியில் வழித்துப் போட்டு மூடி மூலையில் வை. தினமும் காலையிலும் மாலையிலும் ரெண்டு தடவை நீயே குலுக்கி மூடிவை. எச்சில் ஊறுகாய் தீரும்வரை நீதான் போட்டுத் தீர்க்கணும். உன் அவசரக்குடுக்கைத் தனத்துக்கு இதுதான் தண்டனை" என்றாள் அம்மா.

- ந. திருமூர்த்தி.

சகிக்கலே!

நளினி ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவி. சுமாராகப் படிப்பாள். திடீரென்று சென்ற மாதம் அவளுக்கு பெரியம்மை போட்டு அவளுடைய முகத்தில் தழும்புகளை ஏற்படுத்தி விட்டுச் சென்றது.

அதிலிருந்து நளினி ஒரு மாதிரி யாக இருந்தாள். யாரிடமும் சரியாகப் பேசவில்லை. சரியாகச் சாப்பிடுவதில்லை. தனது அழகு அம்மையால் போய் விட்டதாக எண்ணி வருந்திக் கொண்



டிருந்தாள்.

அதற்கேற்றாற்போல் அவளது வகுப்பு மாணவி மீனா - ''நளினி! உனது முகத்தைப் பார்க்க சகிக்கலை! சே! அசிங்கமா கறுத்த பொட்டுக்களோடு... போடி ஐய்யே!'' என்று அவ்வப்போது கூறித் தனது மனதுக்கு மகிழ்ச்சியைத் தேடிக் கொண்டாள். அன்று மதியமும் அவ்வாறு அவளுக்கு மீனா ஆத்திர மூட்டியதால் வீட்டிற்கு வந்து விட்டாள் அழுகையுடன்.

''நளினி! அழகுன்றது உடலில் இல்லே... மனசுலேதான் இருக்கு. அம்மை போட்டு முகம் அழகு போச் சென்னு அழுறியே... நாளடை வில் இது மறைஞ்சிடும். ஆனா உலகத்துல எத் தனையோ பேர் ஈடுசெய்ய முடியாத இழப்புடன் வாறாங்களே... அதை நினைக்க சந்தோஷப்படு'' - என்று ஆதர வுடனும் அன்புடனும் ஆறுதல் கூறி னாள் நளினியின் தாய்.

ஏதோ அந்த நேரத்திற்கு மன துக்கு ஆறுதலாய் இருந்தாலும் மனம் நிம்மதி யடையவில்லை நளினிக்கு. மாலை வரை அழுதபடியே இருந்தாள்.

அன்று மாலை, ஊண்டியில் உள்ள கோவிலுக்குப் போக அம்மாவுடன் பஸ்ஸுக்காகக் காத்திருந்தாள் நளினி.

''ஐயா! கை கால் வராத கண் தெரி யாதவன். ஏதாவது போடுங்க ஐயா!'' - என்ற குரல் கேட்டு இரு வரும் திரும் பினர்.

ஒரு சிறிய பலகையில் நான்கு சக்க ரங்கள் பொருத்தப்பட்டு அதன் மேல் ஓர் மனிதர் கை கால் சூம்பிய நிலையில் அமர்ந்திருந்தார்.

அதைப் பார்த்த நளினிக்கு என் னவோ போல் ஆகிவிட்டது. இப் படியும் சிலர் இருக்க, நாம் அழகு குறைந்து விட்டதற்காக அழலாமா... என்று சிந்திக்கத் தொடங்கி னாள். அது வரை இருந்த மனக்குறையை அன் றுடன் போக்கினாள் நளினி.

- எ. பச்சையப்பன்.

வெள்ளை முயல்



காட்டில் வாழும் வெள்ளை முயல்
கடுகளவேனும் அஞ்சிடுமா?
வேட்டை ஆடும் வீரனுக்கும்
வெறி ஓநாய்க்கும் அகப்படுமா?

சிறுத்தை சிங்கம் எத்தனையோ?
சிக்கிவிட்டால் முயல் கதி எதுவோ?
உறுத்துப் பார்க்கும் குள்ளநரி;
உறங்கிவிட்டால் பின் விழிப்பேது?

கள்ளப் பார்வை செந்நாய்க்கும்
கண்ணி வைக்கும் வேடருக்கும்
குள்ள முயல்தான் பயப்படுமா?
கட்டிய வலையில் அகப்படுமா?

யாருக்குத் துன்பம் வரவில்லை?
எவர்தான் தொல்லைப் படவில்லை?
முயல்போல் நாமும் மனங் கொண்டால்
எது வந்தாலும் கவலை இல்லை!

- பக. தனபாலன்

நாய் எலும்பைக் கடிப்பது ஏன்?



ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்த முத்துமணிக்குக் கோபம் கோபமாக வந்தது. அதற்குக் காரணமும் இருந்தது.

முத்துமணி அருமை பெருமையாக ஒரு நாயை வளர்த்து வந்தான். அதன் பெயர் சீசர். வேளா வேளைக்கு அதைச் சோப்புப் போட்டுக் குளிப்பாட்டி, உண்ணி எடுத்து, சத்துள்ள உணவாகப் போட்டு அதைக் கண்ணும் கருத்துமாக முத்துமணி தானே கவனித்து வந்தான். அவர்கள் வீட்டில் சைவம். அதனால் வாரத்திற்கு ஒருமுறை அதைப் பிரபலமான அசைவ ஓட்டலுக்கு அழைத்துப் போய்ப் பிரியாணி வாங்கிக் கொடுப்பான். அவன் பந்தை வீசினால் அது எடுத்து வரும். அவன் சைகை காட்டினால் பின்கால்களால் நின்று, முன்கால்களை உயரத் தூக்கி நடந்து வித்தை காட்டும்.

இத்தனை புத்திசாலியான நாயைப் பற்றி முத்துமணிக்கு அளவில்லாத பெருமை. அதைப் பற்றி நண்பர்களிடம் அவன் பீற்றிக் கொண்ட போது, பாபு குறுக்கிட்டான்.

''முத்து, உன்னுடைய நாய் பெருமைமிக்க நாய் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால், எலும்பைக் கடித்து பூமியில் புதைத்து வைக்காத நாய்களோ, சுவர் ஓரமாகவோ விளக்குக் கம்பத்தின் ஓரமாகவோ காலைத் தூக்கி சிறுநீர் கழிக்காத நாய்களோ உலகத்தில் இல்லை. வாய்ப்புக் கிடைத்தால் எல்லா நாய்களும் இதைச் செய்யும்'' என்றான் பாபு.

முத்துமணிக்குக் கோபமான கோபம். ''எங்க சீசர் அப்படிப்பட்டது இல்லேடா பாபு. பந்தயம் வேணுமானால் கட்டறேன்'' என்று ரோஷத்தோடு சவால் விட்டான்.

''சவால் விட்டா இதில தோத்துப் போய்டுவே. முதலில் உன் நாயைக் கவனித்துப் பார்'' என்றான் பாபு.

அதன்படி அன்று காலை முதல், முத்துமணி சீசரைக் கவனித்துக் கொண்டிருந்தான். தோட்டத்தில் அவிழ்த்து

ரேவதி

சுதந்திரமாக விடப்பட்டிருந்த சீசரை அவன் விடாது கவனித்துக் கொண்டிருந் தான்.

சீசர் குருவியைத் துரத்தியது. தும்பியை விரட்டியது. மண்ணில் புரண்டது. திடீரென்று கிரில் போட்ட கேட்டுக்குக் கீழே இருந்த இடைவெளியில் உடம்பைக் குறுக்கிக் கொண்டு வெளியே சென்றது.

முத்துமணியும் விடாது கவனித்தான். தெரு ஓரமாக ஓடிய சீசர் இரண்டு வீடு தள்ளி இருந்த தந்திக் கம்பத்தின் அடியில் நின்றது. முகர்ந்து பார்த்து விட்டு, காலைத் தூக்கி...


முத்துமணி பல்லை 'நறநற'வென்று கோபத்தால் கடித்துக் கொண்டான். இன்னும் என்ன செய்கிறது பார்க்கலாம் என்று கவனித்துக் கொண்டிருந்தான். மூன்றாவது வீட்டு வாசலுக்கு ஓடிய சீசர், திரும்பி வந்த போது அதன் வாயில் ஒரு எலும்புத் துண்டு இருந்தது!

கிரில் கதவின் கீழே இருந்த இடைவெளி வழியாக, போன மாதிரியே உடம்பை நுழைத்து சீசர் வீட்டுக்குள் வந்தது. தோட்டத்தில் மாமரத்தின் அடியில் வசதியாக உட்கார்ந்து கொண்டு, கொண்டு வந்த எலும்பைக் கடித்தது. அதிலே என்ன இன்பம் கண்டதோ தெரியவில்லை. அரைமணி நேரம் அந்த எலும்பைப் பற்களுக்கு இடையே வைத்துக் கடித்தது. பிறகு தரையைக் கிளறி அந்த எலும்புத் துண்டைப் புதைத்தது. வீட்டுக்குள் வந்தது. முத்துவைக் கண்டதும் வாலைக் குழைத்து, செல்ல உறுமல் உறுமியபடி அவனிடம் கொஞ்சத் தாவியது.

முத்துமணிக்கு வந்ததே கோபம். அதை அப்படியே பிடித்துத் தள்ளி விட்டு பிரம்பை எடுத்தான்.

''சனியனே, உன்னை எத்தனை செல்லமாக வளர்க்கிறேன்! உயர்ந்த வகை சோப்புக் குளியல், பிஸ்கட், பிரியாணி எல்லாம் தருகிறேன். இப்படி அற்பமாக; தெரு நாயைப் போல் கம்பத்தினடியில்... எச்சில் எலும்பைப் பொறுக்கிக் கொண்டு வந்து, அதைப் புதைத்து வேறு வைக்கிறாய்! உனக்கு என்ன கேடு வந்தது?''

முத்துமணி சீசரை அடித்து விட்டான்! அது பயந்து நடுங்கி ஒடுங்கினாலும் வாலை ஆட்டுவதை நிறுத்தவில்லை. அடியிலிருந்து தப்பி ஓடவும்




முயல வில்லை. ஆத்திரம் அடங்காத முத்துமணி மறுபடி பிரம்பை ஓங்கினான்.

ஓங்கிய கையை யாரோ தடுத்துப் பிடித்தார்கள். முத்துமணி திரும்பிப் பார்த்தான். பாபுதான் நின்று கொண்டிருந்தான்.

''நீ இப்படிச் செய்வாய் என்பதை நான் எதிர்பார்த்தேன். அதனால்தான் தடுக்க ஓடி வந்தேன்'' என்றான் பாபு.

''பாபு, நீ கூறியது எல்லாம் சரி. இந்த சீசர், எலும்பைப் பொறுக்கிக் கொண்டு வந்து கடித்து புதைத்து வைக்கிறது. ஒரு ஓரத்தில், டெலி போன் கம்பத்தடியில் தெரு நாயைப் போல் சிறுநீர் கழிக்கிறது'' என்று விம்மினான் முத்துமணி.



அவனை சமாதானப்படுத்திய பாபு, ''முத்துமணி, எலும்பைக் கடித்துப் புதைத்து வைப்பதும், தெரு ஓரத்தில் சிறுநீர் கழிப்பதும் நாய்களுக்கே உள்ள இயற்கைக் குணம்'' என்றான்.

முத்துமணி வியப்போடு பாபுவை நோக்கினான்.

''உண்மைதான் முத்து. நாய்கள் ஓநாய்க் குடும்பத்தைச் சேர்ந்தவை என்பது உனக்குத் தெரியுமல்லவா? காட்டில் இருந்த அவை, வீட்டில் செல்லப் பிராணி களாக மாறிவிட்ட போதும் சில பரி ணாம குணங்களை மாற்றிக் கொள்ள முடியாது திண்டாடு கின்றன. கம்பங் களுக்கு அடியே சிறுநீர் கழிப்பதும், எலும்பு பொறுக்கிப் புதைத்து வைப் பதும் இந்த மாதிரி தங்கி விட்ட குணங் களில் குறிப்பிடத்தக் கவை.''

பாபு தொடர்ந்தான் :

''காட்டில் வாழும் ஓநாய் தங்கள் எல்லைகள் வகுத்துக் கொள்ள ஒருசில குறிப்பிட்ட மரங்களுக்கு அடியில் சிறுநீர் கழித்து வைக்கும். 'இதுவரை என் எல்லை. இதைக் கடந்து வருவது அத்துமீறுவதாகும்' என்று அதன் பொருள். இந்த எல்லை குறிப்பதை இன்னமும் வீட்டுப் பிராணிகளாக மாறிய பிறகும் நாய்கள் செய்து வருகின்றன. இதே போல்தான், எலும்பைக் கடிப்பதும், அதைப் புதைத்து வைப்பதும். காட்டில்

ஓநாய்களாகத் திரிந்த போது, உணவுத் தட்டுப்பாடு இருந்திருக்கும் அல்லவா? அதனால் கிடைத்த இரையைத் தின்றது போக, பூமிக்குள் புதைத்து வைக்கும். இரை கிடைக்காத போது வெறும் எலும்புகளைக் கடித்தே மன நிறைவு கொள்ளும். இந்த வழக்கத்தை இன்னும் மாற்றிக் கொள்ளாது நாய்கள் கடைப்பிடிக்கின்றன.''

''ஆமாம் பாபு, இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டான் முத்து மணி.

''என் மாமா, ஒரு கால்நடை மருத்துவர். அவர் கூறியவைதான் இது. இதற்காக சீசரை அடிக்காதே. வெளியே போகாது கட்டி வேண்டுமானால் போடு. ஆனால் அடிக்காதே'' என்று கூறிய பாபு, ''முத்து, இன்னொரு வேடிக்கை. உன்னுடைய சீசர், கைக் குட்டையைப் போட்டால் எடுத்துக் கொண்டு வருமல்லவா? எங்கே... ஒரு நீல வண்ணக் கைக் குட்டையையும், ஒரு சிவப்பு வண்ணக் கைக் குட்டையையும் போட்டு, உன் சீசரை சிவப்பு கைக்குட்டையைக் கொண்டு வரச் சொல்'' என்று கேட்டான்.

முத்துமணி, நீல, சிவப்பு வண்ண கைக்குட்டைகளைப் போட்டு, ''சீசர், சிவப்பு கைக்குட்டையை எடு'' என்றான். சீசர் இரண்டையும் எடுத்து வந்தது!

''முத்து, நாய்கள் நிறக் குருடு. அவைகளால் எந்த நிறத்தையும் பிரித்து உணர முடியாது. எல்லாமே கறுப்புத் தான்'' என்றான் சிரித்தபடி.


அறிவியல் உண்மைகள்

★ நாய்கள் ஓநாய்களின் பரம்பரையே. எலும்பைக் கடிப்பதும் புதைத்து வைப்பதும், பரிணாம வளர்ச்சியில் மாறாது நின்று விட்ட குணங்கள்.

★ கம்பங்களுக்கு அடியில் சிறுநீர் கழிப்பதும் மாறாது நின்று விட்ட பழக்கமே. இது அதன் எல்லையைக் குறிக்க எடுக்கப்படும் நடவடிக்கை.

★ நாய் ஒரு நிறக் குருடு. எந்த வண்ணத்தையும் அதனால் பிரித்து உணர முடியாது. எல்லாமே கறுப்புத்தான்.

இன்பம்!



கடமையில் கருத்தாய் நின்று
காலத்தில் முடிப்பது இன்பம்
மடமையை வென்று நித்தம்
மாட்சிமை புரிதல் இன்பம்!

பற்றுடன் பாடங் கேட்டுப்
பள்ளியில் பயில்வது இன்பம்;
தெற்றென விடைதனைக் கூறித்
திறமையைக் காட்டுதல் இன்பம்!


நலமுடன் உடலைப் பேணி
நெடுநாள் வாழ்வது இன்பம்!
பலமுடன் மேனி கொண்டு
பாரினில் திகழ்வது இன்பம்!

வாய்மை வழியில் என்றும்
வாழ்ந்திட முனைவது இன்பம்;
சேய்மை எனினும் கல்வி
தேடிப் பெறுதல் இன்பம்!


- தி.ஆ. இராமசாமி

யார் எதைக் கண்டு பிடித்தார்கள்? - போட்டி

இன்றைக்கு நாம் பயன்படுத்தும் பல பொருள்கள் அறிவியல் அறிஞர்களின் கண்டு பிடிப்பே. இந்த மாதிரி அன்றாட வாழ்க்கையில் நாம் பயன்படுத்தும் பத்துப் பொருள்கள் இங்கே உள்ளன. இவற்றைக் கண்டு பிடித்தவர்களின் பெயர்களும் தனியாகத் தரப்பட்டுள்ளன. எந்தப் பொருள் யாரால் கண்டு பிடிக்கப்பட்டது என்பதை, உரிய பொருள்களின் மேல் அதற்குரிய கண்டு பிடித்தவரின் பெயரை ஒட்டி, ஆசிரியர் கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். பரிசு கண்டிப்பாக உண்டு. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.



ராபர்ட் ஃபல்டன்
தாமஸ் எடிசன்
ஜான் ராண்ட்
ஹெர்மென் டிரஸ்ஸர்
ஏர்ல் டிக்சன்
எலிஷா ஜி.ஓட்டிஸ்
லால்டர் ஹண்ட்
மார்வின் சி. ஸ்டோன்
கிரகாம்பெல்
ஜான் லோகி பெய்ரெட்



யார் எதைக் கண்டு பிடித்தார்கள்? - போட்டி

பெயர் :...

வயது :...


முகவரி :...

....

....

பின்கோடு :...


முடிவு தேதி 15.8.93



நம்ம விஷம் ரொம்ப கடுமையானதா?
ஆமாம், ஏன்...?
என் நாக்கையே நான் கடிச்சுக்கிட்டேன் அதான் பயமா இருக்கு...
சிரிப்..
உங்க பையனுக்கு 'அல்வா' மேலே ரொம்ப விருப்பமா? தாமஸ் ஆல்வா எடிசன்னு எழுதுவதற்கு, தாமஸ் 'அல்வா' எடிசன்னு எழுதறானே?
முயல், ஆமை போட்டியில் முயலின் தோல்விக்கு என்ன காரணம்?
முயலாமை!
-ஆர்.ஆர். பூபதி
குதிரையை கடலில் இறக்கினால் என்னவாகும்?
கடல் குதிரை ஆகும்!
இரா.சரவணன்


மனிதனின் மூளை

ஆழி———


உடல் நிறையில் மனிதனின் மூளை $\frac{1}{48}$ பாகம். யானைக்கு $\frac{1}{600}$ பாகம், திமிங்கிலத்திற்கு $\frac{1}{5000}$ பாகம். உடலையும் மூளையையும் ஒப்பிடும் போது, அதிக எடையுள்ள மூளையைக் கொண்டிருப்பது மனிதன் தான்!
மனிதனின் மூளையின் எடை சுமார் 1.4 கிலோ.








உறுதி இல்லாத, தசை இனத்திலும் சேராத பொருள் மூளை. அசைவில்லாத இந்த உறுப்பு சுருங்குவதோ விரிவதோ இல்லை!




மூளையின் வேலைகள்



மனித மூளையின் மடக்குகளை விரித்தால் சுமார் 2500 ச. செ. மீ. பரப்பளவு இருக்கும்!



ஆணின் மூளைக்கும்
பெண்ணின் மூளைக்கும்
வேறுபாடு உண்டு.
ஆணின் மூளையை விட
பெண்ணின் மூளை
அளவு சிறியது. ஆணின்
மூளை 48 அவுன்ஸ்.
பெண்ணின் மூளை 42½
அவுன்ஸ். ஆனால்,
உடலமைப்புடன்
ஒப்பிடும் போது
உடலுக்கேற்ற
மூளைதான்!




செவி நரம்புகளின்
வழியாக மட்டும்
வரும் தகவல்கள்
விநாடிக்கு
10,000 க்கு மேல்
இருக்கின்றன.
கண்ணிலிருந்து
வரும் தகவல்கள்
ஒரு விநாடிக்குப்
பல லட்சங்களுக்கும்
அதிகம். மூளை
இந்தத் தகவல்
களில் முக்கியமான
வற்றைப்
பாகுபடுத்தி
அவசியமற்றதை
அகற்றுகிறது.



சராசரி மனிதர்கள்
தங்கள் மூளையில்
10,000 -இல் ஒரு பாகத்தைத்
தான் பயன்படுத்துகிறார்
கள். சராசரி மனிதர்கள்
தங்கள் மூளையில்
90,000 கோடி வார்த்தை
களைப் பதிவு செய்து
கொள்ள முடியும்!






இரத்தத்தில் உள்ள 25%
ஆக்ஸிஜன், மூளையால்
பயன்படுத்தப்பட்டு விடுகிறது.
இதயத்திலிருந்து செலுத்தப்
படும் இரத்தத்தில் 20%
மூளைக்கே சரியாகிவிடு
கிறது. மூளைக்கு அதிக
வேலை கொடுக்கும் போது
3% அதிகமாக அதுக்குச்
செலுத்தப் படுகிறது.


சுமார் ஒரு துளி இரத்தம்
15 விநாடி கூட மூளைக்குச்
செல்லாது தடை பட்டால்
மயக்கம் வந்துவிடும்.
சுமார் 4 நிமிடங்களுக்குச்
சீரான இரத்தம்
அளிக்கப்படாவிட்டால்
மூளையின் பல செல்கள்
இறந்துவிடும்!


35 வயதுக்கு மேற்பட்டவர்
களுக்குத் தினமும் மூளை
யிலுள்ள நரம்பு செல்கள்
1000 வீதம் அழிந்து
கொண்டிருக்கின்றன.
ஆனால், இப்படித் தினமும்
அழிந்தாலும், 80 வயதில்
சுமார் 0.05 சதவீத
செல்கள்தாம்
அழிகின்றன!



உடம்பின் வலியை யெல்லாம் உணருவது மூளை. ஆனால் மூளையில் ஏதேனும் காயம் பட்டால், அந்த வலியை உணரும் சக்தி அதற்குக் கிடையாது!


மூளையை இடப்பக்கம் வலப்பக்கம் என்று இரு பகுதிகளாகப் பிரித்தால் உலகின் பெரும்பகுதியினர் இடப் பக்கத்தைத்தான் பயன் படுத்துகிறார்கள்!





7000 பேர்களை ஆராய்ந்து நெட் ஹெர்மன் என்ற விஞ்ஞானி சொன்ன முடிவு இது:
இடப்பக்கத்து மூளையைப் பயன் படுத்துகிறவர்கள் பெரும்பாலும் வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், எழுத்தாளர்கள் போன்றோர்.
வலப் பக்கத்து மூளையைப் பயன் படுத்துகிறவர்கள் அரசியல்வாதிகள், இசை வல்லுநர்கள், கட்டடக் கலைஞர்கள், உயர் பதவி வகிக்கும் அதிகாரிகள்.
ஆனால், மூளையின் இரு பக்கங்களையும் பயன்படுத்துகிறவர்களே மேதைகளாக இருக்கிறார்கள்!

வலப்பக்க மூளையைப் பயன்படுத்துகிறவர், இடப்பக்க மூளையைப் பயன்படுத்துகிறவர் என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது? யோசிக்கும் போது, தலையையும் கண்களையும் இடப்பக்கம் திருப்புகிறவர் மூளையின் வலப்பக்கத்தைப் பயன்படுத்துகிறவர்; வலப்பக்கம் திருப்புகிறவர், மூளையின் இடப்பக்கத்தைப் பயன்படுத்துகிறவர்!



மூளை வளர்ச்சியற்றவர்களின் மூளையிலுள்ள மடிப்புகள் குறைவாக இருக்கும் என்றும், மேதைகளின் மூளையிலுள்ள மடிப்புகள் அதிகமாக இருக்கும் என்றும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

காலஞ்சென்ற விஞ்ஞான மேதை ஐன்ஸ்டீன் தம்முடைய மூளையை ஆராய்ச்சிக்குப் பயன்படுத்துவதற்காக விட்டுச் சென்றார். அவரது மூளையின் சில துணுக்குகளை, கலிபோர்னியா பல்கலைக் கழகப் பேராசிரியை 'மரியன் டைமண்ட்' ஆராய்ந்தார்.
ஒரு மூளையின் அமைப்பே, மற்ற சாதாரண மனிதர்களின் மூளை அமைப்பிலிருந்து வேறுபட்டிருக்கிறது.
மேதைத் தன்மை என்பது மூளையின் இயற்கை அமைப்பினால் வருவது என்கிறார் அவர்!





கடன் வாங்கின அம்மா!

எங்கள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் ஆடு வளர்க்கிறார்கள். ஆடுகளின் காதுகளில் பித்தளைத் தகடுகள் மாட்டப்பட்டிருக்கும். இதைப் பார்த்த என் தம்பியோ என் அப்பாவிடம், ''அப்பா ஆட்டுக்குக் கூட கம்மல் (டோக்கன்) போட்டிருக்காங்களே'' என்று கேட்டான்.

அதற்கு என் தந்தை, ''அது வங்கியில் கடன் வாங்கிய ஆடு. அதனால்தான்



கம்மல் போட்டிருக்கு'' என்று விளக்கமளித்தார்.

''அப்படின்னா அம்மா கூட காதுல கம்மல் போட்டிருக்காங்களே! அம்மாவும் பாங்க்லே கடனுக்கு வாங்கிட்டு வந்த அம்மாதானா?'' என்று என் கட்டித் தம்பி கேள்வி கேட்கவும் எல்லோரும் சிரித்து விட்டோம்.

- எஸ். கலாவதி.

அடைமழை!

என் பள்ளித் தோழன் கணேஷ் ஒரு விளையாட்டுப் பிள்ளை. வேடிக்கையாகப் பேசுவதில் கில்லாடியும் கூட. ஒருநாள் அவன் வீட்டுக்குப் போன



போது விடாது பொகபொகவென்று மழை பெய்து கொண்டிருந்தது.

கணேஷின் அம்மா, ''கார்த்திகை மாதம்னாலே இப்படித்தான் அடை மழை பெய்யும்'' என்று சொன்னார்கள்.

உடனே கணேஷ் தன் வீட்டிலிருந்த தட்டொன்றை எடுத்துச் சென்று மழை நீரை ஏந்தினான்.


''ஏண்டா இப்படிச் செய்யறே?'' என்று அவன் அம்மா கண்டிக்கவும், ''மழையிலே 'அடை' விழுந்தா எடுத்துச் சாப்பிடலாமே... அதான் அடை மழை விழறதான்னு பார்க்கிறேன்''

என்று வெகுளித்தனமாகப் பதில் சொன்னதும் கோபத்தை மறந்து அம்மா கூடச் சிரித்து விட்டார்கள்.

- சு. தீபன் சக்கரவர்த்தி.

குறட்டையோ குறட்டை!

நாங்கள் ஒருமுறை எங்கள் சித்தி வீட்டிற்கு சென்றிருந்தோம். இரவுச் சாப்பாடு முடிந்து படுக்கைக்குச் சென்றோம். நானும் என் தங்கையும் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தோம்.



சித்தி குழந்தையை வைத்துக் கொண்டு ஹாலில் தூங்கிக் கொண்டிருந்தார். என் சித்தப்பா எங்களுக்குத் துணையாகக் கட்டிலின் அருகில் படுத்துக் கொண்டிருந்தார். திடீரென என் தங்கை மிகவும் பயந்து போய், ''சித்தி, சிங்கம் வருது! சிங்கம் கர்ஜிக்கிறது!'' என்று அலறினாள். என் சித்தி உடனே எழுந்து வந்து, ''எங்கே சிங்கம்?'' என்று பயந்து போய்க் கேட்டார். உடனே நான் எழுந்து, சித்தி, ''அது சிங்கமும் இல்லை. கர்ஜனையும் இல்லை! சித்தப்பா விடும் குறட்டைதான்'' என்றேன். மூவரும் கவனமாகப் பார்த்தோம். தூங்கிக் கொண்டிருந்த சித்தப்பா விட்ட பயங்கரமான குறட்டை சத்தம் தான் தங்கையை சிங்க கர்ஜனை என்று பயப்பட வைத்திருக்கிறது!

சித்தப்பாவை சித்தி தட்டி எழுப்பி, ''என்னது? இவ்வளவு பெரிதாகக் குறட்டை விடறீங்களே? குழந்தைங்க சிங்கம்னு பயப்படுதுங்க என்று கேட்டாள்.

அதற்கு சித்தப்பா, ''நான் இன்னும் தூங்கவே ஆரம்பிக்கலே, அதுக்குள்ள எப்படிக் குறட்டை விடுவேன்?'' என்றார். எங்கள் வீடே வெடிச் சிரிப்பால் அதிர்ந்தது.

- வித்யா, விலாசினி, காயத்ரி,

தபால் பெட்டி

எங்கள் வீட்டுக்கு அருகே புதிதாக ஒருவர் வீடு கட்டினார். தன் வீட்டு வாசல் கேட்டில் ஒரு தபால் பெட்டியை மாட்டினார். அதற்கு, தபால் இலாகா தபால் பெட்டியைப் போலவே சிவப்பு கருப்பு வண்ணப் பெயிண்ட் அடித்தார். தபால் பெட்டி என்று ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதினார். அந்தப் பகுதியில் உள்ளவர்கள் தங்கள் அறியாமையால், அதன் தோற்றத்தையும், வண்ணத்தையும், பெயரையும் பார்த்து அது தபால் இலாகா தபால்பெட்டி என்று எண்ணி, வெளியூருக்கு அனுப்ப வேண்டிய கடிதங்களை அதில் கொண்டு வந்து போட ஆரம்பித்தார்கள். சில நாட்கள் வரை அவர், தனது தபால் பெட்டியில்




இப்படி விழுந்த கடிதங்களை எடுத்து, பொறுமையாக அருகில் உள்ள தபா லாபீசில் சேர்த்து விட்டு வந்தார். ஆனால் நாளாக ஆக, இது பெருகி விட்டது. வேறு வழியில்லாது பெட் டிக்கு வெள்ளை வண்ணம் கொடுத்தார். பிறகுதான் கடிதங்களைப் போடுவது நின்றது. வீட்டில் தபால் பெட்டி அமைக் கும் போது கவனமாக இருங்கள்!

ஆர். இந்து.

சீப்பு

என் மாமா வீட்டிற்குச் சென்றிருந் தேன். மாமா பையனுக்கு ஏழு வயது. எப்பொழுதும் சீப்பால் தலைவாரிக் கொண்டே இருப்பான். எப்பொழுதும் நாங்கள் அவனைத்தான் சீப்புக் கேட் போம். சமீபத்தில் மாமா அவனுக்கு



முடி இறக்கி விட்டார். மொட்டை அடித் துக் கொண்டதும், ''அப்பாடா, ஒரு தொல்லை தீர்ந்து விட்டது!'' என்று அவன் சொன்னான். நாங்கள் ''ஏண்டா?'' என்று கேட்டதற்கு, ''இனி மேல் என்னை யாரும் சீப்புக் கேட்டுக் கழுத்தறுக்க மாட்டீங்களே?'' என்று கூறினான். எல்லோரும் சிரித்தோம்.

கே. மோகன்.

செல்லப்பா, செல்லப்பா!

எங்கள் வகுப்பில் அறிவியல் பாடம் நடந்து கொண்டிருந்தது. செல் லப்பன் என்ற ஒரு குறும்புக்கார மாண





வன், பக்கத்து மாணவனிடம் அடிக்கடி பேசிக் கொண்டிருந்தான். பொறுத்துப் பொறுத்துப் பார்த்த ஆசிரியர், கடைசி யில், வேறு வழியின்றிப் பொறுமை இழந்து, ''செல்லப்பா, நீ வகுப்பை விட்டுச் செல்லப்பா'' என்று மோனை யுடன் கூறவும், எல்லோரும் சிரித்து விட்டோம். ஆசிரியர், செல்லப்பா உட்பட!

எஸ். சரவணன்.

''உனக்கு எந்த பழம் பிடிக்கும்...?''
''பக்கத்து வீட்டு கொல்லையில் உள்ள மாம்பழம்தான்...''

- சீர்காழி பலராம்.





''என்னுடைய நாயைக் காண வில்லை.''
''தினசரியிலே விளம்பரம் கொடுப்பது தானே?''
''என் நாய்க்குப் படிக்கத் தெரியாதே!''

- ஏ. ஹரிகிருஷ்ணன்.

சிவரஞ்சன்

என் கையே...

"சுகு... சுகு..." தெரு வாசலிலிருந்து தன்னை அழைக்கும் ஜெகதீஷின் குரல் கேட்டதும், 'கேரம்' ஆடிக் கொண்டிருந்த சுகுமார் வெளியே ஓடி வந்தான்.

"என்ன ஜெகதீஷ்...? உள்ளே வா."

இருவரும் உள்ளூர் உயர்நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பு படிப்பவர்கள். நல்ல நண்பர்கள்.

"உள்ள வரது இருக்கட்டும். நீ உடனே சட்டையைப் போட்டுக்கிட்டு வாடா" என்றான் ஜெகதீஷ்.

"என்னடா விஷயம்?"

"நீ சட்டையை மாட்டிக்கிட்டு வாயேன் சொல்றேன்."

'சரிடா' என்று உள்ளே போன சுகுமார் சட்டையை அணிந்தவாறே வெளியே வந்தான்.

இருவரும் காந்தி சாலையில் நடந்தனர்.

"எதுக்குடா கூப்பிட்டே?" - சுகுமார் கேட்டான்.

"சொல்றேன் கேளு. நம்ம ஊர் காட்டாறை ஒட்டி இருக்குதில்ல, வேதவதி வாய்க்கால்...?"

"ஆமா அதுக்கென்ன இப்ப?"

"அதுக்குதான் வேலை வந்திருக்கு."

"என்ன வேலைடா?" - சுகுமார் நண்பனைப் புதிராய்ப் பார்த்தான்.

"சொல்றேன். அதுக்கு முன்னாடி இந்தக் கேள்விகளுக்கு பதில் சொல். நீ வருஷா வருஷம் கோடை விடுமுறைக்கு மெட்ராஸ் போவியே? இந்த ஆண்டு போகலையா?"

"இந்த வருஷம் அப்பாக்கு லீவ் கிடைக்கலையாம். அதோட அம்மாக்கும் உடம்பு சரியில்லே.. அதனால இந்த முறை போகலை ஜெகன்" - வருத்தத்தோடு சொன்னான் சுகுமார்.

"அப்ப என்னோட ஒண்ணரை மாசம் இருப்பே இல்லே?"

"ஆமா... இருப்பேன். எதுக்குடா இப்படிக் கேட்கறே?"

"சொல்றேன். நம்ம ஊர் வாய்க்காலை நாம தூர் எடுக்கணும்."

"என்னடா ஜெகன் விளையாடறியா...! அது பெரியவங்க செய்ய வேண்டிய வேலை... நாம சின்னப் பசங்க. நம்மளால முடியுமாடா?" - என்று ஆதங்கத்துடன் கேட்டான் சுகுமார்.

"ஏண்டா முடியாது? நாம இரண்டு பேர் மட்டுமா செய்யப் போறோம்? நம்மள மாதிரி பசங்களெல்லாம் இப்ப விடுமுறையை குளங்களை சுத்தம் செய்யறது,

கோவில்களைத் தூய்மைப்படுத்து வதுன்னு பயனுள்ளதாகக் கழிக்கி றாங்க. நம்ம நண்பர்களில் பலர் விடு முறையில் பொழுதுபோகாம சும்மா சுத்திக்கிட்டு திரியறாங்க. அவங்களை எல்லாம் கூட்டி காரியத்தில இறங்க ணும்டா. மாணவர்கள் நினைத்தால் எதையும் நடத்திக் காட்ட முடியும்டா''

ஜெகன் உறுதியுடன் சொன்னான்.

''என்னடா பசங்களா? என்ன யோசனை?'' என்று அந்த ஊர் பஞ்சா யத்துத் தலைவரும் ஜெகதீஷின் மாமா வுமான சொக்கலிங்கம் அவர்களை நிறுத்திக் கேட்டார்.

''மாமா வேதவதி வாய்க்கால இந்தக் கோடை விடுமுறையில் தூர் எடுக்கலாமுன்னு இருக்கோம்!'' என் றான் ஜெகதீஷ்.

''என்னது! வாய்க்கால தூர் எடுக்கப் போறீங்களா? ஏண்டா, எலிப் பயல் களா கூடினா மலையைப் புரட்ட முடி யுமா? நானும் பதினைந்து வருஷமா பஞ்சாயத்துத் தலைவரா இருக்கேன். என்னாலேயே முடியாத வேலை'' -



ஏளனமாய்க் கூறி விட்டு சொக்கலிங்கம் நகர முயன்றார்.

''மாமா, ஒரு நிமிஷம் நில்லுங்க'' என்று அவரைத் தடுத்தான் ஜெகதீஷ். சொக்கலிங்கம் வசதியாக ஒரு மரத்து வேரில் அமர்ந்து கொண்டார்.

''மாமா, வேதவதி வாய்க்காலின் மகத்துவம் உங்களுக்குப் புரியாதது அல்ல...''

''அதை யாராலும் மறுக்க முடியாது ஜெகன். நம்ம ஊர்ல தண்ணிப் பஞ்சம் என்பது அறியாத ஒன்று. இங்கே நம்ம ஊரைச் சுற்றி எட்டு ஏரிகள், நாலு குளங்கள் இருக்கு. மழைக் காலத்தில் கண்ட அரிச்சு ஓடி வீணாயிடுது. அதனாலதான் ஐந்து ஆண்டுகளா நம்ம ஊர்க் குளங்களும் ஏரிகளும் நிரம்பாம தண்ணீர்ப் பஞ்சம் தலைதூக்கியிருக்கு'' என்று பெருமூச்சு விட்டார் சொக்கலிங்கம்.

''இதைப் பஞ்சாயத்துல தூர் எடுக்க நீங்க ஏன் முயற்சி பண்ணக் கூடாது?'' என்று கேட்டான் ஜெகதீஷ்.

''நான் பண்ணாத முயற்சியா? எட்டு வருஷம் முன்னால திட்டம் போட்டு அரசாங்கத்துக்கு அனுமதி கேட்டு அனுப்பி னேன். அனுமதி தந்த தோட செலவுக்குப் பணமும் தந்தது அரசாங்கம். காண்ட்ராக்ட் முறையில்



மலையில் ஒரு மழை பெய்தால் கூடப் போதும். வேதவதி வாய்க்கால் பொங்கி, இந்த ஏரிகளையும் குளங்களையும் நிரப்பி விடும். ஆனால் இந்த வேதவதி இப்ப மண்ணடிச்சு தூர்ந்து கிடக்கே. அதனால அதுல தண்ணி வர்றதும் இல்லே. வந்தாலும் வாய்க்காலிலே ஓடி ஏரி குளங்களை நிரப்பறதும் இல்லே. அங்கங்கே அப்படி அப்படியே வேலையைத் தொடங்க முடிவு பண்ணி, முத்து ராஜ'ன்னு ஒருத்தருக்கு காண்ட்ராக்ட் விட்டோம். அவர் பணத்தை வாங்கிக் கொண்டு வேலையை ஆரம்பித்தார். பாதி வேலை நடந்து கொண்டிருக்கும் போதே அவர் காலமாகி விட்டார். அடுத்த ஆண்டு வெள்ளம் வந்து, செய்திருந்த வேலையை நாசமாக்கிடுத்து. அரசாங்கத்துக்கு எழுதி

னோம். முத்துராஜுவின் கணக்கு முடியாமல் புதிதாகப் பணிகளைத் தொடங்க முடியாதுன்னு அரசாங்கம் பதில் சொல்லிடுத்து. போன வாரம் கூட அமைச்சரைப் பார்த்து விட்டு வந்தோம். எதுவும் பயனில்லை'' என்று கவலையோடு கூறினார் சொக்கலிங்கம்.

''அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்த்தால் இப்படித்தான். இது நம்ம கிராமத்தை வாழ வைக்கும் பள்ளி, எங்களைப் போன்ற மாணவர்கள் மனம் வைத்தால் விடுமுறையில் இதை நாங்களே முடித்து விடுவோம். எங்களை உற்சாகப்படுத்துங்கள்'' என்றான் ஜெகதீஷ்.

சொக்கலிங்கம் யோசனையுடன் அவர்களைப் பார்த்தார்.

''திருச்சி தெப்பக்குளத்தைக் கூட மாணவர்கள் இப்பொழுது தூர் எடுக்கிறார்கள் மாமா'' என்றான் ஜெகதீஷ்.

''பணம் கேட்டால்தானே உங்களுக்குப் பிரச்னை? நாங்கள் எங்கள் உடல் உழைப்பை நன்கொடையா தரும் போது உங்களுக்கு என்ன மறுப்பு?'' என் றான் சுகுமார்.

சொக்கலிங்கம் இப்பொழுது யோசனையுடன் அவர்களை நோக்கினார்.

''உங்களை இப்படிச் செய்யும்படி தூண்டி விட்டிருப்பது யார்?''

''எங்க பள்ளி ஆசிரியர் வைரவன் தான். அவர்தான் எங்களையெல்லாம் அழைத்து இதைச் சொன்னார். இதனால் நம்ம கிராமம் மட்டுமல்ல, அக்கம் பக்கத்து கிராமங்கள் எல்லாம் பயனடையும். இந்தத் தண்ணீர் கஷ்டத்தில் மாணவர்கள் முழு நேரத்தையும் படிப்பில் ஈடுபடுத்த முடியாது திண்டாடுகிறார்கள். இந்தப் பணி முடிந்தால், ஊரின் தண்ணீர்ப் பஞ்சமும் தீரும் என்று அவர் எங்கள் பெற்றோர்களிடமும் கூறி சம்மதம் வாங்கி விட்டார். நீங்கள் உற்சாகப்படுத்துவதுதான் பாக்கி'' என்றான் ஜெகதீஷ்.

''பஞ்சாயத்துக்குச் சொந்தமான மண்வெட்டி, கடப்பாறை, பாண்டு எல்லாம் இருக்கு. அதையெல்லாம் தரச் சொல்றேன். பொறியாளரையும் அனுப்பி ஆலோசனை வழங்கச் சொல்றேன்'' என்றார் சொக்கலிங்கம்.

மூன்றாம் நாள்...

வேதவதி வாய்க்காலை தூர் எடுக்க எழுபத்தைந்து மாணவர்கள். மாணவியர் ஒன்றாகக் கூடினர். சிலர் கடப்பாரையால் நிலத்தைக் குத்த, சிலர் மண்வெட்டியால் மண்ணை வாரி மண் கூடையில் போட, பலர் மண்ணைச் சுமந்து ஆற்றோரம் கொட்டினர்.

ஊரில் சில சோம்பேறிகள், ''இந்தப் பசங்க எத்தனை நாளைக்குத்தான் இந்த வேலையை செய்யப் போறாங்க. பார்ப்போம்'' என்று வேடிக் கை பார்த்தனர்.


மாணவர்கள் பல பேருக்கு மண் வெட்டுவதும், மண் சுமப்பதும் புதிதாக இருந்ததால் சிறிது கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனாலும் தாங்கள் செய்யும் பணி பொது மக்களுக்கு நன்மை தரும் பணி என்ற நிறைவு இருந்ததால் முகம் சுளிக்காது பணிகளைத் தொடர்ந்தனர்.

வெயிலையும் பொருட்படுத்தாது மாணவர் செல்வங்கள் தினமும் காலை எட்டு மணி முதல் மாலை ஐந்து மணி வரை அயராது உழைத்தனர்.

சுமார் நூற்றைம்பது மீட்டர் நீள முள்ள வாய்க்கால் ஒரே மாதத்தில் தூர் வாரப்பட்டு கம்பீரமாகக் காட்சியளித்தது.

இதற்குக் காரணமான ஆசிரியரையும், மாணவர்களையும் ஊர் மக்கள் மிகவும் போற்றினர்.

வேதவதி வாய்க்காலில் தூர் எடுக்கும் பணி முடிவு பெற்ற கடைசி நாளில், மாணவர்களைப் பாராட்ட ஒரு கூட்டம் போடப்பட்டது. தலைமை தாங்கியவர் மாணவர்களின் அரிய உழைப்பையும், தொண்டு மனப்பான்மையையும் பாராட்டினார். நாமும் பாராட்டலாமா?



''வெங்காய மண்டிங்காரங்க யூனியன் வெச்சா என்னன்னு வைப்பாங்க?''

''தெரியலையே!''

'''ஆனியன் யூனியன்'னுதான்!''

- ஏ. ஹரிகிருஷ்ணன்.



யாருக்கு வேணும்?

கைலாஸ்

அலுவலகத்திலிருந்து அப்பா வீட்டிற்கு வரும்போதே மணி ஏழாகி விட்டது.

''அப்பாடா!'' என்று அலுத்துக் கொண்டார் அவர். தன் கைப் பெட்டியிலிருந்து ஒரு காகிதச் சுருளை எடுத்து கூடத்தின் மூலையில் வைக்கப்பட்டிருந்த குப்பைக் கூடைக்குள் எறிந்தார்.

''என்னப்பா அது! சிவப்பு சிவப்பாகக் கோடு கோடாக இருக்கு?'' எனக் கேட்டான் சுவாமி.

''இன்றைக்கு அலுவலகத்திலிருந்த எல்லாரையும் மருத்துவப் பரிசோதனை செய்தார்கள். அதில் எடுக்கப்பட்ட ஈசிஜி ரிப்போர்ட்,'' என்றார் அப்பா.

''அது வேண்டாமாப்பா?'' என வினவினான் சுவாமி.

''யாருக்குடா வேணும்?'' என்று அலட்சியமாக ஒதுக்கின அப்பா, ''எனக்கு இதயம் நன்றாகவே இருக்கிறது,'' என்று கூறினார்.

சுவாமிக்கு மனது கேட்கவில்லை. மெனக்கெட்டு அவனுடைய அப்பா

விற்கு உடல்நலத்தைப் பரிசோதனை செய்திருக்கிறார்கள். அந்த ரிப்போர்ட்டை வீசி எறிவதாவது!

சுவாமி அதை எடுத்துத் தன்னுடைய புத்தக அலமாரிக்குள் வைத்துப் பூட்டினான் பத்திரமாக.

ஆறு மாதம் கழிந்தது.

அன்று சுவாமிக்குப் பதினான்காவது பிறந்த நாள். வீடே விழாக் கோலம் பூண்டிருந்தது. அப்பாவின் அலுவலக நண்பர்களும், அம்மாவின் மாதர் சங்க நண்பிகளும் வந்து குழுமியிருந்தனர்.

எல்லாருக்கும் கேக், மிக்சர் காகிதத் தட்டில் வைத்து வைத்துப் பரபரப்பாகக் கொடுத்துக் கொண்டிருந்தார் அப்பா.

திடீரென்று...

'அம்மா' என முனகிய அவர் மயங்கிக் கீழே சரிந்தார்.

எல்லாரும் பதறிப் போய் நின்ற போது சுவாமி மட்டும் துரித கதியில் இயங்கினான். அவனுக்குத்தான் சாரணர் பயிற்சியில் முதல் உதவி பற்றிக் கற்றுத் தந்திருக்கிறார்களே. அப்பாவிற்கு இதய நோய் என உடனே புரிந்து கொண்டு விட்ட அவன் வாயிலுக்கு ஓடி, போய்க் கொண்டிருந்த ஒரு டாக்சியை நிறுத்தினான்.

அடுத்த ஐம்பதாவது நிமிடம்...

அந்தப் பகுதியிலிருந்த ஒரு பெரிய மருத்துவமனையில் அப்பாவிற்கு ஈசிஜி எடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

''நன்றாக உடல்நலம் இருக்கும் போது யாருமே ஈசிஜி எடுத்துப் பார்க்க வேண்டும் என நினைப்பதே கிடையாது'' எனச் சலித்துக் கொண்டார் பெரிய டாக்டர்.

''பழைய ஈசிஜி ரிப்போர்ட் இருந்தால், இதய பாதிப்பு இப்போது எந்த அளவு இருக்கிறது என்பதைக் கண்டு தேவையான அளவில் சிகிச்சை தருவது எளிது,'' என டாக்டர் விவரித்தார்.

சுவாமி நாலு எட்டுகளில் டாக்சிக்கு வந்து, வீடு நோக்கி விரைந்தான்.

அடுத்த சில நிமிடங்களில், பழைய ஈசிஜி ரிப்போர்ட் டாக்டரின் கையில் இருந்தது.

அப்போதே எடுத்து முடிக்கப்பட்ட ரிப்போர்ட்டோடு ஒப்பிட்டுப் பார்த்த போது..

''பரவாயில்லை! பாதிப்பு அதிகமில்லை. யாரும் பயப்பட வேண்டாம்,'' எனத் தேற்றினார் டாக்டர். ''சுவாமி! உங்கப்பாவிற்கு நீ ஒரு நல்ல மகன். பழைய ரிப்போர்ட்டைப் பாதுகாத்துக் கொணர்ந்ததால், எவ்வளவு மனக் கலக்கத்தை நீ தவிர்த்திருக்கிறாய் தெரியுமா!'' என்றார் அவர்.

''மருத்துவ ரிப்போர்ட்டுகளைப் பத்திரமாக வைத்திருக்க வேண்டும் என்பதை எனக்குப் படிப்பித்த முதல் உதவிப் பாடத்தின் பலன் டாக்டர் அது!'' என்ற சுவாமியை எல்லாரும் தட்டிக் கொடுத்தனர்.

கற்றது போல நடந்ததால் அல்லவா அவன் தந்தையை அவனால் காப்பாற்ற உதவ முடிந்தது!

''எங்க வீட்டு நாய்க்கு சர்பத்தைக் (நல்ல பாம்பு) கண்டால் ரொம்ப பயம்டா.''

''ஏன்டா...! அதுக்கு சர்பத் பிடிக்காதா?''

- சீர்காழி வி. ரேவதி






''கொக்குக்குப் பிடித்த ஊர் எது?''

''மீனம்பாக்கம்!''

- எஸ். விஜயகுமார்



ஓர் அடர்ந்த காட்டில் முனிவர் ஒருவர் இருந்தார். அவர் தினமும் பிள்ளையாருக்கு நூற்றி எட்டு அருகம் புல் வைத்து மனம் உருகிப் பூஜை செய்வார். அந்த அருகம் புல்லை அவரது மனைவிதான் காட்டிலிருந்து எடுத்து வந்து ரிஷியிடம் கொடுப்பார்.

ஒரு நாள் அந்நாட்டு ராஜா தன் குடும்பத்துடன் முனிவரிடம் ஆசிர்வாதம் வாங்க வந்தார். ராஜ குடும்பத்துப் பெண்கள் அணிந்து இருந்த நகைகளை முனிவரின் மனைவி பார்த்தாள். வைரங்களும், தங்கங்களும் அள்ளி வீசும் அழகைப் பார்த்துத் தானும் அது

அறிவு தெளிந்தது!

மாதிரிப் போட்டுக் கொள்ள ஆசைப் பட்டாள்.

அடுத்த நாள் அருகம் புல்லைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு முனிவரிடம் தனது ஆசையைத் தெரிவித்தாள். முனிவர் என்ன சமாதானம் கூறியும் அவர் மனைவி கேட்கவில்லை. ''இந்த அருகம் புல்லைத் தவிர நான் வேறு என்ன கண்டிருக்கிறேன்?'' என்று அழுதாள்.

வேறு வழியில்லாது போகவே, முனிவர், பிள்ளையாருக்கு வைத்து பூஜை செய்த ஓர் அருகம் புல்லை எடுத்து அவளிடம் கொடுத்தார். ''இதைக் கொண்டு போய் மேல் உலகத்தில் இந்திரனிடம் கொடு. இதை வைத்துக் கொண்டு, இதன் நிறைக்கு பொருள் தா என்று கேட்டு வாங்கிவா'' என்று கூறி தனது சக்தியால் மனைவியை அருகம் புல்லோடு மேல் உலகத்திற்கு அனுப்பி வைத்தார்.


மேல் உலகம் சென்ற முனிவரின் மனைவி இந்திரனிடம் சென்று விஷயத்தைக் கூறி அருகம் புல்லைத் தந்தாள்.

தேவேந்திரன் ''என்னிடம் கேட்பதற்குப் பதிலாக குபேரனிடமே கேளுங்கள். இதற்கு எடை எடை தங்கம் தரும் தகுதி எனக்கு இல்லை'' என்று சொல்லி அனுப்பி வைத்தான்.

குபேரனிடம் வந்த முனிவரின் மனைவி விஷயத்தைக் கூறி அருகம் புல்லைத் தந்தாள்.

குபேரன் பயந்து நடுங்கினான். ''தாயே, இந்த அருகம் புல்லை வைத்துக் கொண்டு எடைக்கு எடை என்னால் தங்கம் தர இயலுமா? சோதிக்க வேண்டாம். உங்களுக்கு எவ்வளவு தேவையோ அதை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று பணிவுடன் வேண்டினான்.

முனிவரின் மனைவி, ''என் கணவரின் கட்டளைப்படியேதான் எனக்குப் பொருள் தர வேண்டும்'' என்று வற்புறுத்தினாள்.



உடனே குபேரன் ஒரு பெரிய தராசில், ஒரு தட்டில் முனிவரின் மனைவி கொண்டு வந்த அருகம் புல்லை வைத்தான். மறு தட்டில் தன் செல்வங்களையெல்லாம் சிறிது சிறிதாக வைத்தான். குபேரனின் கிரீடம், வாள், ஆபரணங்கள் எல்லாவற்றையும் வைத்தாகி விட்டது. ஆனால் தராசின் தட்டு சமமாகவில்லை! மேலும், மேலும் வைத்துக் கொண்டே போனான். அப்படியும் எடை சமமாகவில்லை!

உடனே குபேரன் முனிவரின் மனைவியை வணங்கி, ''தாயே, இந்த அருகம் புல் சாதாரணமானது அல்ல. தவ வலிமை மிக்க முனிவரால், உள்ளன்போடு பிள்ளையாருக்கு பூஜை செய்யப்பட்டது. தனி மகத்துவம் வாய்ந்த இந்த அருகம் புல்லுக்கு ஏழு உலகங்களைக் கொண்டு வந்து வைத்தாலும் ஈடு ஆகாது'' என்று பணிந்தான்.

முனிவரின் மனைவிக்கு அப்போது தான் அறிவு தெளிந்தது.

'ராஜ குடும்பத்துப் பெண்கள் அணியும் பொருள்களின் மதிப்புக்கும், பெருமைக்கும் ஈடேது என்று அறியாமையால் மயங்கினேனே! என் கணவர் தினமும் பூஜை செய்யும் அருகம்புல்லில் ஒரு புல்லுக்கு இத்தனை பெருமை என்றால், அவரது பெருமையும் சிறப்பும் எப்படிப்பட்டது என்பதை உணர்ந்து கொண்டேன்' என்று பூலோகம் வந்து தன் கணவரிடம் மன்னிப்புக் கேட்டாள்!

இதைப் போல் எத்தனையோ அருமையான படைப்புகள் எழுதியவரின் பெயர், முகவரி இல்லாது கோகுலம் அலுவலகத்திற்கு வருகின்றன. இதை எழுதிய தம்பி அல்லது தங்கை, உடனே, தனது பெயர், முழு முகவரி, இதற்குத்தான் கொடுத்த தலைப்புடன் கோகுலம் ஆசிரியருக்கு எழுதவும்.



விரும்பியதைக் கேள்!

முன்னொரு காலத்தில் போர் வெறி பிடித்த ஒருவன் இருந்தான். அவனது பெயர் கான்ஜானி பெக். அண்டை நாடுகளைத் தனது குரூரமான படையெடுப்பின் மூலம் அவன் தாக்கி வந்தான். ஒரு முறை, கான் கல்தான் மாமித் என்பவருக்குச் சொந்தமான நகரத்தைத் தனது படைகளோடு சென்று கான் ஜானி பெக் முற்றுகையிட்டான். மூன்று நாள்களுக்குள் குடிமக்கள் அனைவரும் சரணடையவில்லையென்றால் நகரத்தைச் சூறையாடி விடப் போவதாக எச்சரித்துக் கெடு வைத்தான்.

கல்தான் மாமித் ஆலோசகர்களின் சபையைக் கூட்டி ஆலோசனை செய்தார். எனினும் அங்கிருந்தவர்களுக்கு ஒரு வழியும் புலப்படவில்லை. கெடு வைத்த கடைசி நாளன்று பழைய மென் மயிர்த் தோல் கோட்டணிந்த சிறுவன் ஒருவன் ஒரு கழுதைக் குட்டியின் மீது ஏறி, சபைக்கு வந்தான். கல்தானையும் மற்றவர்களையும் பவ்யமாக வணங்கி, ''கான் ஜானி பெக்கிடம் என்னை தூதுவனாக அனுப்புங்கள். எதிரியின் முற்றுகையிலிருந்து நகரத்தை விடுவிக்க நான் முயற்சி செய்கிறேன்'' என்று வேண்டிக் கொண்டான்.

சபையோர் தமது சம்மதத்திற்கு அடையாளமாகத் தலை அசைத்தனர். பின்னர் அச்சிறுவன் மிகவும் வயதான ஒரு கிழட்டு ஒட்டகமும், மிக நீண்ட தாடியுடைய வெள்ளாட்டுக் கடாவும் வேண்டுமென்று கேட்டான். அங்கிருந்தவர்களுக்கு இது வியப்பாக இருந்தாலும் அவன் கேட்டதையெல்லாம் கொடுத்தனர். வெள்ளாட்டின் கழுத்தில் கயிற்றைக் கட்டிப் பிடித்தபடி, ஒட்டகத்தின் முதுகில் அமர்ந்து சவாரி செய்த சிறுவன், அப்படியே எதிரியின் முகாமை வந்தடைந்தான்.

சிறுவனைப் பார்த்ததும் கான் கடுங்கோபம் கொண்டான். ''கல்தான் மாமித்தின் ராஜ்யம் முழுவதிலும் வயதான நீண்ட தாடியுடைய தூதுவர்கள் யாருமே இல்லையோ? சிறுவனான நீ வந்திருக்கிறாயே?'' என்று மிகவும் சினத்தோடுவினவினான். சிறுவன், கானின் கோபத்தைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. ''மாட்சிமை மிக்க

கிர்கீசியக் கதை

தமிழில் : தக்கோலம் முஸ்தபா.

கான் அவர்களே, மிக வயதானவரிடம் பேச விரும்பினால் தாங்கள் இந்த ஒட்டகத்துடன் பேசலாம். எங்கள் நகரத்தில் இதை விட அதிக வயதுடையவர் வேறு யாரும் இல்லை! நீண்ட தாடியுடையவருடன் பேச விரும்பினால், தாங்கள் இந்த வெள்ளாட்டுக் கிடாவுடன் பேசலாம்! இதை விட நீண்ட தாடியுடைவர்கள் யாரும் நகரில் இல்லை!'' என்றான் அச்சிறுவன்.

சிறுவனின் சமயோசித அறிவைக் கண்டு கான் மலைத்துப் போனான். அவன் கோபம் மறைந்தது. ''நீ தைரியமான புத்திசாலிப் பையனாக இருக்கிறாய். இதற்காக உனக்கு ஒரு பரிசளிக்க விரும்புகிறேன். நீ விரும்பியதைக் கேள்'' என்றான் கான்.



''என்னுடைய கிழட்டு ஒட்டகம் செத்துக் கொண்டிருக்கிறது. இதன் தோலைப் புதைக்க எவ்வளவு இடம் தேவையோ அதை மட்டும் எனக்குக் கொடுங்கள் போதும்'' எனக் கேட்டான் சிறுவன்.

சிறுவனின் அற்பமான வேண்டுகோளைக் கேட்டு, கான் ஏளனமாகச் சிரித்தான். ஒட்டகத்தின் தோலைப் புதைக்க எவ்வளவு நிலம் தேவையோ, அதைத் தருவதாக வாக்களித்தான். கிழட்டு ஒட்டகம் விரைவில் கீழே விழுந்து இறந்து போயிற்று. அதன் தோலை நார் நாராகக் கிழித்தான் சிறுவன். அவற்றை ஒன்றாகச் சேர்த்து முடிச்சுப் போட்டு நீண்ட கயிறு போலாக்கினான்; பிறகு அதை முற்று கைவிட்ட நகரத்தைச் சுற்றிலும் கீழே புதைத்தான்.

இதைக் கண்டதும் சிறுவன் தன்னைத் தந்திரமாக ஏமாற்றி விட்டான் என்பதை கான்ஜானி பெக் உணர்ந்து கொண்டான். ஆனால் இனி என்ன செய்ய முடியும்? தான் கொடுத்த வாக்குறுதியைக் கான் காப்பாற்றுவதைத் தவிர வேறு வழியில்லை! நகரம் அமைந்துள்ள நிலம் முழுவதையும் அச்சிறுவனுக்கு ஜானி பெக் பரிசாய்த் தந்து விட்டான். தனது படைகளையும் விலக்கிக் கொண்டான். பிறகு அந்தப் பக்கமே அவன் தலைகாட்டவில்லை. கஸ்தான் மாமித் அச்சிறுவனை கௌரவித்து தனது அவையிலேயே அமர்த்திக் கொண்டார்.

யானை மேல் போத்தம்!



போத்தம்.

இங்கிலாந்து கிரிக்கெட் அரங்கிலும் சர்வதேச கிரிக்கெட் வட்டாரத்திலும் மறக்க முடியாத பெயர். விளையாட்டில் வேடிக்கை காட்டும் ஆட்டக்காரர். இந்த வீரர் களம் இறங்கினால் போதும். இவரது அணிக்கு மட்டுமல்ல; எதிர்க் குழுவினருக்கும் கொண்டாட்டம்தான்!

எப்போதும் புன்னகை தவழும் முகத்தை உடையவராகவே போத்தம் காட்சி அளிப்பார். சென்னை சேப்பாக்கம் டெஸ்டில் ஒரு முறை போத்தம் ஆடும் போது இந்திய அணியினர் பம்பரமாக ஆடி மின்னல் வேகத்தில் ரன் குவித்தார்கள்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த போத்தம், நிஜமான பந்தை ஒளித்து விட்டு, ஆரஞ்சுத் தோலைப் பந்தாகச் சுருட்டி வீசினார். அவ்வளவுதான், ஆட்டக்காரர்கள் மட்டுமல்ல; அரங்கமே வயிறு குலுங்கச் சிரித்தது!



சமீபத்தில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் விளையாட வந்தது. இங்கிலாந்து அணியில் போத்தம் சேர்க்கப்படவில்லை! அணியில் இருந்து விலக்கப்பட்ட பார்வையாளராகவே அவர் கருதப்பட்டார்!

காரணம் என்னவென்று தெரியவில்லை. ஆனால், போத்தம் இந்த முடிவால் மிகவும் பாதிக்கப் பட்டார். 'இனிமேல் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் ஆட மாட்டேன். ஓய்வு பெறப் போகிறேன். எனது ஓய்வுப் பயணம் வருகிற செப்டெம்பர் மாதம் இருக்கும்,'' என்று சோகமாகக் கூறினார். அவருடைய ரசிகர்களுக்குப் பெரும் அதிர்ச்சி.

''குழந்தையைப் போல, பொம்மைத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு, எல்லோரையும் சிரிக்க வைக்கும் போத்தம், தொடர்ந்து கிரிக்கெட் மைதானத்திற்கு வர வேண்டும். மீண்டும் அவரை ஆட விடுங்கள்'' என்கிற கோரிக்கை அவரது ரசிகர்களால் எழுப்பப் பட்டிருக்கிறது.

பத்தொன்பது ஆண்டு காலம் இங்கிலாந்து அணிக்காக ஆடிய 37 வயது போத்தம் இதுவரை 102 டெஸ்ட்டுகளில் ஆடியுள்ளார். இந்த டெஸ்ட்டுகளில் அவர் கைப்பற்றிய விக்கெட்டுகள் 383. உலக கிரிக்கெட் அரங்கில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய பந்து வீச்சாளர்களில் 4வது இடம் இவருக்கு உண்டு. முதலிடத்தை ஹாட்லியும், 2-வது இடத்தை நமது இந்திய வீரர் கபில்தேவும் கைப்பற்றியுள்ளனர்.


மொத்தம் 14 டெஸ்ட்களில் சதம் எடுத்து, 120 கேட்சுகள் பிடித்து சாதனை படைத்திருக்கிறார் போத்தம். டெஸ்ட்டுகளில் ஆடும் போது உடல்நலம் பாதிக்கப்பட்ட அவர் இது வரை 10 முறை ஆபரேஷன் செய்து கொண்டு இருக்கிறார்.

இயான் போத்தம் குழந்தைகளிடம் அன்பு காட்டும் விந்தைமிக்க இரக்க உள்ளம் கொண்டவர். மற்றவர்கள் கஷ்டப்படுவதைப் பார்த்தால் போதும். உடனடியாக ஏதாவது உதவி செய்ய ஓடோடி வருவார்.

இரத்த சோகையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக அமைக்கப்பட்ட 'அறக்கட்டளை' ஒன்றுக்கு நிதி உதவி அதிகம் தேவைப்பட்டது. அதற்கு உதவ முடிவெடுத்த போத்தம், வினோதமான முறையில் அந்த அறக்கட்டளைக்கு நிதி திரட்டினார். அலங்காரம் செய்த இரு யானைகளை அழைத்துக் கொண்டு, லண்டன் நகரில், வீதி வீதியாகச் சென்று நிதி திரட்டினார். கிரிக்கெட் வீரர் என்பதோடு, ஒரு சமூகநல உணர்வு கொண்ட மனித நேயம் மிக்கவர் என்பதற்காகவும் இவரது ரசிகர்கள் இவரைப் போற்றுகிறார்கள்!

– எஸ். காந்திமதிபாய்

''மாஸ்டர் கூப்பிட்டு விஷயத்தைச் சொன்னார். சப்புன்னு போயிட்டது....''
- சீ. சரவண பாலாஜி.



பிஞ்சு நெஞ்சங்களில் அரும்பி வளரும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மைதான் எதிர் காலத்தில் அவர்கள் அரிய பெரிய தியாகங்களைப் புரிவதற்கு அடிப்படையாக அமையும். அம்முறையில் வீட்டில் - வெளியில், படிப்பில் - விளையாட்டில் இன்னபிற செயல்களில், தமது விட்டுக் கொடுத்த இனிய அனுபவங்களை மேலப்பட்டி, லாலாபுரம், ஓடப்பட்டி, கள்ளிக்குடி ஆகிய சிற்றூர்களைச் சேர்ந்த சிறுவர் சிறுமியர் ஆறு பேர் இங்கே உங்களோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

விட்டுக் கொடுத்த

சீ. சரவண பாலாஜி :

மூணு வருஷத்துக்கு முந்தி நடந்தது இது. அப்போ சாரண இயக்கத்தின் சிறப்பு முகாம் ஒன்றுக்கு ஏற்பாடு பண்ணியிருந்தாங்க. மதுரைக்குப் பக்கம் அழகர் கோவிலில் அஞ்சு நாள் முகாம். ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் ரெண்டு ரெண்டு சாரண மாணவர்களும் ஒரு சாரண ஆசிரியரும் அதுல கலந்துக் கலாம்னு சொல்லியிருந்தாங்க. எங்க பள்ளியிலே என்னையும் இன்னொரு மாணவனையும் அந்த முகாமுக்கு செலக்ட் பண்ணாங்க. எனக்கோ ரொம்ப மகிழ்ச்சி! முகாமுக்குப் போற துக்குத் துணி மணிகள், மற்ற சாமான்கள் எல்லாத்தையும் ரெடி பண்ணி வச்சிட்டேன். என்னோட பிரண்ட் என்னைக் காட்டிலும் ரொம்ப ஆர்வமா ஓடியாடித் தயார் பண்ணிக்கிட்டு இருந்தான். மறுநாள் நாங்க கிளம்பணும். ஆனா அதுக்குள்ளே புதுசா அறிவிப்பு ஒண்ணு வந்துடுச்சு. அதுல ஒவ்வொரு பள்ளியிலேருந்தும் ஒரு மாணவன், ஒரு மாணவி ஆக ரெண்டு பேர் வரணும்னு சொல்லிட்டாங்க. எங்க மாஸ்டர் என்னையும் என் நண்பனையும் கூப்பிட்டு விஷயத்தைச் சொன்னாங்க. எங்களுக்குச் 'சப்பு'ன்னு போயிட்டது. ஆசிரியர் கொஞ்ச நேரம் யோசனை செஞ்சிட்டு என் பிரண்டைப் பாத்து, ''இந்தக் கேம்ப்புக்கு சரவண பாலாஜி வரட்டும். அடுத்த கேம்ப்புக்கு உன்னைக் கட்டாயம் கூட்டிட்டுப் போறேன்'' என்று சொன்னவுடன் அவனுக்கு ரொம்ப ஏமாற்றம். அரை மன



''இருக்கறது ஒரே பேனா. யாருக்குக் குடுக்கறதுன்னு எச்.எம்.முக்குக் குழப்பம்....''
- எஸ். குருதேவி.



> "நான் ஜெயிச்சாலும், அவன் ஜெயிச்சாலும் ரெண்டு பேருக்குமே சந்தோஷம்தான். இருந்தாலும்..."
> - இரா. சிவக்குமார்.

சோடு தலையாட்டிட்டுப் போயிட்டான். நான் என்னோட கிளாஸ் ரூமுக்குப் போயிட்டிருந்தப்போ வழியிலே அவனைப் பாத்தேன். அவன் மேல் சட்டையைத் தூக்கி கண்ணைத் தொடச்சிக்கிட்டிருந்தான். எனக்கு என்னமோ மாதிரி ஆயிட்டது. நான் எங்க அப்பா அம்மாவோட எத்தனையோ தடவை அழகர் கோயிலுக்குப் போயிருக்கேன்.

அனுபவம்

ஆனா அவன் போயிருக்கானோ என்னவோ? கொஞ்ச நேரம் யோசிச்சிப் பார்த்துட்டு, உடனே எங்க மாஸ்டர் கிட்ட போனேன். ''சார் இந்த வாட்டி அவனைக் கூட்டிட்டுப் போங்க. அடுத்த கேம்ப்புக்கு நான் வர்றேன். பாவம், அவன் அழுகிறான்'' என்று சொன்னவுடன் அவருக்கு ரொம்ப ஆச்சரியம். என்னைத் தட்டிக் கொடுத்து, ''சபாஷ், இப்படித்தான் விட்டுக் கொடுத்துப் போகணும்'' என்று என்னைப் பாராட்டினார். அப்போ எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?



எஸ். குரு தேவி:

அந்த வருஷம் அரைப் பரீட்சையிலே தமிழ்ப் பாடத்துலே முதல் மார்க் எடுத்தவங்களுக்குப் பேனா ஒன்று பரிசு தரப் போறதா எங்க எச்.எம். அறிவிச்சாங்க. எப்பவும் எல்லாப் பாடத்துலேயும் நான்தான் பர்ஸ்ட். ஆனா, அந்த வாட்டி தமிழிலே நானும் என் தோழி கீதா ரெண்டு பேருமே சமமா மார்க் எடுத்துப் பர்ஸ்ட்டா வந்துட்டோம். இருக்கிறது ஒரே பேனா; யாருக்குக் கொடுக்கிறதுன்னு எச்.எம்.முக்கு குழப்பம். எல்லாப் பாடத்திலேயும் டோட்டல் பர்ஸ்ட் எடுத்தவங்களுக்குப் பேனா பரிசுன்னு அறிவிச்சாங்க. ஸோ, டோட்டல் ஃபர்ஸ்ட் வந்த எனக்குத்தான் பேனா! இது தெரிஞ்சதும் என் தோழிக்கு ரொம்ப வருத்தமா ஆயிடிச்சி. எனக்கும் ஒரு மாதிரி ஆயிடிச்சி. நான் எப்பவும் பர்ஸ்ட் வர்றவ. அவளுக்கு இதுதான் முதல் முறை. எனவே, அவளைத்தான் அதிகம் ஊக்கப்படுத்தணும்னு தோணிச்சி. உடனே நான் எழுந்திரிச்சி, ''சார் பேனாவை கீதாவுக்கே கொடுத்திடுங்க.'' என்று சொல்லிட்டேன். என் தோழிக்குச் சந்தோஷம். எச்.எம். அவங்களும், என் தோழிகளும் என்னை ரொம்பப் பாராட்டினாங்க. எனக்கு ரொம்பப் பெருமையா இருந்துச்சி.

மறுநாள் தலைமையாசிரியர் கிட்டே இருந்து எனக்கு அழைப்பு வந்துச்சு. நான் போய்ப் பார்த்தேன். ''விட்டுக் குடுத்த உன் நல்ல குணத்துக்கு ஒரு பரிசு தரப் போறேன். டோட்டல் பர்ஸ்ட் நீதான்! உனக்கு ஒரு ஹீரோ

> "வேற புக் எதுவும் இல்லைன்னு எனக்குத் தெரியும். என்ன செய்யறது?"
> - த. சசிகலா.

''என்னால நிக்க முடியல சாமிங்களா! கொஞ்சம் இடம் விட்டா வாங்கிட்டுப் போயிடு வேன்.... அப்படீன்னு கெஞ்சினாங்க.''

- ஜெ. ராஜா முகம்மது.



பேனா ஆண்டு விழாவில் கொடுப்போம்'' என்று கூறினார்.

மகிழ்ச்சியில் பூரிச்சிப் போச்சு என் மனம்!

இரா. சிவக்குமார் :

என் அருமை நண்பன் குமார் படிப்பிலே சுமார். ஆனால் விளையாட்டிலே ரொம்பக் கெட்டிக்காரன். விளையாட்டிலே எனக்கு மிகுந்த ஆர்வத்தை உண்டு பண்ணினவன் அவன்தான். சாயங்காலங்களில் விதவிதமான விளையாட்டுக்களிலே எனக்குப் பயிற்சி கொடுப்பான். அதிகாலையிலே என்னைத் தன்னோடு ஓடுற பயிற்சிக்கு இழுத்துட்டுப் போவான்.

அந்த வருடம் பள்ளி ஆண்டு விழாவிலே ஓரிரண்டு விளையாட்டுப் போட்டியிலே நானும் பரிசுகள் வாங்குற நிலைக்கு வந்துட்டேன். ஓட்டப் பந்தயத்திலே நானும் குமாரும் இறுதிச் சுற்றில் களத்தில் நின்னோம். மறுநாள் பைனல் ஓட்டம் நடக்கப்போகுது. ஆனா முதல் நாள் சாயங்காலம் பிராக்டிஸ் பண்றப்போ குமார் கீழே விழுந்து முழங்காலிலே பெரிய காயம் ஏற்பட்டது.

அடுத்தநாள் போட்டியிலே அவன் கலந்துக்க யோசிச்சான். ஆனால் நான் அவனை வற்புறுத்திச் சம்மதிக்க வச்சேன். பந்தயத்தில் ஓடிக்கிட்டிருந்த நான், எல்லைக்குக் கொஞ்ச தூரம் இருக்குறப்போ வேணுமின்னே குமாரின் வெற்றிக்காக விட்டுக் கொடுத்துட்டேன். வழக்கமான ஜூனியர் சேம்பியன் பட்டம் அவனுக்குக் கிடைச்சது. இந்த என் 'குட்டித்தியாகத்தை' குமார் புரிஞ்சுட்டு தனியாக வந்து எனக்கு ரொம்ப நன்றி சொன்னான். நான் ஜெயிச்சாலும் அவன் ஜெயிச்சாலும் ரெண்டு பேருக்குமே சந்தோஷம் தான். இருந்தாலும், எனக்கு விளையாட்டுலே ஆர்வம் ஏற்படுத்தி அவன், ஜெயிச்சது எனக்கு ரொம்ப சந்தோஷம்.


த. சசிகலா :

ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் 'சுற்றுச் சூழல் பாதுகாப்பு வார விழா' நடந்துச்சு. அதிலே மாணவ-மாணவிகள் பங்கேத்துக்கிற பேச்சுப் போட்டி ஒன்று வச்சிருந்தாங்க. அந்தப் போட்டிக்கு எங்க வகுப்புலே நானும் தவமணி என்கிற என் தோழியும் பேர் கொடுத்திருந்தோம். அது சம்பந்தமான புத்தகத்தை எடுக்க எங்க பள்ளி லைப்ரரிக்குப் போனேன். எனக்கு முந்திப் போனவங்க எடுத்துப் போனது போக ஒரே ஒரு புக் மட்டும் இருந்துச்சு. நான் அதை எடுத்துட்டுப் போயி பொறுப்பாளர் கிட்டே கொடுத்துப் பதிவு பண்ணிட்டு வெளியே வந்தேன். அப்போ என்னோட பேர் கொடுத்த என் பிரண்ட் தவமணி வந்து, தனக்கும் ஒரு புத்தகம் தேடி எடுத்துக் கொடுக்கச் சொன்னா. வேறு புக் எதுவுமில்லேன்னு எனக்குத் தெரியுமே? என்ன செய்யறது? ''இது சம்பந்தமா வேறு புத்தகம் இல்லே''ன்னு சொன்னேன். அவ முகம் அப்படியே

''கர்ணனுக்கு பிடித்த ஊர் எது?''

'''கொடை'க்கானல்!''

- புவனா.





> ''உடனே அவ 'ஓ'ன்னு கத்தி கூப்பாடு போட ஆரம்பிச்சுட்டா. பையன் தேம்பித் தேம்பி அழ ஆரம்பிச்சுட்டான்!''
> - பி. லட்சுமி

கருங்கிச் சிறுத்துட்டது. எனக்குப் பாவமாய்ப் போயிட்டது.

கொஞ்சம் யோசிச்சேன், ''நமக்காவது வீட்டுலே சொன்னா படிச்சிருக்கிற அப்பா, அம்மா, அக்கா பேச்சுப் போட்டிக்குத் தயார் பண்ணிக் கொடுப்பாங்க. பாவம், கிராமத்துலே இருந்து வர்ற இவளுக்கு அந்த வாய்ப்பு இல்லையே!''

நான் எடுத்த புத்தகத்தை என் தோழிக்குக் கொடுத்துட்டேன். அவளுக்கு ரொம்ப மகிழ்ச்சி. எப்படியோ அவளுக்கு மூணாவது பரிசு கெடச்சது. எனக்குப் பரிசு கெடைக்காட்டியும், தோழிக்காக விட்டுக் கொடுத்த அந்தப் பெரிய சந்தோஷம் போதாதா?

ஜெ. ராஜா முகம்மது :

மத்தியானம் சாப்பிட்டதும் ஸ்கூலுக்கு கிளம்பப் போனேன். அப்போ அம்மா வந்து, ''ரேஷன் கடையிலே சர்க்கரை போடுறாங்க, வாங்கிக் கொடுத்துட்டுப் போ. அப்புறம் நீந்து போயிட்டா வாங்க முடியாம போயிடும்'' என்று பையோடு பணமும் ரேஷன் கார்டும் கொடுத்தாங்க. கடைக்குப் போயி கியூவில் நின்னேன். எனக்கு முன்னாலே பத்துப் பதினைஞ்சு

''கோடைக் காலத்தில் மட்டும் பாடம் சொல்லிக் கொடுக்க வரும் ஆசிரியர் யார்?''

''வேர்க்'குரு.''

- ஏ. ஹரிகிருஷ்ணன்.



பேர் நின்னாங்க. பத்து நிமிஷத்துலே எனக்குப் பின்னாடி பத்து இருபது பேர் வந்து சேர்ந்துட்டாங்க. கியூ மெல்ல மெல்ல நகர்ந்துக் கிட்டிருந்திச்சி.

அச்சமயம் வயசான பாட்டி ஒருத்தங்க கம்பு ஊனிக் கிட்டுக் கையிலே பையோட அங்கே வந்தாங்க. நடக்குறதுக்கே ரொம்பக் கஷ்டப்படுறது மாதிரி தெரிஞ்சது. அவங்க கடைசியிலே நிக்காம கியூவின் நடுப்பகுதியில் நிக்க வந்தாங்க. ஆனா ஒருத்தர் கூட அவங்களுக்கு இடம் விடாமே கடைசிக்குப் போகச் சொல்லிக் கூச்சல் போட ஆரம்பிச்சாங்க. ''என்னாலே நிக்க முடியலீங்க சாமிகளா! கொஞ்சம் இடம் விட்டா வாங்கிட்டுப் போயிடுவேன்'' என்று கெஞ்சனாங்க. யாரும் இரக்கப்படலே. எனக் கென்னவோ பாட்டியைப் பார்க்கப் பாவமா இருந்தது. உடனே அவங்களைக் கையைப் பிடிச்சி அழைச்சிட்டு வந்து, எனக்குரிய இடத்துலே நிறுத்திட்டு, நான் போயி வரிசையின் கடைசி ஆளா நின்னுக்கிட்டேன். அந்தப் பாட்டிக்கு அளவில்லா சந்தோஷம்!

நான் சர்க்கரை வாங்கிக் கொடுத்திட்டு ஸ்கூலுக்குப் போக அரைமணி நேரம் லேட் ஆயிட்டது. காரணம் கேட்ட ஆசிரியரிடம் விஷயத்தைச் சொன்னேன். அவர் ரொம்ப சந்தோஷப்பட்டு, என் சக மாணவர்களுக்கு மத்தியிலே என் செயலைப் புகழ்ந்து பாராட்டினார். எனக்கு அந்தப் பெருமை போதுமே!

பி. லட்சுமி :


ரயிலோ, பஸ்ஸோ சன்னல் ஓரச் சீட்டில் உக்காந்து வெளியே வேடிக்கை பார்த்துட்டு வர்றதிலே எனக்கு ரொம்பவும் ஆசை.

அந்த வருஷம் மே மாசம் எங்க குடும்பத்தோடே டூரிஸ்ட் பஸ்ஸில்

கோளா டூர் போற வாய்ப்புக் கெடச்சது. எப்படியாச்சும் நமக்குச் சன்னல் ஓர சீட் கெடக்கணுமென்னு ஒரு வாரத்துக்கு முந்தியிருந்தே ரொம்ப ஆவலா எதிர் பார்த்துட்டிருந்தேன். நல்ல வேளை, நான் எதிர் பார்த்த மாதிரியே நான், என் அண்ணன், அக்கா மூணு பேருக்கும் ஒரே வரிசையில் மூணு சீட். நான் முந்திப் போய் சன்னல் ஓரம் உக்காந்துக்கிட்டேன். எங்களுக்கு எதிர் வரிசையில் ஒரு அம்மா, அவங்களோட ரெண்டு பிள்ளைங்க. ஆறு வயசுப் பையன், நாலு வயசுக் குட்டிப் பாப்பா! அவங்க ரெண்டு பேருக்குள்ளேயும் சன்னல் பக்கம் உட்கார ஒரே சண்டை. முதலில் ஓடி உக்காந்த தங்கச்சியை இழுத்து கீழே விட்டுட்டு அவன் உக்காந்துக்கிட்டான். உடனே அவள் 'ஓ'ன்னு கத்திக் கூப்பாடு போட ஆரம்பிச்சுட்டா. அவங்க அம்மா பையன் கிட்டே, ''பாப்பாவுக்கு அந்த எடத்தைக் குடுத்திடு''ன்னு சொன்னாங்க. அவனோ முடியாதுன்னு வீம்பு பண்ணான். உடனே அவங்களுக்குக் கோபம் வந்து, அவன் முதுகிலே ரெண்டு அடி கொடுத்து இழுத்து விட்டுட்டுத் தன் பெண்ணை அங்கே உக்காத்திட்டாங்க. பையனோ தேம்பித் தேம்பி அழ ஆரம்பிச்சுட்டான். அவனைப் பாக்கவே எனக்குப் பரிதாப மாகப் போச்சு.

'நாம ஆசைப்பட்டது மாதிரிதானே அவனும் ஆசைப் பட்டிருப்பான்? இப்போ நமக்கு இந்த எடம் கிடைக்காட்டி எவ்வளவு ஏமாந்தமா இருக்கும்?' - கொஞ்சம் யோசிச்சேன். நான் எழுந்திருச்சி ஆசையாப் பிடிச்சி வச்சிருந்த என் சீட்டை அவனுக்குக் கொடுத்துட்டு, அவனோட எடத்துலே -அவங்க அம்மா பக்கமா போயி உக்காந்துக்கிட்டேன். அவனுக்கு ஏகப்பட்ட சந்தோஷம். ஆனா எனக்குக் கொஞ்சம் கூட வருத்தமே இல்லை. அவங்க அம்மாவும் மத்தவங்களும் என்னைத் 'தங்கமான பிள்ளை' என்று பாராட்டினது ஒன்று போதாதா?

போட்டி, படங்கள் : குரு. சீனிவாசன்



ஒற்றுமை



ஒருமுறை ஒரு மனிதனின் கை, நாக்கு, பற்கள் எல்லாமாகச் சேர்ந்து மாநாடு நடத்தின. மாநாட்டின் முக்கிய நோக்கம் கை, நாக்கு, பற்கள் மட்டும் வேலை செய்கின்றன. ஆனால் வயிறோ ஒன்றும் செய்யாமல் நன்றாகச் சாப்பிட்டுச் சுகமாக இருக்கிறது. இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்பதே.

கை கூறியது, ''நான் உணவை எடுத்து வாயில் போடுகிறேன்.'' நாக்கு கூறியது, ''அதை நான், உள்ளே வாங்கிக் கொள்கிறேன்.'' பற்கள் கூறின, ''நாங்கள் மென்று உள்ளே தள்ளுகிறோம். ஆனால் வயிறோ எந்த வேலையும் செய்யாது அதனை உண்டு சுகமாக இருக்கிறது. நாமே எல்லா வேலைகளையும் செய்து அதற்கு பலனைத் தருகிறோம். இருந்தாலும் அது நமக்கு பதிலுக்குக் கூட ஒன்றும் தருவதில்லை. பிறகு எதற்காக நாம் அதற்கு உதவி புரியவேண்டும்?'' என்று அவை கேட்டுக் கொண்டன.

மூன்றுமாக யோசித்து, இறுதியில் ஒரு முடிவிற்கு வந்தன. மூன்று நாட்கள் வரை எதுவும் எந்த ஒரு வேலையையும் செய்யாமல் இருப்பது என்றும் வயிறு என்ன செய்கிறது என்று பார்க்கலாம் என்றும் முடிவு செய்து கலைந்தன.

அடுத்த நாள் மூன்றும் ஒன்றும் செய்யாமல் இருந்தன. இரண்டாவது நாளும் கழிந்தது. மூன்றாவது நாள் கை, கால்கள் சோர்ந்தன. நாக்கு வரண்டு விட்டது. அப்பொழுதுதான் எல்லாம் ஒரு உண்மையை உணர்ந்தன. வயிற்றுக்கு உணவளித்து கூடி வாழ்ந்து அதை ஆரோக்கியமாக வைத்திருந்தால்தான் எல்லோரும் வாழ முடியும் என்பதே அந்த உண்மை! இப்பொழுதெல்லாம் அவை மாநாடு நடத்துவதில்லை!

– ஆர். லக்ஷ்மி.

கேட்கட்டுமா டாக்டர்?

எஸ். கிருஷ்ணன், அசோகபுரம்.

? டாக்டர், எனக்குக் குறைந்த வயதுதான் ஆகிறது. ஆனால் வயிறு தொப்பை விழு கிறது. அதைக் குறைக்க என்ன செய்ய லாம்?

! அளவோடு உண்ண வேண்டும். கொழுப்புச் சத்துள்ள உணவுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். முக்கி யமாக நெய், வெண்ணெய், எண்ணெய், தேங்காய் போன்றவற்றை ஒதுக்க வேண்டும். மீன், முட்டை, இறைச்சி யைத் தவிர்க்க வேண்டும். அல்வா, பால்கோவா, ஐஸ்கிரீம் பக்கம் எட்டிப் பார்க்காதீர்கள். தினமும் தவறாமல் உடற்பயிற்சி செய்யுங்கள். நடத்தல், ஓடுதல், சைக்கிள் ஓட்டுதல், நீச்சல், ஸ்கிப்பிங் போன்றவை பலனளிக்கும்.



ஜெ.எ. காபிரியேல் சில்விஸ்டர், மணலூர்ப்பேட்டை.

? ஜலதோஷத்தைப் போக்கும் மருந்து எது, டாக்டர்?

! ஜலதோஷம் என்பது வைரஸ் கிருமிகளால் வரக் கூடியது. இதைக் குணமாக்கும் மருந்து இதுவரை கண்டு பிடிக்கப் படவில்லை. ஜலதோஷத்தால் ஏற்படும் பக்க விளைவுகளைப் போக்கு வதற்கு மருந்துகள் உண்டு. ஜலதோஷத் தின் போது மருத்துவர்கள் அவற்றையே பரிந்துரைக்கிறார்கள். பொதுவாக, நல்ல எதிர்ப்பு சக்தி உள்ள உடம்பில் ஜலதோஷம் ஓரிரு நாட்களில் தானா கவே சரியாகி விடக்கூடியதுதான்!



நிறக்குருடு உள்ளவர்கள்

ச. ஞானப்பிரகாசம், சிதம்பரம்.

? நம் உடலில் மண்ணீரல் என்ற உறுப்பு எங்குள்ளது? அதன் வேலை அல்லது பயன் என்ன, டாக்டர்?

! மண்ணீரல் (spleen) வயிற்றில், இடது பக்கத்தில், சிறுகுடலுக்குக் கீழே, கணையத்தை ஒட்டி, பின் முது கைச் சார்ந்து உள்ளது. இதன் பணிக ளாவன; 1. வெள்ளை அணுக்களை உற்




ண் தானம் செய்யலாமா?

பத்தி செய்து ரத்தத்திற்குக் கொடுப்பது. 2. நோய்க் கிருமிகளை ஒழிப்பது. 3. வயதான ரத்த சிவப்பணுக்களை அழிப்பது. 4. நோய் எதிர்ப்பணுக்களை உற்பத்தி செய்வது. 5. கருவில் இருக்கும் குழந்தைக்கு அனைத்து ரத்த அணுக்களையும் உருவாக்கித் தருவது.

சி. ஜயேந்திரன், தூத்துக்குடி.

? கால்சியம் உடலில் அதிகமாகச் சேர்ந்தால் என்ன கேடு விளைவிக்கும் டாக்டர்?



! உடல் அசதி, பசிக்குறைவு, கிறுகிறுப்பு, வாந்தி, குமட்டல், உடல் வலி போன்ற தொந்தரவுகள் தோன்றும். நீண்ட நாட்களாக கால்சியம் அளவுக்கு மீறி இருந்தால், சிறுநீரகப்பாதையில் கல் தோன்றும்.

கு. செந்தில் குமார், கல்பாடி., நா. சுரேஷ், திருச்சி - 18.

? 'ஆஸ்டியோ மலேசியா' என்றால் என்ன, டாக்டர்? இது எதனால் ஏற்படுகிறது?

! 'ஆஸ்டியோமலேசியா' (Osteomalacia) என்பது வைட்டமின் டி மற்றும் கால்சியம் பற்றாக்குறைவால் வரக்கூடிய ஒரு வியாதி. இது வளரும் பருவத்தில் உள்ளவர்களை அதிகம் பாதிக்கும். இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எலும்புகள் மெலியும்; பல



மில்லாமல் இருக்கும்; எலும்புகளைத் தொட்டாலே தாங்க முடியாத வலி உண்டாகும். லேசாகக் கீழே விழுந்தால் கூட பலத்த எலும்பு முறிவு ஏற்படும். நோய் முற்றியவர்களுக்குக் கை, கால் ஊனங்கள் உண்டாகும்.

சி. சுதா, ராணிப்பேட்டை - 3.

? சிறு வயதில் இறக்கும் குழந்தைகளின் கண்களை தானம் செய்ய முடியுமா? Colour Blindness உடையவர்கள் கண் தானம் செய்ய இயலுமா?



! தாராளமாக தானம் செய்யலாம், சகோதரி. கண்தானத்தால் கிடைக்கும் கண்ணிலிருந்து 'கார்னியா' (Cornea) என்னும் கருவிழியை மட்டுமே தனியாக எடுத்து மற்றவர் கண்களில் பொருத்துகிறார்கள். 'நிறக்குருடு' விழித்திரையில் வரக்கூடிய கோளாறு. கருவிழி அதனால் பாதிக்கப்படுவதில்லை. எனவே, அந்தக் கோளாறு உள்ளவர்களும் கண்தானம் செய்யலாம்!

டாக்டர் கு.கணேசன்

மழையும் கழுதையும்!



அமெரிக்க குடியரசுத் தலைவராக ஆபிரகாம் லிங்கன் இருந்தபோது அவருக்குப் பல பிரச்னை கள் ஏற்பட்டன. தேர்தல் சமயத்தில் அவர் வெற்றி பெற உதவி செய்த வர்களுள் பெரும்பாலோர் அவரை ஏதாவது பதவி கேட்டு நச்சரித்துக் கொண்டிருந்தனர். அதைப் பற்றிப் பொதுக் கூட்டத்தில் பேச நேர்ந்த போது, லிங்கன் ஓர் உவமைக் கதையைக் கூறினார்.

மன்னர் ஒருவர் வேட்டையாடப் போக எண்ணினார். தம் அமைச்சரை அழைத்து, ''நான் பரிவாரங்களுடன் வேட்டைக்குச் செல்ல விரும்புகிறேன். இன்று மழை பெய்யுமா?'' என்று கேட்டார்.

''இன்று மழை பெய்யாது மன்னா. என் பேச்சை நம்பி தைரியமாக வேட்டைக்குச் செல்லுங்கள்'' என்று உறுதி கூறினார் அமைச்சர். அதை நம்பி மன்னர் வேட்டைக்குப் புறப்பட்டார்.

மன்னர் காட்டை நெருங்கிக் கொண்டிருந்த சமயம், எதிரே ஒரு குடியானவன் தன் கழுதை மீது அமர்ந்து வந்து கொண்டிருந்தான்.

மன்னன் அவனை நோக்கி, "என்ன குடியானவரே, நான் வேட்டைக்குக் கிளம்பியிருக்கிறேனே...? இன்று மழை பெய்யுமா?" எனக் கேட்டார். அதற்குக் குடியானவன், "இன்று நிச்சயமாக மழை பெய்யும் அரசே. இன்று வேட்டைக்குப் போக வேண்டாம். உடனே திரும்பி விடுங்கள்" என்று கூறினான்.

குடியானவனின் பேச்சைப் பொருட்படுத்தாமல் மன்னர் காட்டுக்கு வேட்டையாடச் சென்றார். சற்றுத் தூரம் சென்றதும் வானம் கறுத்து, காற்றடித்து மழை பெய்தது! பயங்கரமான கன மழை! அதனால் மன்னர் தொப்பலாக நனைந்து போனார். பரிவாரங்களுக்கும் அதே கதி!

திரும்பி வரும் வழியில், மன்னர் அந்தக் குடியானவனை மீண்டும் சந்தித்தார்.

"மழை பெய்யும் என்று அவ்வளவு உறுதியாக எப்படிக் கூறினீர்கள்?" என்று மன்னர் வியப்போடு கேட்டார்.

அதற்குக் குடியானவன், "மழை பெய்யுமா பெய்யாதா என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால், என் கழுதைக்குத் தெரியும். அது தன் காதுகளை முன்பக்கமாக நீட்டிக் கொண்டால் அன்று மழை பெய்யும் என்ற உண்மையை நான் அனுபவத்தால் அறிந்து கொண்டேன்" என்றான்.

சலிப்போடும் ஏமாற்றத்தோடும் அரண்மனைக்குத் திரும்பிய மன்னன், உடனே அமைச்சரைப் பதவியிலிருந்து விலக்கினார். குடியானவனுடைய கழுதையை அமைச்சராக் கினார்!

ஆனால் அதற்குப் பிறகுதான் அந்த மன்னனுக்குப் பெரும் பிரச்னை ஏற்பட்டது. ஊரில் உள்ள எல்லாக் கழுதைகளும் தங்களுக்கும் அமைச்சரவையில் எதாவது ஒரு பதவி கொடுத்தாக வேண்டும் என நச்சரிக்கத் தொடங்கின என்று ஆபிரகாம் லிங்கன் கதையைக் கூறி முடித்தார்.

- விழி. ஒளி


எத்தனை வளையங்கள்? - போட்டி முடிவு

இதிலும் கூட ஆயிரத்து ஐநூற்று எண்பத்திரண்டு பேர் கலந்து கொண்டு ஒரு கை பார்த்திருக்கிறார்கள். ஆயிரத்து இருநூறு பேருக்கு மேல் தவறான விடை எழுதியிருக்கிறார்கள். சரியான விடை 37 வளையங்கள். வழக்கப்படி பரிசு பெற்றவர்களைத் தேர்ந்தெடுக்க குலுக்கல் முறையே கைகொடுத்தது.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. ஆலி. ஷபீக், கூத்தாநல்லூர்.
2. கே. சீனுவாசன், விழுப்புரம்.
3. ஆர். பாலு, சிங்கப்பெருமாள் கோவில்.
4. என். கல்யாணராமன், திருச்சி - 21.
5. கே. பி. தமிழ்ச்செல்வி, தருமபுரி.
6. அ. ராகவேந்திரா, சேலம் - 5.
7. கி. சகிதா, வேலாயுதம் PO, 639117.
8. எஸ். நிஷா, கோவை - 19.
9. சு. வெங்கடகணேஷ், ஆத்தூர்.
10. எஸ். கருணாமூர்த்தி, வலசு பாளையம்.
11. எம்.எஸ். இஸ்மாயில், தோப்புத் துறை P.O.
12. வ. குழந்தைவேல், ஒடுவன்குறிச்சி.
13. தெரிசா வர்கீஸ், திருவொற்றியூர்.
14. கே.எஸ். வெங்கடசுப்ரமணியம், சென்னை - 28.
15. பி. சுஜய்குமார், பட்டீஸ்வரம்.

போட்டியில் கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி. பரிசு பெற்றவர்களுக்கு பாராட்டுகள்.



கத்தி

அந்த இளந்துறவி சொன்னார், ''அம்மா! நான் அமெரிக்கா போகிறேன். என் பயணம் நலமாக அமைய வேண்டும். அங்கு எனது பணிகள் வெற்றிகரமாக நிறைவேற வேண்டும். அதற்கு நீங்கள் என்னை ஆசீர்வதிக்க வேண்டும் அம்மா...''

எதிரே அமர்ந்திருந்த அன்னை மௌனமாகவே இருந்தார். சற்றும் அசையவில்லை.

நீண்ட நேரத்துக்குப் பிறகு தன் பார்வையை விலக்கினார் அன்னை அந்த இளந்துறவியை நோக்கினார். அதற்காகத் தானே துறவியும் காத்திருந்தார்? எனவே, அவசரம் அவசரமாகத் தான் வந்துள்ள காரணத்தை மீண்டும் ஒரு தடவை மொழிந்தார்.

ஜானகி மணாளன்

''அம்மா! என்னைத் தாங்கள் ஆசீர்வதிக்க வேண்டும். நான் வெளிநாடு செல்கிறேன்...'' என்றார்.

ஆனால், அதன் பிறகும் கூட, அன்னை எந்தப் பதிலும் கூறவில்லை. அத் துறவி கூறியதைக் காதில் வாங்கிக் கொண்டதாக காட்டிக் கொள்ளவில்லை. வேறு ஏதோ சிந்தனையில் இருந்தார்.

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு வேறு விஷயங்களைப் பற்றிப் பேசத் தொடங்கி விட்டார் அன்னை.

''மகனே! எனக்கு நீ ஒரு உதவி செய்ய வேண்டுமே!'' என்றார் அன்னை.

''சொல்லுங்கள் தாயே! உடனே செய்து முடிக்கிறேன்...'' என்றார் துறவி.

''பக்கத்து அறைக்குப் போ... அங்கு கதவுக்குப் பின்னால் ஒரு கத்தி இருக்கும். அதை எடுத்து வந்து என்னிடம் கொடு...'' என்று பணித்தார் அன்னை.

'நாம் கேட்பது வெளிநாடு செல்ல ஆசீர்வாதம். ஆனால், அம்மா அது பற்றி ஒன்றுமே கூறாமல், 'போய் கத்தியை எடுத்து வா' என்கிறார்களே! கத்திக்கும் ஆசீர்வாதத்துக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்? ஒன்றும் புரியவில்லையே...' என்று குழம்பினார் துறவி.

> ''பக்கத்து அறைக்குப் போ. அங்கு கதவுக்குப் பின்னால் ஒரு கத்தி இருக்கும். அதை எடுத்து வந்து என்னிடம் கொடு!''

துறவி கத்தியை அன்னையிடம் நீட்டியவாறு, ''இந்தாருங்கள் அம்மா, தாங்கள் எடுத்து வரச் சொன்ன கத்தி...'' என்றார்.

காட்டிய குணம்!

அன்னை அதை மிகவும் கவனமாகப் பெற்றுக் கொண்டார்கள். உடனே "சென்று வா மகனே! உன் பயணம் நலமுடன் அமையட்டும். நம் பாரதத்தின் ஆன்மீகச் சிறப்புகளை, உலகின் எல்லாத் திக்குகளிலும் எட்டுமாறு வெற்றி முரசு கொட்டி வா மகனே...!" என்றவாறு, தனது திருக்கரத்தை உயர்த்தி, அந்த இளந்துறவியின் தலையில் வைத்து, ஆசி வழங்கினார்.


"நீண்ட நேரம் மௌனமாக இருந்த தாங்கள், நான் கத்தியை எடுத்து வந்ததும், காலம் தாழ்த்தாமல் ஆசி வழங்கி விட்டீர்களே...! அந்தக் கத்திக்கும் ஆசி வழங்குதலுக்கும் என்ன தாயே தொடர்பு? தயவுசெய்து அதன் விளக்கத்தை எனக்குக் கூறி அருள வேண்டும்..." என்று வேண்டினார் துறவி.

"சொல்கிறேன். கத்தியை நீ அதன் ஆபத்தான கூர்ப் பகுதியை உன்னை நோக்கி இருக்குமாறும், ஆபத்தில்லாத கைப்பிடிப் பகுதி என்னை நோக்கி இருக்குமாறும் பிடித்து எடுத்து வந்து என்னிடம் கொடுத்தாய்..... அதிலிருந்து, எந்த ஒரு செயலிலும் ஏற்படக் கூடிய தீமைகள் அனைத்தையும் நீ ஏற்றுக் கொண்டு, மற்றவர்களுக்கு நீ நன்மையேசெய்வாய் என்பதை நான் புரிந்து கொண்டேன்.... இந்த உயர்ந்த குணம் எல்லோருக்கும் வராதே...?"

துறவி மிகவும் அடக்கத்துடன், "அன்னையே! நான் இதையெல்லாம் யோசித்துப் பார்த்து ச் செய்யவில்லை அம்மா... கத்தியை நீங்கள் என் கையிலிருந்து பெறும் போது, அதன் கூரிய முனை தங்கள் கையில் குத்திவிடப் போகிறதே என்று அதன் கைப்பிடியை உங்கள் பக்கமாக வைத்து நீட்டினேன். அவ்வளவுதான்." என்றார்.

"உன்னை அறியாமலேயே பிறருக்கு நன்மை செய்யும் இயல்பான குணத்தை நீ பெற்றிருக்கிறாய். அந்த இயல்பு இன்னும் உயர்ந்தது மகனே...! அந்தக் குணம் ஒருபோதும் பிறருக்கு நீ தீங்கு செய்ய விடவே விடாது. நீ பிறவியிலேயே ஓர் உயர்ந்த மகான். உன் புகழ் ஓங்க வேண்டும்.! உன் பணி சிறக்க வேண்டும்!" என்று மீண்டும் ஆசி கூறி விடை கொடுத்தார் அன்னை.

அன்னை சாரதா தேவியிடம் இப்படி ஆசி பெற்று அமெரிக்கா சென்று, நமது நாட்டின் ஆன்மீகக் குரலை உலகறிய முழங்கிய அந்த இளந்துறவி யார் தெரியுமா? நமது பாரத அன்னையின் தவப் புதல்வர் எழுச்சி மிக்க வீர இளைஞர் சுவாமி விவேகானந்தர்தான்!





பறவைக்கும் மருத்துவமனை!



மனிதர்களுக்கு மட்டும்தான் நோய்கள் வருமா? அவர்களுக்கு மட்டும்தான் விபத்து நேருமா?

மனிதர்களைப் போலவே பறவைகளுக்கும் நோய்கள் வரும். அவையும் கூட விபத்தில் சிக்கிப் பறக்க முடியாது பாதிக்கப்படலாம். அவைகளை என்ன செய்வார்கள்?

நமது தலைநகர் டில்லியில் பறவைகளுக்கு என்றே மிகப்பெரிய விநோதமான மருத்துவமனை உள்ளது. மனிதர்களுக்கு படுக்கைகள் இருப்பது போல், இவைகளுக்கும் தனித் தனியான சிறுசிறு கூண்டுகள் உள்ளன. இவை உயரமானவை. நன்கு பறக்க முடியும்.

மிருகங்களால் தாக்கப்பட்ட பறவைகள், மனிதர்களால் சுடப்பட்ட பறவைகள், காற்றாடிகளால் சிறகு அறுபட்ட பறவைகள் என்று பலவகை விபத்துகளால் பாதிக்கப்படும் நூற்றுக்கணக்கான பறவைகள் இந்த மருத்துவமனைக்குத் தினமும் கொண்டு வரப்படுகின்றன. பெரிய மயில்களிலிருந்து, ஆந்தை, குருவிகள் வரை இங்கு கொண்டுவரப்படுகின்றன. கொண்டு வருகிறவர்கள் பெரும்பாலும் குழந்தைகள்! இந்தப் பறவைகளுக்கு இரண்டு வாரங்கள் வரை சிகிச்சை தரப்படுகின்றது. பாரிச வாயுவால் பாதிக்கப்பட்டவைகளுக்கும், கண் புற்று வந்த பறவைகளுக்கும் சிறப்பான கவனிப்புண்டு. ஆபரேஷன் செய்தும் குணப்படுத்துகி

மிருகங்களால் தாக்கப்பட்ட பறவைகள், மனிதர்களால் சுடப்பட்ட பறவைகள், காற்றாடிகளால் சிறகு அறுபட்ட பறவைகள் என்று நூற்றுக் கணக்கான பறவைகள் தினமும் இங்கு கொண்டுவரப்படுகின்றன....




றார்கள். ஊசியும் போடுகிறார்கள். வைட்டமின் சொட்டும் தரப்படுகிறது. சத்துமிக்க தானியங்களும், ஊட்டச் சத்துக்கான பழ வகைகளும் கொடுக்கப்படுகின்றன. இத்தனையும் காசு செலவில்லாது நன்கொடையாக என்றால் வியப்பாக இல்லை?

ஒவ்வொரு சனிக்கிழமையும் மருத்துவமனையின் கூரை திறக்கப்படுகிறது. குணமடைந்த பறவைகள் சுதந்திரமாகச் சிறகடித்து மகிழ்ச்சியோடு பறந்து போகின்றன.

இந்த மருத்துவமனையின் தலைவர் டாக்டர் ராஜு. இதை நடத்தி வருபவர்கள் சமண சமயத்தைச் சேர்ந்த நன்கொடையாளர்கள். ஆசியாவிலேயே மிகப் பெரிய, நவீன பறவை மருத்துவமனை இதுதான்!

- இந்திரா கோபாலன்



பசுவுக்குப் பசுமை தெரியுமா? பக். 64, ரூ 7.90, நெருப்புக் கோழி நெருப்பைத் தின்னுமா? பக். 60, ரூ 9.90, இசையைக் கேட்குமா பாம்பு? பக். 54, ரூ. 8.90 ரேவதி, மூன்று புத்தகங்களையும் வெளியிட்டோர்: பழனியப்பா பிரதர்ஸ், பீட்டர்ஸ் சாலை, சென்னை - 600 014.

கோகுலத்தின் கௌரவ ஆசிரியரால் கோகுலத்தில் தொடர்ந்து எழுதப்பட்டு கோகுலம் வாசகர்களால் பெரிதும் பாராட்டப் பெற்று வரும் அறிவியல் சிறுகதைகளின் தொகுப்பு. 'பசுவுக்குப் பசுமை தெரியுமா?' ஏற்கெனவே பரிசு பெற்றது.

மழலை அரும்பு, குழ. கதிரேசன், பக். 12, ரூ. 6.75 ஐந்திணைப் பதிப்பகம், 279, பாரதி சாலை, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

நர்சரி பள்ளிக் குழந்தைகளுக்கு ஏற்றதாக 12 நான்கு வரிப் பாடல்கள் இதில் உள்ளன. எல்லாம் பாடவும் வைக்கும். பாடிக் கொண்டே ஆடவும் வைக்கும். நெஞ்சை அள்ளும் சந்தங்கள். இதோ மேகத்தைப் பற்றி ஒரு மாதிரிப் பாடல் :

மேகம் நல்ல மேகம்;
மிதக்கும் நல்ல மேகம்!
தாகம் தீர்க்கும் மேகம்;
தவழ்ந்தே எங்கும் போகும்!

பெரிய பெரிய எழுத்து. சொக்க வைக்கும் கண்கவர் படங்கள். அயல்நாட்டுப் புத்தகத்தைப் பார்ப்பது போன்ற மயக்கம். பரிசளிக்க ஏற்ற தயாரிப்பு.

சாமர்த்திய நரி, பக். 80, ரூ 10/-, சாமர்த்தியக் கதைகள் - IV, பேராசிரியர் எ. சோதி, **பக். 84, ரூ 10/- இரண்டையும் வெளியிட்டோர் நன் மொழிப் பதிப்பகம், 75, அரவிந்தர் வீதி, புதுச் சேரி - 605 001.**

திறமை இருப்பின் எதையுமே நகைச்சுவையோடு கூறிப் பிள்ளைகளைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்க இயலும் என்பதற்கு ஆசிரியரின் இந்த இரு நூல்களும் போதும். சாமர்த்திய நரிக் கதையில் நல்ல ஓவியங்களும் இருக்கின்றன. இது போலவே சாமர்த்தியக் கதைகளிலும் செய்திருக்கலாம். படிக்க, சிரிக்க, சிந்திக்க ஏற்ற நூல்கள்.

கப்பலில் போன காண்டாமிருகம், பக். 54, ரூ. 8.80 அன்புள்ள அக்கா, பக். 44, ரூ. 7.50, அப்பளராஜா, பக். 50, ரூ 8.90 ரேவதி, மூன்றையும் வெளியிட்டோர் பழனியப்பா பிரதர்ஸ், பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14.

கோகுலத்தில் வெளிவந்து வாசகர்களால் பாராட்டப் பெற்ற சிறுகதைகளின் தொகுப்பு.

விந்தை, விநோதம், விசித்திரம், வாண்டு மாமா, வானதி பதிப்பகம், பக். 176, ரூ 28.00 தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17.

படிக்கும்போதே வாயைப் பிளந்து கொண்டு மூக்கில் விரல் வைக்கக்கூடிய ஏராளமான பரபரப்புச் செய்திகளை வாண்டுமாமா இந்த நூலில் தந்திருக்கிறார். செல்லப்பாவின் படங்கள் புத்தகத்திற்கு மேலும் சுவை கூட்டுகின்றன. படிக்கத் தொடங்கினால் முடித்து விட்டுத்தான் மற்ற வேலைகளைத் தொடங்க முடியும்!

அம்மா அப்பா செல்லப் பிள்ளை - நெல்லை. ஆ. கணபதி, பக். 78, ரூ. 10, ஆண்டாள் பதிப்பகம், சென்னை - 15.

வரவுக்கு ஏற்ப வாழாது, ஆசைகளுக்கு ஏற்ப படாடோபமாக வாழ முயன்று கடன் சுமையால் தத்தளிக்கும் பெற்றோருக்கு கை கொடுக்கும் கஷ்டம் தெரிந்த குழந்தைகளின் கதை. நல்ல நாடகமாகத் தரப்பட்டுள்ளது. உரையாடல்கள் செயற்கையாக இல்லாமல் இருப்பது நாடகத்திற்கு உயிரூட்டுகிறது. நாட்டிற்குத் தேவைப்படும் நல்லதொரு கருத்து நன்கு விளக்கப்பட்டுள்ளது. பொருளுள்ள படைப்பு.

அண்ணன் அல்ல, அப்பா - கவிஞர் செல்ல கணபதி, பக். 52, ரூ 9.90 பழனியப்பா பிரதர்ஸ், பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14.

குழந்தைக் கவிஞரால், சிறுவர் இலக்கியத் துறைக்கு சேர்க்கப்பட்டு முன்னணி வரிசையில் சிறப்பான இடத்தில் உள்ள செல்ல கணபதியின் அருமையான நாவல் இது. கோவை வானொலியில் தொடராக ஒலிபரப்பப்பட்டு, இலட்சக் கணக்கான சிறுவர்களை ஈர்த்த பெருமையும் இதற்கு உண்டு. தன்னம்பிக்கை மிக்க ஏழைச் சிறுவன் ஒருவன், கால் ஊனமுற்ற தன் தம்பியை முழு மனிதனாக்க மேற்கொள்ளும் தியாகங்கள், இடையே முட்டுக்கட்டையாக வரும் இடையூறுகள், இவற்றை எதிர்த்துப் போராடி இறுதி வெற்றியடையும் கதை.

இதோ ஓர் ஹீரோ! டாக்டர் பூவண்ணன், பக். 92, ரூ. 12. வானதி பதிப்பகம், தீனதயாளு தெரு, சென்னை - 17.

கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான ஆசிரியரின் முத்தான ஒன்பது கதைகளின் தொகுப்பு. கதைகள் எல்லாமே புதிய கதைக் களன்களைக் கொண்டு 'சஸ்பென்ஸ்' இழையப் பின்னப்பட்டவை. முதல் மூன்று கதைகள் ஏற்கெனவே கோகுலத்தில் வெளியாகி வாசகர்களின் பாராட்டைப் பெற்றவை. ''இதோ ஓர் ஹீரோ'' குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் ஜூன் 91 மாதத்திற்கான சிறந்த சிறுகதைக்கான பரிசைப் பெற்றது. வேறு என்ன சிறப்பு வேண்டும்? கதைக்களம், அமைப்பு, நடை மூன்றிலும் முன் மாதிரிக் கதைகளாக விளங்குகின்றன.

சிறுவர் நூல்களும், அறிவியல், பொது நூல்களும் மட்டுமே இந்தப் பகுதியில் மதிப்புரை செய்யப்படும். இரண்டு பிரதிகளை ஆசிரியர், கோகுலம், உங்கள் நூலகம் பகுதி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

ஊருக்கு ஒரு ஹைடர் ஜக்கு!

இது தப்பாச்சே!

★ "சுயமாக ஒளிரும் தங்க நட்சத்திரம்" கட்டுரை, நட்சத்திரங்கள் சுயமாக ஒளிர்வ தில்லை என்ற தவறான எண்ணத்தைத் தரும்படி உள்ளதே! குழந்தைகளின் நம்பிக்கை நட்சத்திரமான கோகுலத்தில் இதுபோன்ற தவறான கருத்துக்கள் வர லாமா? - நாகை. மீரான், கோவில்பட்டி சு. பத்மநாபன், தஞ்சை இரணியல் ராஜா.

(தவறுக்கு வருந்துகிறோம் - ஆசிரியர்)

ஆஹா, பாயசம்!

★ சந்திரிகாவின் பேட்டி பாயசம் குடித்த மாதிரி இருந்தது. கட்டுரையை இன்னும் இரண்டொரு பக்கங்களுக்கு வளர்த்தி ருந்தால் மேலும் சுவையான மாறுபட்ட செய்திகள் கிடைத்திருக்குமே? - வெலிங் டன் ஜி. எஸ்தர், காரைக்குடி மு.ராஜ வேலன், வேப்பத்தூர் எம். சுபாஷன், உதகை. எம். முன்னி.

செம ஜோர்!

★ 'அபிராமியின் அட்டிகை' தொடக்கமே வெகு ஜோர்! அடுத்து என்ன வரும் என்ற ஆர்வத்தைத் தூண்டுவதாக உள்ளது. - பொன்மலை வெ. ரத்னம், திருச்சி எம். மணிகண்டன், உடுமலை. கு. காயத்ரி, நாமக்கல் க. சபரிமாலா, நெய்வேலி. து. சின்ன முத்து.

என்ன துணிச்சல்!

★ 'குருவாவது வரதாவது!' - காலத்திற்கு ஏற்ற அவசியமான படைப்பு. வெளியிட்ட துணிவுக்கு எத்தனை பாராட்டினாலும் தகும்! - ஸ்ரீவில்லிபுத்தூர் ராமநாராயணன், கோவை. சந்திரிகா, கழுகுமலை, பூ. மார்க் கண்டன், கண்டனூர் மு. ஜோசப், காரை. மு. இப்ராஹீம்.

அசத்தும் ஜக்கு

★ ஹைடர் ஜக்கு - அசத்துகிறது. ஊருக்கு ஒரு ஹைடர் ஜக்குவும், ராமுவும் இருந்தால் மரங்களும் காடுகளும் காப்பாற்றப்படும் - வெள்ளிமலை சுந்தரபாபு, கரூர். தொ. சொக்கலிங்கம், காங்கேயம், வ. பொன் னாத்தா, சிதம்பரம். வெ. சிவக்கொழுந்து.

சூப்பர்!

★ 'ரங்கனுக்கு உதவிய தங்கப் பறவை' சித்திரக் கதை சுவையாக இருந்தது. எல்லோரும் விரும்பிப் படித்தோம்! - முன்னிபாளையம் மு. ரத்னவேலு, சிங்க நல்லூர் பெ. காந்திமதி, பட்டிவீரன் மலை தேவநாயகி, அண்ணாமலை நகர் பொ. சிவகாமி.

சுவையரங்கம்

★ அறிவியல் தகவல்களும், கவியரங்கமும் மிகவும் சுவையாக இருந்தன. எத்தனை பாராட்டினாலும் தகும் - சாத்தூர் மு. நல்ல பெருமாள், முத்துப்பட்டு பூ. பட்டாபி, தென்காசி கு. கனகசபை, வாளாடி. க. முத்துசாமி.

எத்தனை வகை!

★ வகைவகையான போட்டிகளை வைப்ப தில் சாதனை படைக்கிறது கோகுலம்! - அடையார் சொ. பெரியதம்பி, பூண்டி. மு. தேவசகாயம், வண்டலூர் எஸ். ராஜப்பா மற்றும் பலர்.

அறிவியலுக்கே ஜே!

★ ரேவதியின் அறிவியல் கதைகளை பள்ளி அறிவியல் வகுப்பில் எங்கள் ஆசிரியர் உரக் கப் படிக்கச் சொல்லி எல்லோரையும் கேட்க வைக்கிறார்! - குகை. மு. எத்திராஜன், சாலாபுரம் எம். கணேசன், பரங்கிப்பேட்டை கு. சண்முகசுந்தரம்.

பாரதன் அச்சகத்தில் பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு
அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 360/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் ரூ. 180/-.


என் மனம் கவர்ந்த நண்பர்கள் இவர்களே.
என்றென்றும் நான் பாதுகாப்பேன் இவர்களை.
கோரஸ் வழங்கும் பளிச்சென்ற அழகிய வண்ணங்
களைக் கொண்டு கண்ணைக் கவரும் படம் ஒன்றை
பெயிண்ட் செய்யுங்கள். பொக்கிஷம் போன்று என்றென்றும் அதை
பாதுகாத்திடுங்கள். போஸ்ட்டர் கலர்கள், வாட்டர் கலர்கள், வேக்ஸ்,
ஃப்ளோரஸன்ட், ப்ளாஸ்டிக் க்ரேயன்கள் என களஞ்சியமாகக் குவிந்துள்ள ஆர்ட்
மெட்டீரியல்களிலிருந்து வேண்டியவற்றை தேர்ந்தெடுங்கள். போஸ்ட்டர்கள்,
ர்த்டே கார்டுகள், க்ரீட்டிங் கார்டுகள் மற்றும் ஸ்கூல் ப்ராஜக்டுகளை தயாரியுங்கள்.
kores
WAX CRAYONS
NON TOXIC
kores
WATER COLOURS
kores
FLUORESCENT CRAYONS
kores
kores
Poster Colour
கோரஸ்
kores
STUDENTS'
CAKES
இலவசம்!
வண்ணம் தீட்டுவதற்கென கண்கவர் வரை படம்.
உங்கள் பெயர் மற்றும் முகவரி தெளிவாக
எழுதப்பட்ட (ஆங்கிலத்தில் எழுதினால் உசிதம்)
1 ரூபாய் தபால் உறையை இம் முகவரிக்கு
அனுப்பவும்: கோரஸ் (இந்தியா)லிட்.,
தபால் பெட்டி 6558, பம்பாய் 400 018.
காரஸ் ஸ்டுடன்ட்ஸ் ஆர்ட் மெட்டீரியல் கொண்டு வண்ண மயமான உலகைப் படைத்திடுங்கள்
AKA 593-TM

REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka

